Volume : 7 Issue - 2

பிப்ரவரி 2014

# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

ரபியுல் ஸானி 1435












# நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?

தொடர் – 7



**9/11/2001** நிகழ்வு அமெரிக்கா தன்னை தானே தாக்கிக் கொண்ட நிகழ்வு. இஃது, இச்செயல் நாகரிக உலகில் ஹிட்லர் காலம் முதல் இப்போது வரை உலகில் மனசாட்சி யற்ற எல்லா நாடுகளிலும் அரசியல் எதிரி களை அழித்திடவும், இன மத சிறுபான்மை யினரை ஒடுக்கிடவும் அரங்கேறவே செய்கிறது.

9/11/2001 நிகழ்வு நடந்தவுடன் தீவிர வாதத்திற்கெதிரான போர் என்று கொக்க ரித்தார் செருப்படி ஜார்ஜ்புஷ். பொய்க் கதைகள் கூறி, ஆப்கானிஸ்தான் மீதும், ஈராக் மீதும் போர் தொடுத்தார். இலட்சக்கணக் கானோரை கொலை செய்தார். ஆப்கானிஸ் தானில் இருந்தும், ஈராக்கில் இருந்தும் போர்க் கைதிகள் என்ற பெயரில் ஏராளமான அப்பாவிகள் வேட்டையாடப்பட்டனர். பிரிட்டன், ஆஸ்திரேலியா மட்டுமல்ல.. பாகிஸ்தானும் கூட தனது குடிமக்களை அமெரிக்காவிடம் ஒப்படைத்து தனது செஞ்சோற்றுக் கடனை தீர்த்தது.

இவ்வாறு பிடிபட்ட அப்பாவிகள் அனைவரையும் சித்ரவதை செய்திட அமெரிக்கா உருவாக்கி வைத்திருந்த சிறைக் கூடம் தான் கியூபாவில் உள்ள குவாண் டனாமா சிறைச்சாலை.

“நாகரிக உலகின் நரகம்” என்று மனித உரிமை ஆர்வலர்களால் வர்ணிக்கப்பட்ட அச்சிறைச்சாலையில், முஸ்லிம் கைதிகளுக்கு எதிராக அடிமைக் காலத்தை நினைவு படுத்திடும் சித்ரவதைகள் அரங்கேற்றப் பட்டன.

“தனிமைச் சிறை, வாட்டர் போர்டிங் (Waterboarding) என்ற பெயரில் தண்ணீரில் ஒருவரை 100 தடவைக்கும் மேலாக முக்கி எடுத்தல், உடைந்த கண்ணாடியால் கீறி கிழித்தல், முள் கம்பியால் குத்துதல், சிகரெட் சூடு, கான்கிரிட்டை தலையில் மோதச் செய்தல், சுய உணர்வை இழக்க வைத்தல், இரவில் தூங்க விடாமல் தடுத்தல், பலவந்த மாக பாலியல் வன்முறைக்கு உட்படுத்துதல், மன அழுத்தத்தை உண்டாக்குதல், நீண்ட நேரம் முகமுடி அணிவித்து வைத்தல், கண்களில் பெப்பர் ஸ்பிரே (Pepper spray)-யை அடித்து கண் தெரியாமல் ஆக்குதல், கலாச்சார ரீதியாக அவமானப்படுத்துதல், மத அடக்குமுறை, போதை ஊசி போடுதல், பலவந்தமாக போதை பொருளை உட்கொள்ள வைத்தல், முஸ்லிம் கைதிகளின் கண்ணெதிரே இஸ்லாத்தை இழிவுபடுத்தி பேசுதல், திருக்குர்ஆனை கிழித்து மிதித்தல், தாங்க முடியாத அதிகபட்ச வெப்பநிலையில் நீண்ட நேரம் இருக்க வைத்தல், கண்களையும், கை கால்களையும் கட்டி சுடப்பட்ட பொடி கற்களின் மீது நீண்ட நேரம் அமர வைத்தல், ஆண் கைதிகளிடம் பெண் அதிகாரிகளின் ஆபாச பேச்சு, ஆபாச சைகைகள், பாலியல் அத்துமீறல்கள், மாதவிடாய் பஞ்சினை முகத்தில் வீசுதல், மாதவிடாய் இரத்தத்தை தேய்த்தல்” ஆகியன குவாண்டனாமா சிறைச்சாலையில் நடந்த மனித உரிமை மீறல்களில் வெளியுலகுக்கு தெரிந்தவை.

**டெர்ரி ஹால்ட் புருக்ஸ்**

நாகரிக உலகின் நரகமான இச்சிறைச் சாலைக்கு காவலர் (guard) பணிக்கு சென்றவர் அமெரிக்காவைச் சேர்ந்த டெர்ரி ஹால்ட் புருக்ஸ்(Terry Holdbrooks) (பிறப்பு ஜூலை 7 1983) அரிசோனா மாநிலத்தில் உள்ள போனிக்ஸ் (Phoenix) நகரத்தில் பிறந்த இவர், பெற்றோ ருக்கு ஒரே பிள்ளை. இவருக்கு ஏழு வயதான

பொழுது பெற்றோர் விவகாரத்து பெற்று பிரிந்தனர்.

தாத்தா பாட்டியின் பராமரிப்பில் வளர்ந்த இவர், பெற்றோர் அரவணைப்புக்கு அதிகம் ஏங்கினார். வறுமையும், தனிமையும் சிறு வயதிலேயே இவரை பாதித்தன. இதனால் விரக்தியுற்று, இறை நம்பிக்கையற்ற நாத்திகனாக மாறிப் போனார். ஏனைய அமெரிக்க இளைஞர்களைப் போல மது வுக்கு அடிமையானார். ராக் இசை பிரிய ரானார்.

2001-ம் ஆண்டு பட்டப் படிப்பை முடித்தவுடன் அமெரிக்க ராணுவத்தில் சேர முடிவெடுத்தார். அப்போது அவருக்கு 19 வயது தான். வெளி நாடுகளுக்கு செல்லலாம், சுற்றிப் பார்க்கலாம் என்ற எண்ணத்தில் தான் ராணுவத்தில் அவர் சேர்ந்தார்.

அமெரிக்க மிலிட்டரி போலீஸ் கம்பெனியின் 23வது பிரிவில் சிப்பாய் வேலைக்கு சேர்ந்த அவரிடம் ராணுவத்தில் சேரத் தேவையான எல்லா தகுதிகளும், அனுபவங்களும் இருக்கவே செய்தன.

ஒரு நல்ல அமெரிக்கனாகவும், நல்ல ராணுவ வீரனாகவும், ஒரு நல்ல மனித னாகவும் ராணுவத்தில் பணியாற்றினால் சாதிக்க முடியும் என்று அவர் நம்பினார்.

இத்துணை கனவுகளுடன் ராணுவத்தில் சேர்ந்த டெர்ரி, குவாண்டனாமா சிறைக்கு காவலர் (guard) பணிக்கு அனுப்பப்பட்டார்.

காவலர் பணிக்கான பயிற்சி இரண்டு வார காலம் அவருக்கு தரப்பட்டது. பயிற்சியின் போது 9/11/2001 தாக்குதலில், இரட்டைக் கோபுரம் சரிந்த வீடியோ அடிக்கடி காட்டப்பட்டது. அத்துடன் இக்கைதிகள் அனைவரும் பின்லேடனின் ஆட்கள், அவருடன் பணியாற்றியவர்கள். மகா கெட்டவர்கள். உலகை அழிக்கும் தீய சக்திகள். எக்காரணம் கொண்டும் இவர் களிடம் அன்பாக நடக்கக் கூடாது. இவர் களுடன் பேசவும் கூடாது. ஏனெனில், வாய்ப்பு கிடைத்தால் உன்னையும் கொன்று விடுவார்கள் என்றும்; இஸ்லாம் குறித்தும் எதுவும் தெரிந்து கொள்ளவும் கூடாது என்றும் கூறப்பட்டது.

பயிற்சிக்கு பிறகு பணியில் சேர்ந்தார் டெர்ரி. கைதிகளை கண்காணித்தல், விசாரணை அறைகளுக்கு அவர்களை அழைத்துச் செல்லுதல், சிறைகளை சுத்தமாக வைத்திருத்தல், குப்பை பொறுக்குதல் ஆகியன டெர்ரிக்கு தரப்பட்ட பணிகள். சிறை நிர்வாகம் தந்த இப்பணிகளை செவ்வனே செய்தார் டெர்ரி. இந்நிலையில், பணியின் போது முஸ்லிம் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட சித்ரவதைகளை பலமுறை நேரில் அவர் காண நேர்ந்தது.

அவ்வளவு சித்ரவதைகளுக்கு பின்பும் அவர்கள் கண்ணியமான பண்பாளர்களாக இருப்பதைப் பார்த்து அவருக்கு ஆச்சரியம் மேலிட்டது.!

அதே நேரத்தில் தனது சக பணியாளர் களின் கெட்ட நடத்தைகளையும் உற்று நோக்கினார். குடித்து கும்மாளமிடுதல், ஆபா சமாக பேசுதல், பாலியல் விபச்சாரிகளுடன் கூத்தாடுதல், போதைப் பொருள் உப யோகித்தல் போன்ற அவர்களின் செயல் பாடுகளைப் பார்த்தார்.

தீய நடத்தைகளுடன் வாழும் இவர்கள் எங்கே? அனைத்து துன்பங்களை அனு பவித்தும் நற்பண்பாளர்களாக வாழும் அக்கைதிகள் எங்கே?

எந்நேரமும் கைதிகளிடம் மதவெறி யுடன் நடக்கும் இக்காவலர்கள் எங்கே? தம்மை அடித்து துன்புறுத்தும் அமெரிக்கர் களிடமும் மத நல்லிணக்கத்துடன் நடக்கும் அம்மாண்பாளர்கள் எங்கே?

யோசித்தார்..விடை தேடினார். முடிவில் அக்கைதிகளிடமே கேட்டு விட வேண்டியது தான் என்று முடிவு செய்தார்.

கைதிகளின் அறைக்கு சென்று அவர் களிடம் கேட்டார். இஸ்லாம்தான் அதற்கு காரணம் என்றனர் அவர்கள்.

இத்துணை காலம் தீவிரவாத மதம் என்று நம்பியிருந்த அந்த இஸ்லாமா? வியப்பு மேலிட்டது அவருக்கு. நம்பவே முடிய வில்லை அவரால்.

தொடர்ந்து இரவு வேளைகளில் சக தோழர்களுக்கு தெரியாமல் கைதிகளின் அறைகளுக்கு சென்று இஸ்லாம் தொடர் பான தனது சந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்றார். முடிவில் கைதிகளில் ஒருவரான பிரிட்டன் வாழ் மொராக்கோ நாட்டவரான அஹ்மத் ராஷிதி (Ahmed Errachidi) என்பவரின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவினார்.

**நான் ஏன் முஸ்லிமானேன்?**

இஸ்லாத்தை ஏற்றது குறித்து தி கார்டியன் (The Guardian) ஆங்கில நாளிதழின் சார்பில் தம்மிடம் நேர்காணலுக்கு வந்த சர்பராஸ் மன்சூர் (Sarfraz Manzoor) இடம் டெர்ரி கூறியதாவது,

2003 ம் ஆண்டு கோடைக்காலத்தில் குவாண்டனாமா சிறைச்சாலையில் காவலர் பணிக்கு வந்த சமயத்தில் நான் கடவுள் நம்பிக்கையற்ற நாத்திகனாகவே இருந்தேன். வலது கையில் பச்சை குத்தியிருந்த எனக்கு அப்போது மதுவும், ராக் இசையும் மிகவும் பிரியமானவை.

பணியில் சேரும் முன்பு கைதிகளை எவ்வாறு கையாள வேண்டும்? என்பதற்கான பயிற்சி என் போன்ற சக காவலர்களுக்கு இரண்டு வார காலம் தரப்பட்டது.

பயிற்சி காலத்தில் இரட்டை கோபுரங்கள் இடிந்த இடமான ஜீரோ கிரவ்ன்ட் (Ground Zero) பகுதிக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். அத்துடன் இரட்டைக் கோபுரம் இடிந்து சரியும் வீடியோவும் எங்களுக்கு அடிக்கடி காட்டப்பட்டது.

மேலும் கைதிகள் குறித்து எங்களிடம் இவ்வாறு சொல்லப்பட்டது. இவர்கள் அனைவரும் ஒசாமா பின்லேடனின் ஆட்கள். பின்லேடனின் டிரைவர்கள், பின்லேனின் சமையல்காரர்கள் என இவர்கள் அனைவருமே அவரிடம் பணிபுரிந்தவர்களே. இவர்கள் மகா கெட்டவர்கள். இவர்களிடம் கிஞ்சிற்றும் கருணையுடன் நடக்கக்கூடாது. ஏனெனில், வாய்ப்பு கிடைத்தால் இவர்கள் உங்களையும் கொன்று விடுவார்கள்.

மேலும் இஸ்லாம் குறித்து எதனையும் தெரிந்து கொள்ளக்கூடாது என்றும் எங்களுக்கு கூறப்பட்டது.

பயிற்சி காலம் முடிந்து பணியில் சேர்ந்தேன். நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் சிறையினுள் சிறுவன் ஒருவனை பார்த்தேன். அவனுக்கு 16 வயது தான் இருக்கும். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

இவனா தீவிரவாதி? தீவிரவாதம் என்றால் என்ன? என்பதாவது இவனுக்கு தெரியுமா?

இவனுக்கு உலகமே தெரிந்திருக்க வாய்ப்பில்லை. கடலைக் கூட இவன் நேரில் பார்த்திருக்க மாட்டான். ஒருகணம் யோசித்தேன். ஏதோ தவறு நடக்கின்றது என்பது புரிந்தது.

இதனால் கைதிகளிடம் சக காவலர்களைப் போன்று கடுமையாக நடப்பதை தவிர்த்தேன். இது கைதிகளுக்கு மத்தியில் நல்ல காவலர் (Nice Guard) எனும் நற்பெயரை பெற்றுத் தந்தது.

என்னுடன் பணியாற்றிய சக காவலர்களுக்கு இது பிடிக்கவில்லை. ஒரு கட்டத்தில் என்னிடம் அவர்கள் கேட்கவும் செய்தார்கள் நீ ஏன் கைதிகளிடம் கடுமையாக நடப்பதில்லை.?



*ஒருவர் என்னைப் பார்த்து கேட்டார். ''டெர்ரி! நாங்கள் எங்கு செல்கிறோம் என்று உனக்கு தெரியுமா? தாலிபான்களின் மண்டை ஓட்டில் மது அருந்தச் செல்கிறோம். உனக்குத்தான் அவர்கள் ரொம்ப வேண்டியவர்களாயிற்றே!''*

நான் எந்த பதிலையும் அவர்களுக்கு தரவில்லை. உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை கண்மூடித்தனமாகப் பின்பற்றும் அவர்களுக்கு என்ன சொன்னாலும் புரியாது என்பதால் பதிலளிப்பதைத் தவிர்த்தேன்.

எனினும் தொடர்ந்து அவர்கள் என்னை வம்புக்கிழுத்தனர். ஒரு சில சந்தர்ப்பங்களில் கைகலப்பாகவும் அது மாறியுள்ளது.

ஒருமுறை சக காவலர்கள் மொத்தமாக என்னைக் கடந்து சென்றார்கள். அவர்களில் ஒருவர் என்னைப் பார்த்து கேட்டார். "டெர்ரி! நாங்கள் எங்கு செல்கிறோம் என்று உனக்கு தெரியுமா?'' பின்பு அவரே சொன்னார். "தாலிபான்களின் மண்டை ஓட்டில் மது அருந்தச் செல்கிறோம். உனக்குத்தான் அவர்கள் ரொம்ப வேண்டியவர்களாயிற்றே!"

எல்லோரும் சிரித்தனர். எனக்கு கோபம் பீறிட்டது. அது இன்னொரு கைகலப்புக்கு வழிகோலியது. நான் யோசித்துப் பார்த்தேன். இந்த காவலர்களிடம் மது அருந்துதல், புகை பிடித்தல், புகையிலை மெல்லுதல், செக்ஸ் என எல்லா விதமான தீய செயல்களும் உள்ளன. அத்துடன் இவர்கள் மிக மோசமான மதவெறியர்கள்.

இவர்களின் தீய நடத்தைகளை எப்படி கைதிகள் சமாளிக்கிறார்கள்? நாம் எப்போது சென்று பேசினாலும் புன்னைகை தவழும் முகத்துடன் நம்மிடம் பேசுகிறார்களே எப்படி?

இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இதற்கான விடைகளைத் தெரிந்து கொள்ள விரும்பினேன். என்னைப் பொருத்தவரை குவாண்டனாமாவுக்கு வரும் வரை இஸ்லாம் குறித்து எதுவும் எனக்கு தெரியாது.

இப்போது இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ளும் ஆவல் எனக்கு ஏற்பட்டது. எப்படியாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தேன். கைதிகளிடம் பேசத் தொடங்கினேன். அரசியல், நன்னெறிகள், ஒழுக்க மாண்புகள், மாறுபட்ட அவர்களின் கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறைகள் என எல்லாவற்றையும் அவர்களுடன் விவாதித்தேன்.

ஒரு கட்டத்தில் இப்பேச்சுக்கள் எனக்கு தரப்பட்ட தர்பிய்யா வகுப்பு (ஒழுக்கவியல் பாடம்) ஆக மாறியது. விளைவு இஸ்லாத்தை தெரிந்து கொள்ளும் ஆர்வம் இன்னும் அதிகமானது.

இஸ்லாத்தை தெரிந்து கொள்ளவும், கைதிகளிடம் பேசவும் தினமும் ஒரு மணி நேரத்திற்கு குறையாமல் நேரம் ஒதுக்கினேன். என்னுடன் உரையாடியவர்களில் முக்கியமானவர்கள் திப்டன் திரி (Tipton Three) என்று பிரபலமான இங்கிலாந்து நாட்டின் சேன்ட்வெல் (Sandwell) மாவட்டத்திலுள்ள திப்துன் எனும் ஊரைச் சேர்ந்த மூன்று முஸ்லிம் இளைஞர்கள்.

ருஹல் அஹ்மது, ஆசிஃப் இக்பால், ஷஃபீக் ரசூல் எனும் பெயர்கள் கொண்ட அவர்கள் மூவரும் நண்பர்கள். இங்கிலாந்தில் வசித்த அவர்கள் ஆப்கானிஸ்தானில் பிடிபட்டதாக கூறி குவாண்டனாமா சிறையில் அடைக்கப்பட்டனர். இரண்டு ஆண்டுகள் கழித்து 2004 ல் போதிய ஆதாரமில்லாததால் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலைக்கு பிறகு குவாண்டனாமா சிறையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து இவர்கள் தந்த பேட்டி, அமெரிக்காவுக்கு எதிராக இங்கிலாந்தில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது. பிரபல இங்கிலாந்து திரைப்படத் தயாரிப்பாளர் மிஷெல் வின்டர் பூட்டம் (Michael Winterbottom) இம்மூவர் கைது செய்யப்பட்டதில் உள்ள மர்மங்கள் தொடர்பாக தி ரோடு டு குவாண்டனாமா (The Road to Guantanamo) எனும் திரைப் படத்தையே தயாரித்து 2006-ல் வெளியிட்டார். அது அமெரிக்காவின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தியது.

இம்மூவரிடமும் நான் பேசினேன். அடுத்து என்னுடன் உரையாடியவர்களில் முக்கியமானவர் பிரிட்டன் வாழ் மொராக்கோ நாட்டவரான அஹ்மத் ராஷிதி என்பவர்.

18 ஆண்டுகள் சமையல்காரராக பிரிட்டனில் வேலை பார்த்த இவர், அல்காயிதா முகாமில் பயிற்சி பெற்றதாக கூறி குவாண்டனாமா சிறையில் அடைக்கப் பட்டிருந்தார். (இவரும் போதிய ஆதார மில்லாததால் பின்னர் விடுவிக்கப்பட்டார்)

இவர்களுடன் நான் பல நாட்கள், பல மணி நேரங்கள் பேசியுள்ளேன். புத்தகங்கள், மியூசிக், தத்துவம் என எல்லாவற்றையும்

விவாதித்துள்ளேன். சில சமயங்களில் இஸ்லாம் பற்றிய எங்களின் பேச்சு இரவு முழுவதும் நீடித்துள்ளது.

இவ்வாறே ஆறு மாத காலம் நீடித்தது. கடைசியில் இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்க முடிவு செய்தேன். அல்லாஹ்வின் மகத்தான அருளால் அந்நிகழ்வு நடந்தேறவே செய்தது.

2003 ம் ஆண்டு டிசம்பர் 23 ந் தேதி நள்ளிரவில் அஹ்மத் ராஷிதி-இன் முன்னிலையில் நான் ஷஹாதத் கலிமா கூறி இஸ்லாத்தை ஏற்றேன்.

மது அருந்துவதையும், மியூசிக் கேட்பதையும் நிறுத்திய நான், ஐந்து நேர தொழுகைகளை நிறைவேற்றத் தொடங்கினேன்.

எனினும் சிறையினுள் எனது சக பாதுகாவலர்களுக்குத் தெரியாமல் தொழுவது எனக்கு மிகுந்த சிரமமாக இருந்தது. அவர்களுக்குத் தெரியாமல் தொழுவது ஒன்றும் சுலபமானதல்ல.

தெரியாமல் தொழுகையை நிறைவேற்ற தனி இடம் தேடி நான் ரொம்ப அலைய வேண்டியதிருந்தது. எங்கே சென்றாய்? என்று சக காவலர்கள் கேட்டால் பாத்ரூம் சென்றிருந்தேன் என்று கூறி சமாளிப்பேன்.

இது எனக்குக் கடும் நெருக்கடியை தந்தது. கைதிகள் கூட தொழுகையை சாதாரணமாக நிறைவேற்றுகிறார்கள். என்னால் அவ்வாறு முடியவில்லையே..! என்று மனம் நொந்தேன்.

கைதிகளை விட நான் மோசமாக இருப்பதாக உணர்ந்தேன். அத்துடன் கைதிகளுக்கு நடந்த சித்ரவதைகளும் என்னை உறுத்தின. 50 டிகிரி வெப்பநிலையிலும், 60 டிகிரி வெப்ப நிலையிலும் கைதிகளை அடைத்து கொடுமைப்படுத்தியது எனக்கு மன உளைச்சலைத் தந்தது.

நான் விரும்பி சேர்ந்த ராணுவ வேலையை வெறுக்கத் தொடங்கினேன். இறுதியில் குவாண்டனாமா சிறைக் காவலர் வேலையை ராஜினாமா செய்த நான், அடுத்த சில நாட்களில் அமெரிக்க ராணுவத்தை விட்டே விலகினேன்.

முஸ்தஃபா அப்துல்லாஹ் எனும் அழகிய பெயரில் வாழும் இவ்வாலிபர் அமெரிக்காவில் இஸ்லாமிய தஃவா பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

தலையில் கருப்புத் தொப்பி, அடர்த்தியான தாடி, கழுத்தில் இருந்து கரண்டைக் கால் வரையிலான நீண்ட பாரம்பரிய அங்கி என இஸ்லாமிய கலாச்சாரத்தில் பற்றுடன் வாழும் இவ்வாலிபர், தமது குவாண்டனாமா நினைவுக் குறிப்புகளைத் தொகுத்து ட்ரைட்டர் (Traitor?) எனும் நூலை வெளியிட்டுள்ளார். அன்னாரை அல்லாஹ் திருப்திப் படுவானாக!

Source : Traitor? by Terry Holdbrooks
Inside the Wire by Erik Saar and Viveca Novak

தி கார்டியன் ஆங்கில நாளிதழ் அக் 7 2009 நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் ஜுன் 21, 2005 வாஷிங்டன் போஸ்ட் நாளிதழ் மே 7, 2004

CNN's Wolf Blitzer interview with Dick Cheney june 2005

Tipton Three விக்கிபீடியா வலைப்பக்கம்

குவாண்டனாமா விக்கிபீடியா வலைப்பக்கம்

**இறைவனின் அழகிய வழிகாட்டுதல்**

## அனைவருக்கும்!

மனிதன் இந்த உலகில்
எப்படி வாழ வேண்டும்?

இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ்மொழிபெயர்ப்பைப் பெற்றிட கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்**
52/1, மண்ணடி தெரு,
கோனிகா கலர் லேப் பில்டிங்
4வது மாடி, அறை எண் 7,
மண்ணடி, சென்னை-1.

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கு அல்ல.**

# நபீலா... இன்னொரு மலாலா?



**பாகிஸ்தானின்** நிர்வாகத்தின் கீழிருக்கும் அதே 'சுவத்' பகுதியைச் சார்ந்த பெண் நபீலா. வயது 9. அவருடைய தந்தை அப்துல் ரஹ்மான். மலாலாவும் இதே சுவத் பகுதியைச் சார்ந்தவள்தான்.

மலைப்பாங்கான இடத்தில்தான் நபீலா, நபீலாவின் பாட்டி, தந்தை எல்லோரும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

மலைப் பகுதியில் ஓர் வசதி என்னவெனில், அன்றைக்குத் தேவையான காய்கறிகளை அன்றைக்கே பறித்துக் கொள்ளலாம்.

அன்றைக்கும் நபீலா மலையின் மேலும் கீழும் ஓடி ஓடி காய்கறிகளையும் தாழ்வாகத் தொங்கி என்னை ஏன் பறிக்க மாட்டாய் எனக் கேட்பது போல் அழைத்த கனிகளையும் பறித்துக் கொண்டிருந்தாள்.

காய்கனிகளைப் பறித்துக் கொண்டிருந்த அவளை அவளது பாட்டி ஓலமிட்டு, ஓங்கிய குரலில் அழைத்தாள். உள்ளே வீட்டினுள் வந்துவிடு என்றாள்.

பாட்டியின் ஓலத்தோடு அமெரிக்க, பிரிட்டன் விமானங்களும் பறக்கும் ஒலி காதுகளைப் பிளந்தது.

டுமீல், டும் டும் டுமீல், டுமீல் என குண்டுகள் வெடித்தன.

வீட்டுக்கு வெளியே நின்ற நபீலா குண்டு வெடிப்பில் சிதிறிய சில்லுகளால் காயம் பட்டாள். குண்டுகளை மழையெனப் பொழிந்த விமானங்களின் கலவரம், காதைப் பிளந்தது. அவள் உடம்பில் தைத்த சில் அவளை மூர்ச்சையாக்கி கீழே தள்ளிற்று.

அமெரிக்க பிரிட்டன், விமானங்கள் இப்படி திடுதிப்பென குண்டுமழைகளைப் பொழிவது வாடிக்கை! அந்த மக்களுக்கு எந்தப் பாதுகாப்புமில்லை. குண்டுமழை நின்றவுடன் அந்த மக்களில் உயிருடன் இருப்பவர்கள் பிணமாகிப் போனவர்களைத் தேடியெடுத்து நல்லடக்கம் செய்வார்கள். இதுவும் அங்கே வாடிக்கை.

இந்த வகையில் இப்போதும் குண்டு மழை நின்றவுடன், உயிருடன் இருந்தவர்கள் வெளியே வந்து உயிருடன் இல்லாதவர்களைத் தேடினார்கள்.

நபீலா மயக்கமுற்றுக் கிடந்தாள். எடுத்துச் சென்று மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

இரத்தம் பெருமளவில் வெளியேறி இருந்தது. இருந்தாலும் உயிருக்கு ஆபத்தில்லை.

ஆனால், அந்த ஆதிக்க சக்திகள் வீசிய குண்டில் வீடுகள் துகளாகிப் போனது.

**பாட்டி பறிபோனாள்**

வீட்டின் உள்ளே இருந்தவர்கள் யாரும் தப்பிக்கவில்லை.

நபீலாவின் மேல் அன்பு காட்டி நிமிடத்திற்கொரு முறை அவள்பால் பாசத்தையும் பரிவையும் காட்டிய பாட்டி பறிபோய் விட்டாள்.

மருத்துவமனையில் நபீலா மூச்சுவிடும் போதெல்லாம் பாட்டி, பாட்டி என்றே மூச்சு விட்டாள்.

மருத்துவர்கள் நபீலாவுக்கு இன்னும் நுணுக்கமான மருத்துவம் தேவைப்படுகின்றது என்றார்கள். அதனால் அவளை பாகிஸ்தானின் தலைநகரில் உள்ள இஸ்லாமாபாத் மருத்துவமனைக்கு மாற்றி னார்கள். இஸ்லாமிய அமைப்புகள் அவளது மருத்துவ செலவுகளை ஏற்றுக் கொண்டன. அவள் வேகமாக குணமடைந்தாள். ஆனால், அந்நிலையில் அவள் அநாதை!

**'டான்' பத்திரிகை**

'டான்' என்ற பத்திரிகையின் செவிகளுக்கு இந்தச் செய்தி சென்றது. டான் பத்திரிகை 'மலாலாவை' உலகின் ஒப்பற்ற கல்வி கதாநாயகி ஆக்கிய மீடியாக்கள், அந்த மீடியாக்களுக்குப் பணமும் உற்சாகமும் தந்து ஆளாக்கிய மேலைநாடுகள் குறிப்பாக அமெரிக்கா ஆகியவை என்ன சொல்கின்றன நபீலா விவகாரத்திற்கு எனக் கேட்டு கட்டுரைகளை எழுதின.

'நபீலா' ஏன் அநாதை ஆனாள் என்ற வினாவை அமெரிக்காவை நோக்கி வைத்தது.

> *அமெரிக்க அதிபர் ஒபாமா மலாலாவை தன்னுடைய அதிபர் மாளிகையில்* (Oval Office) *சந்தித்தார். அதுபோல், நபீலாவுக்கும் ஒரு வாய்ப்பு அதிபர் மாளிகையில் தந்திட வேண்டும் என விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால், ஒபாமா முடியாது என மறுத்து விட்டார்.*

நபீலா அமெரிக்காவால் உலகெங்கும் நாளும் அநாதை ஆக்கப்படும், மழலைகளின் அடையாளந்தான்.

மலாலா காயமடையாமலே லண்டனில் சிகிச்சை பெற்றாள். ஆனால், நபீலாக்கள் காயம் பட்டு உயிருக்குப் போராடிய போது, உலக அரங்கில் குறிப்பாக மலாலாவை கல்வியின் கதாநாயகி ஆக்கியவர்கள் கனைத்துக் கூட காட்டிடவில்லை. இந்த அநாதைகளுக்கு என்ன பதில் எனக் கேள்விகள் வைக்கப்பட்டன.

**அமெரிக்க பயணம்**

இன்னும் ஒரு படி மேலே போய் டான் பத்திரிகையின் வாசகர்கள் அமெரிக்காவுக்கு நபீலாவை அழைத்துச் சென்று அமெரிக்காவின் செனட் பெருஞ்சபையில் ஒரு நிமிடம் பேசிட அனுமதி கேட்டார்கள்.

மலாலா இந்த செனட் பெருஞ்சபையில் 40 நிமிடங்கள் பேசினாள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், நபீலா விவகாரத்தில் அவள் உரையாற்றிட செனட் பெருஞ்சபை ஒத்துக் கொள்ளவில்லை. பின்னர் நபீலா ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்பாள். அதற்கு அனுமதி தாருங்கள். விரும்பினால் பதிலும் தாருங்கள் என்றொரு விண்ணப்பத்தை வைத்தார்கள்.

ஆனால், செனட் பெருஞ்சபையோ, அதன் உறுப்பினர்களோ, இதற்குத் தயாராக இல்லை.

ஆனால், 'டான்' பத்திரிகையின் அமெரிக்க வாசகர்கள் அமெரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து மலாலாவைப் போல் நபீலாவும் நடத்தப்பட வேண்டும், மலாலாவுக்குத் தரப்பட்ட முக்கியத்துவம் நபீலாவுக்கும் தரப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

இந்நிலையில் ஊடகங்களும் அரசல் புரசலாகச் செய்திகளை வெளியிட்டன. இதனால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே சிறு சலனம். நபீலா என்ன சொல்கின்றாள் என்பதைக் கேட்டுத் தொலைவோம் என்றொரு முடிவுக்கு வந்தார்கள்.

நபீலா ஓர் அறிக்கையோடு சென்றாள்.

ஆனால், அமெரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐந்து பேர் மட்டுமே வந்தார்கள். அமெரிக்க நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் 435 பேர். இந்த சந்திப்பு நபீலா போல் அநாதை ஆக்கப்பட்டவர்களின் அவலங்களை அமெரிக்க மக்கள் அறிந்திட பெரிதும் உதவியது. ஊடகங்களால் ஒரேயடியாக இந்தச் செய்தியை மறைத்திட முடியவில்லை என்பதும் ஒரு முக்கிய காரணம்.

**அதிபர் ஒபாமா**

அடுத்து, நபீலாவுக்குப் பின்னால் நின்ற டான் பத்திரிகை வாசகர்கள் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பினார்கள்.

அமெரிக்க அதிபர் ஒபாமா மலாலாவை தன்னுடைய அதிபர் மாளிகையில் (Oval Office) சந்தித்தார். அதுபோல், நபீலாவுக்கும் ஒரு வாய்ப்பு அதிபர் மாளிகையில் தந்திட வேண்டும் என விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால், ஒபாமா முடியாது என மறுத்து விட்டார்.

**லண்டன் பயணம்**

விடவில்லை வாசகர்கள். லண்டன் என்ற ஆங்கில ஏகாதிபத்தியத்தின் தலைநகர் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பினார்கள்.

மலாலாவை ஆங்கில ஏகாதிபத்தியத்தின் மகாராணி எலிசபெத் தன்னுடைய அரியணை வீற்றிருக்கும் அபார மாளிகையிலேயே சந்தித்தார்.

அதே தோரணையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அனைத்து அடாவடித்தனங்களுக்கும் துணை நிற்கும் ஆங்கில ஏகாதிபத்தியம் நபீலாக்களின் கதையையும் கேட்க வேண்டும் என வேண்டினார்கள்.

**எலிசபெத் மகாராணி**

பாவம்! மகாராணி எலிசபெத் முடியாது என மறுத்து விட்டார். எத்துணை போலியானவர்கள் இந்த ஏகாதிபத்தியவாதிகள்.

இவர்கள் எதை சாதிக்கின்றார்களோ இல்லையோ, நித்தமும் நபீலாக்களை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றார்கள்.

ஆனால், மலாலாக்களுக்குப் பரிசுகளை வழங்கிக் கொண்டே இருக்கின்றார்கள்.

16 வயதில் 26 பரிசுகளைப் பெற்று விட்டாள் மலாலா.

லண்டனை வசிப்பிடமாக (பெர் மிங்கம்) ஆக்கிக் கொண்டார்.

மலாலாக்கள் அமெரிக்க மத்திய உளவுத் துறையின் ஆக்கம் என்பது தெளிவு.

அமெரிக்க மத்திய உளவுத்துறைக்கு ஓர் வழக்கம். தனது தகிடுதத்தங்களுக்கு உதவி செய்பவர்களை முதலில் ஆளாக்குபவர்கள் பின்னர் அவர்கள் அழிப்பார்கள்.

Source : Radiance Views Weekly 24/30 Nov. 2013 Al Jazeerah - Dawn.

MGM


# இப்போது விற்பனையில்...



## மால்கம் – X

அமெரிக்காவில் 2 லட்சம்
அமெரிக்கர்கள் இஸ்லாத்தை
ஏற்றுக் கொள்ளக் காரணமாக
அமைந்த ஷஹீத் மாலிகுல் ஷாபாஸ்
மால்கம் – X அவர்களின்
முழு வாழ்க்கை வரலாறு.

**விலை ரூ.80**

## சிறையில் எனது நாட்கள்

எகிப்தை இன்று ஆட்சி செய்து
கொண்டிருக்கும் இஃவானுல்
முஸ்லிமூன் இயக்கத்தைச் சார்ந்த
**ஜெய்னப் அல் கஸ்ஸாலி**
அவர்களின் சிறைக் கொடுமைகளை
சித்தரிக்கும் நூல்.

**ஆசிரியர் : ஜெய்னப் அல் கஸ்ஸாலி** **விலை ரூ.90**

## நாம் பிரிந்துவிட வேண்டாம்

**ஆசிரியர் : யூசுப் அல் கர்ளாவி**

நாம் 72 கூட்டங்களாகப்
பிரிய மாட்டோம் என்பதை
குர்ஆன் – ஹதீஸ் அடிப்படையில்
நிலைநிறுத்தும் அரிய நூல்

**விலை ரூ.175**

வெளியீடு : **வேர்கள் பதிப்பகம், 52/1, மண்ணடி, 4வது தளம், சென்னை-1. போன் : 81481 29887**

# சோனி சூரி வழக்கு

# மலைவாழ் மக்களும் உச்சநீதிமன்றமும்



**சோனி சூரி** என்கின்ற 35 வயதுடைய ஆதிவாசி பெண்மணி சத்திஸ்கர் மாநிலத்தில் உள்ள தண்டிவாடா மாவட்டத்தின் ஜபலி கிராமத்தில் பழங்குடியினருக்காக அரசாங்கம் நடத்தும் பள்ளி ஒன்றில் ஆசிரியையாகவும் மற்றும் பாதுகாவலராகவும் பணியாற்றுபவர். சத்தீஸ்கர் மாநில காவல்துறை இவருக்கு மாவோயிஸ்டுகளுடன் தொடர்பு இருப்பதாகக் கூறி கொடுத்த அழுத்தத்தின் பேரில் தண்டிவாடாவில் இருந்து செப்டம்பர் 2011-ஆம் ஆண்டு வெளியேறியுள்ளார். இப்படி வெளியேறிய இவரை அக்டோபர் 4ஆம் தேதி தில்லியில் வைத்து சத்தீஸ்கர் காவல் துறை கைது செய்து எஸ்ஸார் நிறுவனத்திடமிருந்து மாவோயிஸ்டுகள் நிதியுதவி பெற்ற வழக்கு உட்பட பல்வேறு வழக்குகளை சோனி சூரி மீது திணித்துள்ளது..

சோனி சூரி கைது செய்யப்பட்டு போலீஸ் காவலில் இருக்கும் போது சேகட் மாவட்ட நீதிமன்றத்தின் கூடுதல் தலைமை நீதிபதியிடமும் தில்லி உயர்நீதிமன்றத்திலும் தான் தில்லியில் காவலில் வைக்கப்பட வேண்டும் என்றும் தன்னுடைய வழக்கு சத்தீஸ்கருக்கு வெளியில் நடத்தப்பட வேண்டும் என்றும் போலீஸ் காவலில் அவருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை மனதில் வைத்துக் கொண்டு மனு அளித்துள்ளார்.

அக்டோபர் 7, 2011ஆம் நாள் மனுவை விசாரித்த சேகட் மாவட்ட நீதிமன்றத்தின் கூடுதல் தலைமை நீதிபதி மேலும் விசாரணைக்காக இவரை சத்தீஸ்கர் மாநிலத்தின் போலிஸ் காவலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். தில்லி உயர்நீதிமன்றமும் இதே தீர்ப்பினை அக்டோபர் 8ஆம் தேதி வழங்கியுள்ளது.

சோனி சூரி விசாரணைக்காக சத்தீஸ்கர் மாநில காவல்துறையின் காவலில் ஒப்படைக்கப்பட்ட பின்பு எவ்விதமான சட்ட விதிகளையும் கணக்கில் கொள்ளாமல் கடுமையான சித்ரவதைகளையும் பாலியல் துன்புறுத்தல்களையும் சத்தீஸ்கர் கா(ட்டுமிராண்டி)வல் துறையினர் செய்துள்ளனர். விசாரணைக்காக காவலில் இருக்கும்போது இதுபோன்ற செயல்களைச் செய்வது என்பது மனித உரிமை மீறல் மற்றும் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும். ஏன், அரசியல் சாசன சட்டம் குடிமக்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளையே புறந்தள்ளும்.

அக்டோபர் 11, 2011ஆம் நாள் தண்டிவாடா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக அழைத்துச் செல்லப்பட்ட சோனி சூரியால் காவல்துறையின் வாகனத்தில் இருந்து கீழே கூட இறங்க இயலவில்லை. (தில்லியில் சத்தீஸ்கர் மாநில காவல்துறையிடம் ஒப்படைக்கப்படும் பொழுது இவர் நல்ல உடல் நிலையோடு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.) இவ்வாறாக, வாகனத்தில் இருந்து எழுந்து வெளியேறி நீதிமன்றத்திற்கு வர முடியாத அளவிற்கு வலி ஏற்படும் நிலையை காவல்துறையினர் ஏற்படுத்தியுள்ளனர். ஆனால், அதே காவல்துறையினரோ நீதிமன்றத்தில் அவர் கழிவறையில் தவறி விழுந்ததால் தலையில் காயம் ஏற்பட்டு வலியுடன் இருப்பதாக முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் பொய்யுரைத்துள்ளனர். இவ்வாறாக, சோனி சூரி நீதிபதி முன்பாக ஆஜர்படுத்தப்படவுமில்லை; நீதிபதியும் வர முடியாத நிலையில் உள்ள அவரை வந்து வாகனத்தில் பார்க்காத நிலையில் வெறுமனே நீதிமன்ற எழுத்தாளர் பார்த்ததைக் கணக்கில் கொண்டு 14

நாட்களுக்கு நீதிமன்ற காவலில் வைத்து விசாரிக்குமாறு தீர்ப்பளித்துள்ளார். ஆனால், நீதிமன்ற ஆணையில் சோனி சூரி நீதிபதி முன்பாக ஆஜர் செய்யப்பட்டதாக தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சோனி சூரியை சோதித்த தண்டிவாடா மாவட்ட மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் ஜக்தல்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள் கூறியதாவது: சோனி சூரி வலியினால் பல முறை சுய நினைவு இழந்துள்ளதாகவும்,

*இரண்டு கற்கள் பிறப்புறுப்பின் ஆழ்பகுதியில் இருப்பதாகவும் மலக்குடலில் ஒரு கல் இருப்பதாகவும் முதுகுத் தண்டு கடுமையான காயமுற்று இருப்பதாகவும் எம்.ஆர்.ஐ ஸ்கேன் மூலம் கண்டறிந்துள்ளனர். சோனி சூரி போலீஸ் காவலின் போது கடுமையான துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதையே காட்டுகிறது.*

இடுப்புப் பகுதியில் ஏற்பட்டுள்ள வலியினால் எழுந்து நிற்க இயலாது என்றும், தலை மற்றும் பின்புறத்தில் காயங்கள் உள்ள தாகவும் கூறினர். மேலும், கருப்புப் புள்ளிகள் அவரின் கால் பாதத்தில் உள்ளதாகவும் கூறியுள்ளனர். இது மின்சாரம் பாய்ச்சி துன்புறுத்தியதையே காட்டுகிறது.

சோனி சூரி தான் போலீஸ் காவலில் துன்புறுத்தப்பட்டேன் என்று தனது உறவினர்களிடமும், தனது வழக்குரை ஞரிடமும் மற்றும் உச்சநீதிமன்றத்திற்கு தான் அனுப்பிய கடிதத்திலும் குறிப்பிட் டுள்ளதாவது: "அக்டோபர் 8 மற்றும் 9ஆம் தேதிகளில் இரவுகளில் தான் தண்டிவாடா போலீஸ் நிலையத்தில் உள்ள தனது செல்லில் இருந்து எஸ்.பி அங்கித் கார்க் அறைக்குக் கொண்டு செல்லப்பட்டு நிர்வாணப்படுத்தப்பட்டதாகவும், பிறப்புறுப்பில் கல் மற்றும் கம்புகளைத் திணித்ததாகவும், இதன் மூலம் ஒட்டுமொத்த உடலிலும் வலி ஏற்பட்டதாகவும் குறிப்பாக கழுத்து, முதுகெலும்பு பகுதியிலும் அடி வயிற்றுப் பகுதியிலும் கடுமையான வலி ஏற்பட்டதாகவும் கூறியுள்ளார்." மேலும், தனது பிறப்புறுப்பில் செலுத்தப்பட்ட கற்களை தன்னால் எடுக்க இயலவில்லை என்றும் கூறியுள்ளார்.

உச்சநீதிமன்றம் சோனி சூரியின் உடல் நிலை குறித்து சத்தீஸ்கர் மாநில காவல்துறை கொடுத்த மருத்துவக் குறிப்புகளை ஏற்காமல் அவரின் காயங்களைக் கருத்தில் கொண்டு சுதந்திரமான மருத்துவ ஆய்வினை கொல் கத்தாவில் உள்ள என்.ஆர்.எஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடத்திட உத்தரவிட்டது.

(In Writ Petition (CRL) No.200 of 2011) உத்தரவின் பேரில் சோனி சூரியை பரிசோதித்த மருத்துவர்கள் நவம்பர் 25, 2011ஆம் நாள் உச்சநீதிமன்றத்திடம் ஆய்வறிக்கையை சமர்ப்பித்தனர். ஆய்வறிக் கையின் விவரம் வருமாறு:

இரண்டு கற்கள் பிறப்புறுப்பின் ஆழ்பகுதியில் இருப்பதாகவும் மலக்குடலில் ஒரு கல் இருப்பதாகவும் மேலும் முதுகுத் தண்டு கடுமையான காயமுற்று இருப்ப தாகவும் எம்.ஆர்.ஐ ஸ்கேன் மூலம் ஆய்வு மேற்கொண்டு கண்டறிந்துள்ளனர். இவை அனைத்தும் சோனி சூரி போலீஸ் காவலின் போது கடுமையான துன்புறுத்தலுக்கும், பாலுணர்வு வன்புணர்ச்சிக்கும் உட்படுத்தப் பட்டதையே காட்டுகிறது.

டிசம்பர் 1ஆம் தேதி 2011ஆம் ஆண்டு சோனி சூரியை கூடுதலாக 55 நாள் அதாவது அடுத்த வழக்கு விசாரணை 2012 ஜனவரி 25ஆம் தேதி நடக்கும் வரை சத்தீஸ்கர் மாநிலத்திலேயே காவலில் வைக்குமாறு உத்தரவிட்டது. உத்தரவின் பேரில் மருத்துவ ஆய்வினை கருத்தில் கொள்ளாமல் மாவோ யிஸ்டு சம்பந்தமான வழக்குகளில் முன்பு நடந்த துன்புறுத்தல்களை கருத்தில் கொண்டு தீர்ப்பளித்திருப்பதும் துன்புறுத்திய காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காததும் சோனி சூரிக்கு பாதுகாப்பு

அளிக்காததும் எங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் மனவேதனையும் அளித்துள்ளது.

சோனி சூரி தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை வாய் திறந்துள்ளதால் இனி வருங்காலங்களில் அவருக்கு அவருடைய குடும்பத்தினரின் உயிர் உடைமைகளுக்குப் பாதுகாப்பளிக்க உச்சநீதிமன்றத்தால் மட்டுமே இயலும். குடிமக்களின் உரிமைகள் பறிக்கப்படும் போது அதனைப் பாதுகாக்க நீதிமன்றங்களின் பங்கு மகத்தானது. காவல் துறையினர் அதிகார துஷ்பிரயோகம் செய்யும் பொழுது நீதிமன்றங்கள் அமைதி காக்கக் கூடாது. எனவே, சத்தீஸ்கர் காவல்துறையின் சட்ட விதிமுறை மீறல்களைக் கண்டிப்பதோடு மட்டுமல்லாமல் மூத்த காவல்துறை அதிகாரிகளை தண்டிக்க தற்போது உள்ள இவ்வழக்கில் உச்சநீதி மன்றத்தால் மட்டுமே இயலும்.

எனவே, உச்சநீதிமன்றம் அநியாயமாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இந்தப் பழங்குடியின பெண்மணிக்கு நீதியையும் குற்றம் புரிந்தவர்களை இந்திய அரசியல் சாசன சட்டத்தின் மனித உரிமை மீறல்களின்படி தண்டிக்கும் என நாங்கள் நம்பி கோரிக்கை வைக்கிறோம்.


(பாதிக்கப்பட்டு ராய்ப்பூர் சிறையில் உள்ள சோனி சூரிக்காக சி.பி.எம். பொலிட் பீரோ உறுப்பினர் பிருந்தா காரத், அருணாராய், தேசிய ஆலோசனைக் குழுவின் ஃபாரஹ் நக்வி மற்றும் வரலாற்று ஆய்வாளர் ரொமிலா தாப்பர் ஆகியோர் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கும், நீதிபதிகளுக்கும் எழுதிய கடிதத்தின் மொழியாக்கம்.)

*ஆதாரங்கள்:*(i) http://tehelka.com/story-main50.asp?file name=Nel51011coverstory http://www.hardnewsmedia.com/2012/01/4295?page=3

---

**'Scape Goats' என்ற ஆங்கில நூலின் ஓர் அத்தியாயமே இக்கட்டுரை. மொழியாக்கம் : ஹாரிஸ்**

---




*நூல்:*
பலிகடாய்கள் (தமிழில்) (Scape Goats)

*வெளியீடு*
வேர்கள் பதிப்பகம்
கிடைக்குமிடம் : வேர்கள் பதிப்பகம், மண்ணடி, சென்னை-1.
தொலைபேசி : 81481 29887

தடா, பொடா இப்போது யு.ஏ.பி.ஏ (UAPA) என்ற Unlawful Activities Prevention Amendment Act 2004 என எல்லா ஆள்தூக்கி, காட்டுமிராண்டிச் சட்டங்களும் முஸ்லிம்களை நோக்கி பாய்ச்சப்பட்டன.

இதன் வழி முதலில் பாமர முஸ்லிம் இளைஞர்கள், பின்னர் படித்த முஸ்லிம்கள், பின்னர் பொறியியல் முஸ்லிம் நிபுணர்கள், பின்னர் முஸ்லிம் மருத்துவர்கள் என அனைத்து தரப்பு முஸ்லிம்களும் பாசிச பயங்கரவாத சட்டங்களுக்குப் பலிகடாவானார்கள்.

இந்து அமைப்புகள், குண்டு வைக்கும்; முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்படுவார்கள். இஸ்லாமிய அமைப்புகள் தடை செய்யப்படும்; இதில் நீதித் துறையின் ஓரவஞ்சனை சொல்லி மாளாது.


இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். அனைத்திற்கும் ஆதாரம் வேண்டுமானால் இந்த நூலில் அஃது நிரம்பவே கிடைக்கிறது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நாம் அவ்வப்போது எழுதிட்டவை ஒரே தொகுப்பாய் ஒரே இடத்தில் கிடைக்கின்றது.

இந்த நூலை நாம் முஸ்லிம்கள் படிப்பதை விட சகோதர சமுதாயத்தவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் நிச்சயமாக முஸ்லிம்கள் மேல் கொண்டுள்ள தப்பான கருத்துகளை – எண்ணங்களை மாற்றிக் கொள்வார்கள். ஏன்? பாசிசத்திற்கெதிரான போரில் நம்மோடு உடன் நிற்பார்கள்.

# இறைவழிபாடுகள் அனைத்திலும் எளிமைக்கே முதலிடம்

தொடர் – 17



டாக்டர் யூசுப் அல் கர்ளாவி

**நபி (ஸல்)** அவர்களுக்கு பத்தாண்டு காலம் பணிவிடை செய்துவந்த அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "நபி (ஸல்) அவர்களை விட நிறைவாகவும் எளிதாகவும் தொழுகை நடத்தும் எவரையும் நான் பார்த்ததில்லை. தொழுகையின் இடையில் குழந்தையின் அழுகை சப்தம் கேட்டால் தாயின் மன ஓர்மைகெட்டு விடுமென்பதற்காக விரைவாகத் தொழுகையை நபி (ஸல்) அவர்கள் முடித்து விடுவார்கள்." (நூல்: புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீண்ட நேரம் தொழ வேண்டும் என்ற எண்ணத்தில் தொழுகைக்குள் செல்கிறேன். குழந்தையின் அழுகுரல் எனக்குக் கேட்கிறது. தன் குழந்தையின் அழுகுரல் தாய்க்குக் கடும் வருத்தமளிக்கும் என அறிந்து நான் தொழுகையை இலகுவாக முடித்து விடுகிறேன். (நூல்: புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மக்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்துபவர் இலகுவாக நடத்தட்டும். ஏனெனில், நோயாளிகள், பலவீனமானவர்கள், முதியவர்கள் இருப்பார்கள். தனக்குத் தானே தொழுபவர் தான் விரும்பியபடி நீண்ட நேரம் தொழட்டும்." (நூல்: புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் தாம் காட்டிய வழிமுறைகள் எதிலும் எவருக்கும் சிரமம் தந்ததில்லை. மொத்த சமுதாயமும் சிரமமற்ற வழியில் சென்று கொண்டிருக்க ஒரு சிலர் மட்டும் கடினமான பாதையைத் தேர்ந்தெடுத்தால் 'ஒரு சிலர்தானே' என்று விட்டுவிட மாட்டார்கள். அவர்களைக் கண்டித்து, திருத்தி, இலகுவான பாதைக்குத் திருப்பி விடுவார்கள். நன்மைகளைக் கூடுதலாகப் பெற்றுவிட வேண்டும். அல்லாஹ்விடம் கூடுதல் நெருக்கத்தைப் பெற்றுவிட வேண்டும் என்ற நல்ல நோக்கம் மட்டுமே அந்த சில நபர்களிடம் இருந்தாலும் கூட அதன் வழிகள் கடுமையானவை என்பதால் நபி (ஸல்) அவர்கள் அதை வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். இதோ ஓர் உதாரணம்:

நபி (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகள் பற்றி அறிந்திடுவதற்காக மூன்று நபர்கள் நபி (ஸல்) அவர்களின் மனைவியரிடம் விசாரித்தனர். நபி (ஸல்) அவர்களின் அன்றாட அமல்கள் பற்றி அவர்கள் அறிந்தபொழுது அவை மிகவும் குறைவாக இருப்பதாகக் கருதினர். தமக்கிடையே இப்படிப் பேசிக் கொண்டனர்: 'முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட பெருமானார் எங்கே நாம் எங்கே?' (நாம் அவர்களை விட அதிகமாக நன்மைகளைச் செய்திட வேண்டும்.)

ஒருவர், 'இனி நான் இரவெல்லாம் தொழுகையில் திளைக்கப் போகிறேன்' என்றார்.

மற்றொருவர், 'நான் விடாமல் நோன்பு நோற்கப் போகிறேன்' என்றார்.

இன்னொருவர், 'நான் திருமணம் செய்திடாமல் பெண்களைத் தவிர்த்து வாழப் போகிறேன்' என்றார்.

அப்பொழுது அங்கே வந்த நபி (ஸல்) அவர்கள், 'இப்படியெல்லாம் பேசிக் கொண்டது நீங்கள்தானா? அறிந்து கொள்ளுங்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாகச் சொல்கிறேன். நான்தான் உங்களில் அதிக இறையச்சமுள்ளவன். பயபக்தியுள்ளவன். எனினும், நான் நோன்பு வைக்கிறேன். விட்டு விடுகிறேன். இரவில் தொழுகிறேன். உறங்குகிறேன். திருமணம்

செய்துள்ளேன். என் வழிமுறையைப் புறக் கணிப்பவர் என்னைச் சார்ந்தவரல்லர்' என்று கூறினார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) கூறினார்கள்: வரம்பு மீறுவோர் அழிந்தனர். வரம்பு மீறுவோர் அழிந்தனர். வரம்பு மீறுவோர் அழிந்தனர். (நூல்: முஸ்லிம், அபூதாவூத்)

இந்த நபிமொழியில் இடம்பெற்றுள்ள 'வரம்பு மீறுவோர் = முத்தனத்திஊன்' என்பதன் பொருள் 'சிரமம் எடுத்துக் கொள்ளத் தேவையில்லாதவற்றில் அதிக சிரமமெடுத்து மூழ்குவோர்' என்பதே.

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்: 'நிச்சயமாக இந்த மார்க்கம் இலகுவானதே. இம்மார்க்கத்தை யாரும் கடினமாக்கினால் அது அவரை மிகைத்து விடும். எனவே, நீங்கள் நடுநிலையைக் கடைப்பிடியுங்கள். நன்மை செய்வதில் முந்துங்கள். நல்வாழ்த்துக் கூறுங்கள். காலையிலும் மாலையிலும் இரவின் ஒரு பகுதியிலும் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள்.' (நூல்: புகாரி, நஸயீ)

மற்றொரு அறிவிப்பில் 'நடுநிலையைக் கடைப்பிடியுங்கள். நன்மை செய்வதில் முந்துங்கள். காலை, மாலை, இரவின் ஒரு பகுதி நேரம் இவற்றில் இறைவணக்கத்தில் திளைத்திருங்கள். நடுநிலை பேணுங்கள். அடைய வேண்டிய நன்மைகளை அடைவீர்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று காணப்படுகிறது. (நூல்: புகாரி)

'மார்க்கத்தைக் கடுமையாக்குபவரை மார்க்கம் மிகைத்துவிடும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதன் பொருள் என்ன வென்றால், 'மார்க்கம் பல்வேறு வழிகளைக் கொண்டது. அதனுடன் போட்டி போட்டால் தோற்றுப் போக வேண்டும்' என்பதே.

காலை, மாலை, இரவின் கடைசிப் பகுதி நேரம் என்றெல்லாம் நபி (ஸல்) அவர்கள் கூறுவது உதாரணத்துக்காக இரவல் வாங்கிக் கூறப்படும் சொல்லாட்சியாகும். இதன் பொருள்: 'நீங்கள் உற்சாகமாகவும் மன ஓர்மையுடனும் இருக்கும் வேளையில் நீங்கள் இறைவழிபாட்டை ஒரு சுகானு பவமாகக் கருதியும் வெறுப்பின்றியும் நிறைவேற்றிக் கொண்டே நீங்கள் அடைய விரும்பும் நன்மைகளை அடைந்திட வசதியாக நற்காரியங்களைச் செய்து அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள்' என்பதாகும்.

இந்த நேரங்களில் தான் ஒரு புத்தி சாலியான பிரயாணி பயணம் மேற்கொள் வான். இவை தவிர, இதர நேரங்களில் தாமும் ஓய்வெடுத்துக் கொள்வான். தன் வாகனத் தையும் ஓய்வெடுக்க வைத்திடுவான். இதனால் அவன் சிரமமின்றி போய்ச் சேர வேண்டிய ஊரை அடைவான்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளி யான செய்தியொன்றைக் கேட்டு நான் அதிர்ந்தேன். செய்தி ஏடுகளிலும் அச் செய்தியை நான் பார்த்தேன். சவூதி அரசின் ஹஜ்ஏற்பாட்டுத்துறை அச்செய்தியை வெளியிட்டிருந்தது. இதுதான் அச்செய்தி:

ஜம்ராத்தில் கல்லெறியும் போது சுமார் இருநூற்றி எழுபது (270) ஹாஜிகள் இறந்து விட்டார்கள் என்பதே அச்செய்தி. சூரியன் உச்சியிலிருந்து மேற்கே சாயும் (ஸவால்) நேரத்திலிருந்து சூரியன் மறைவதற்குள்ளாக கல்லெறிந்திட அனைவரும் முண்டியடித்துக் கொண்டு சென்றதால் கூட்ட நெரிசலில் சிக்கி சக ஹாஜிகள் கால்களில் மிதிபட்டு இவ்வளவு பேர் இறந்துள்ளனர்.

இவ்வளவு ஹாஜிகள் மிதிபட்டு இறந்த பின்னரும் கூட அதிகமான அறிஞர்கள் ஸவாலுக்கு முன்னர் கல்லெறிந்திடக் கூடாது என்றே 'ஃபத்வா' கொடுத்து வரு கின்றனர். என்ன நடந்தாலும் சரி, ஸவாலுக்கு முன் கல்லெறிந்திடக் கூடாது என்கின்றனர்.

ஆனால், நபி (ஸல்) அவர்கள் 'ஹஜ்' ஜின் அமல்களை எளிதாக்கியே இருக்கிறார்கள்.

*சட்ட மேதைகள்
'ஜம்ராத்' துக்கு
கல்லெறியும் விஷயத்தில்
சட்டங்களை
எளிதாக்கியுள்ளனர்.
எல்லா நாட்களிலும் எறிய
வேண்டிய கற்களை
மொத்தமாக கடைசி
நாளில் அடித்துக்
கொள்ளலாம் என்று
அனுமதித்துள்ளனர்.*

சிலர் சில அமல்களை முற்படுத்தி விட்ட தாகவும் சிலர் சில அமல்களைப் பிற்படுத்தி விட்டதாகவும் கூறிய போது, ‘செய்து கொள்ளுங்கள்; பரவாயில்லை’ என்றுதான் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

சட்ட மேதைகள் ‘ஜம்ராத்’துக்கு கல்லெறியும் விஷயத்தில் சட்டங்களை எளிதாக்கியுள்ளனர். எல்லா நாட்களிலும் எறிய வேண்டிய கற்களை மொத்தமாக கடைசி நாளில் அடித்துக் கொள்ளலாம் என்று அனுமதித்துள்ளனர். தமக்குச் சிரமம் இருந்தால் தம் சார்பில் மற்றவரை அடிக்கச் சொல்லலாம் என்று அனுமதித்துள்ளனர்.

துல்ஹஜ்பிறை பத்தாம் நாளில் மொட்டையடித்த பிறகு இஹ்ராமிலிருந்து முதல் விடுதலையும் ‘தவாப்’ செய்த பின் இரண்டாம் விடுதலையும் ஏற்பட்ட பிறகுதான் ‘அய்யாமுத் தஷ்ரீக்’ எனப்படும் பதினொன்று, பனிரெண்டு, (பதிமூன்று) ஆகிய தினங்களில் ஹாஜிகள் மூன்று ‘ஜம்ராத்’களுக்கும் கல்லெறிகின்றனர். இஹ்ராமிலிருந்து பூரண விடுதலை பெற்ற பிறகு செய்யப்படும் அமல்களின் நேரங்களில் இவ்வளவு கடுமை காட்டத் தேவையில்லை.

மூன்று மிகப் பெரும் அறிஞர்கள் ஸவாலுக்கு முன்னரே கல்லடித்திட அனுமதி வழங்கியுள்ளனர். ஹஜ்வணக்கம் பற்றிய சட்ட மேதை அதாவு (ரஹ்), எமன் நாட்டின் மேதை தாவூஸ் (ரஹ்) இவர்கள் இருவரும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் மாணவர்களாவர். நபியின் குடும்பத்தைச் சார்ந்த அபூஜஅஃபர் அல் பாக்இர் (ரஹ்) (முஹம்மது பின் அலீ பின் ஹுஸைன் பின் அலீ பின் அபீதாலிப் என்பது இவர்களின் குடும்பப் பின்னணி) ஆகியோரே அம்மூன்று அறிஞர்கள்.

ஒருவேளை ஸவாலுக்கு முன்னர் கல்லடித்திட சட்டத்தில் இடமில்லை என்று வைத்துக் கொண்டால் கூட அந்நாட்களில் ஹாஜிகள் படும் சிரமங்களைக் கவனத்தில் கொண்டு சிரமங்களைக் குறைத்திடும் வகையில் ‘ஃபத்வா’ வழங்குவது சட்டத் துறையின் கடமை. அநாவசியமான மரணங் களிலிருந்து ஹாஜிகளைக் காப்பாற்று வதற்காக ‘இருபத்து நான்கு மணி நேரமும் ஷைத்தானுக்கு கல்லடிக்க அனுமதி’ வழங்க வேண்டும்.

அஷ்ஷைக் அப்துல்லாஹ் பின் ஸைத் அல் மஹ்மூத் அவர்களுக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. அவர் தனது ‘யுஸ்ருல் இஸ்லாம்’ எனும் நூலில் ஸவா லுக்கு முன்னர் கல்லடிக்கலாம் என்று சுமார் முப்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டார்.

ஒன்றை நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும். மனித வாழ்வு ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு விதமான நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. சில நெருக்கடிகள் தனி மனிதனை மட்டும் பாதிக்கின்றன. வேறு சில நெருக்கடிகள்

*ஆண்கள் பட்டாடை அணிவது கூடாது என்ற சட்டம் வந்த பின்னர் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் சுபைர் பின் அவாம் (ரலி) இருவரும் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தமக்கு அரிப்பு இருப்பதால் பட்டாடை அணிய அனுமதி கேட்டனர். மருந்து என்ற தேவைக்காக அவர்களிருவரும் பட்டாடை அணிந்திட நபி (ஸல்) அவர்கள் அனுமதித்தார்கள்.*

மொத்த சமுதாயத்தையும் பாதிப்புக்குள் ளாக்குகிறது. நெருக்கடியான காலங் களுக்கென பிரத்யேகமான சட்டங்களை ஷரீஅத் வழங்கியுள்ளது.

நெருக்கடிகள் இல்லாத சகஜ வாழ்வுக் கான காலங்களில் தடை செய்யப்பட்டவை நெருக்கடியான காலகட்டங்களில் அனுமதிக்கப்பட்டவையாகி விடுகின்றன.

உணவுகள், பானங்கள், ஆடைகள், ஒப்பந்தங்கள், கொடுக்கல்-வாங்கல் (பணப் பரிவர்த்தனை) முதலியவற்றில் தடை

செய்யப்பட்டவை நெருக்கடிகளின் போது அனுமதிக்கப்பட்டவையாகி விடுகின்றன.

சில சமயங்களில் தனி மனிதனுக்கோ அல்லது பொதுமக்கள் அனைவருக்குமோ, ஏற்படும் சில தேவைகள் கூட (தேவைகளாக மட்டும் கருதப்படாமல் இன்றியமையாத) அத்தியாவசியமானதாகக் கருதப்பட்டு விடுகின்றன. இது எதற்காகவென்றால் பொது மக்களின் சிரமத்தைக் குறைக்கவும் சட்டத்தை சமுதாய மக்களுக்கு எளிதாக்கித் தருவதற்காகவும்தான்.

இவ்வாறு தேவைகளைக் கூட அத்தியாவசியமானவையாகக் கருதுவதற்கு திருக்குர்ஆனில் வழிகாட்டுதல் உள்ளது.

தடுக்கப்பட்ட உணவுகள் எவை எனக் கூறிவிட்டு நிர்ப்பந்தமான நேரத்தில் வரம்பு மீறாமல், பசிக்கு ஏற்ப உண்பவர் குற்றவாளியல்ல என்று திருக்குர்ஆன் நான்கு இடங்களில் கூறுகிறது. (காண்க: 2:173, 5:3, 6:145,16:115)

ஆண்கள் பட்டு ஆடை அணிவது கூடாது என்ற சட்டம் வந்த பின்னர் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் சுபைர் பின் அவாம் (ரலி) இருவரும் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தமக்கு அரிப்பு வியாதி (சொறி) இருப்பதால் பட்டு ஆடை அணிந்திட அனுமதி கேட்டனர். மருந்து என்ற தேவைக்காக அவர்களிருவரும் பட்டாடை அணிந்திட நபி (ஸல்) அவர்கள் அனுமதித்தார்கள்.

இவ்வாறு தேவைகள் கூட நெருக்கடிகளாகக் கருதப்பட்டு, தடுக்கப்பட்டவை தேவைக்கு ஏற்ப அனுமதிக்கப்பட்டுள்ளன.


நமது மார்க்கம் இவ்வளவு எளிமையானது. இலகுவானது. நெகிழ்வுத் தன்மை கொண்டது. எனவே, நம் ஆராய்ச்சிகளால் மக்களைச் சிரமப்படுத்தக் கூடாது. மார்க்கத்தைப் பின்பற்றும் வழிமுறைகளை எளிதாக்க வேண்டும்.

.... தொடரும்

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி.**

24-07-2013

# ‘துக்ளக்’ இதழில் வெளிவந்த புத்தக மதிப்புரை




‘ஒற்றுமை என்ற கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்’ – என்று வெற்றிக்கு வழி கூறும் மார்க்கம் இஸ்லாம். அது இன்று சில கருத்து வேறுபாடுகளால் பல பிரிவுகளாகப் பிரிந்து நின்று செயல்படுகிறது’ என்று தனது வருத்தத்தை வெளிப்படுத்தும் இந்நூலாசிரியர் இம்மார்க்கத்தின் மீது உண்மையான நம்பிக்கை கொண்டவர்கள், பிரிவினையை உருவாக்கும் கருத்து மோதல்களைக் கைவிட்டு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்பதை இந்நூலில் வலியுறுத்துகிறார். கத்தார் நாட்டு இஸ்லாமிய அறிஞரான இந்நூலாசிரியரின் அரபி நூலை, சென்னை மந்தைவெளி தலைமை இமாம், எளிய தமிழ்நடையில் மொழியாக்கம் செய்துள்ளார். இஸ்லாம் போன்ற உலகளாவிய ஒரு பெரிய அமைப்பிற்காக உழைப்போர் அனைவரும் ஓரணியில், ஒரே தலைமையின் கீழ் இயங்குவது என்பது சாத்தியமற்றது. அந்த நிலையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதும் தவறு அல்ல என்று கூறும் ஆசிரியர், அது ஒரு எல்லைக்குள் கட்டுப்பட வேண்டும் என்கிறார். இந்தக் கருத்து வேறுபாடுகள் மார்க்க நடைமுறையில் எந்தெந்த விஷயங்களில், எப்படி ஏற்படுகிறது, அவற்றுக்குத் தீர்வு காண்பது எப்படி என்பதை ஆய்வு ரீதியில் மார்க்க ஆதாரங்களைக் கொண்டு விளக்குகிறார். நாம் கடைப்பிடிக்கும் வழிமுறை சரியா, தவறா என்ற இஸ்லாமியர்களின் குழப்பத்தை நிவர்த்தி செய்வதோடு இஸ்லாத்துக்குள் எந்த வேற்றுமையும் இல்லை என்ற ஒருங்கிணைப்பு உணர்வையும் இந்நூல் அவர்களுக்கு ஏற்படுத்துகிறது. இன்று பல பிரிவுகளாகப் பிரிந்து நிற்கும் இஸ்லாமிய இயக்கங்களுக்கும் இஸ்லாத்தைப் புரிந்து கொள்ள நினைப்பவர்களுக்கும் இந்நூல் பெரிதும் உதவும்.

– பரக்கத்.

# 2024–ல் இஸ்லாமிய துருக்கி



## தொடங்கியது எர்துகானின் சகாப்தம்

**முஸ்தஃபா கமாலின்** காலத்தில் அவர் கொண்டு வந்த இஸ்லாமிய விரோத சட்டங்களால் பலர் துருக்கியை விட்டு பிற நாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர்.

அவ்வாறு இடம்பெயர்ந்த குடும்பங்களில் ஒன்று தற்போதைய பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகானின் குடும்பம்.

உஸ்மானிய கலீஃபா குடும்பத்தைச் சேர்ந்த அவரின் முன்னோர்கள் ஜார்ஜியா நாட்டுக்கு இடம் பெயர்ந்தார்கள். கமாலின் காலத்துக்கு பிறகு அத்னான் முன்தரிஸ் ஆட்சிக் காலத்தில் எர்துகானின் குடும்பம் துருக்கி வந்தது.

1954 ம் ஆண்டு ரைஸ் நகரில் எர்துகான் பிறந்தார். 1967-ம் ஆண்டு அவரது குடும்பம் இஸ்தான்பூல் நகரில் குடியேறியது. அங்குள்ள மர்மரா பல்கலை.யில் படித்த எர்துகான், மாணவர் பருவத்தில் இஸ்லாமிய எழுச்சியாளராக திகழ்ந்தார்.

மாணவர் பருவத்திலேயே கம்யூனிசத்தை தீவிரமாக எதிர்த்த அவர், இஸ்லாமியவாதிகளின் கட்சியான ரஃபா கட்சியின் சார்பில் 1994 ம் ஆண்டு இஸ்தான்பூல் நகர மேயர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1998 வரை நான்கு ஆண்டுகள் மேயராக பதவி வகித்த அவர், அதுவரை மேயர் பதவி வகித்தவர்கள் யாரும் செய்யாத பணிகளை செய்து , இஸ்தான்பூல் நகரத்தை மெட்ரோ பாலிட்டன் நகரமாக உயர்த்தினார். இதனால் எர்துகானின் புகழ் துருக்கி நாட்டுக்கு அப்பால் ஐரோப்பா முழுவதும் பரவியது.

1998-ல் அவரது ரஃபா கட்சி தடை செய்யப்பட்ட போது நஜ்முத்தீன் எர்துகானின் வெர்ச்சு ஃபார்ட்டி கட்சியில் சேர்ந்தார்.

### சிறையில் எர்துகான்

எர்துகான் செல்வாக்கு உயர்வதை கண்டு அஞ்சிய ராணுவ அரசு,1998-ம் ஆண்டு ஒரு பொதுக்கூட்டத்தில் இஸ்லாத்தை இகழ்ந்து துருக்கி தேசியவாதி 'ழியா கோக் அலப்' பாடிய கவிதையைப் படித்துக் காட்டி விமர்சித்ததற்காக 10 மாதங்கள் சிறை தண்டனை விதித்து சிறையில் அடைத்தது. இதனால் துருக்கி முஸ்லிம்களின் உள்ளங்களில் மாவீரன் ஆனார் எர்துகான்.

2001 ம் ஆண்டு வெர்ச்சு பார்ட்டி கட்சியும் தடை செய்யப்பட்டது. அக்கட்சியின் முக்கிய தலைவர்களுடன் இணைந்து ஜஸ்டிஸ் அன்டு டெவலப்மன்ட் கட்சியை அவர் தொடங்கினார்.

### பெண் கல்வியில் கவனம் செலுத்திய எர்துகான்

2002 ல் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் அவரது கட்சி அமோக வெற்றி பெற்றும் முன்னர் பெற்ற சிறை தண்டனையால் அவரால் பிரதமராக முடியவில்லை. அவருக்காக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றி அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்யப்பட்டது. 2003 மார்ச்சில் அவர் துருக்கி பிரதமர் பொறுப்பை ஏற்றார்.

அவரது ஆட்சியில் கல்விக்கு குறிப்பாக பெண் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்த அவர், நாடு முழுவதும், `Come on Girls, Let's go to school' எனும் பெண் கல்வி விழிப்புணர்வு இயக்கத்தை நடத்தினார். படித்த பெண்களின் எண்ணிக்கை உயரத் தொடங்கியது.

**பொருளாதார வளர்ச்சி**

எர்துகானின் ஆட்சியில் பொருளாதார வளர்ச்சிக்குஅடித்தளம் அமைக்கப்பட்டது . இதனால் நாட்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் ஆண்டுதோறும் உயரத் தொடங் கியது. மேற்குலகைச் சாராத திட்டமிட்ட பொருளாதார கொள்கையால் நாடு தன் னிறைவு அடைந்தது.

2011 ல் அமெரிக்க பொருளாதார வீழ்ச்சி துருக்கியை துரும்பளவு கூட பாதிக்க வில்லை. 2012-ம் ஆண்டு ஐரோப்பாவை பொருளாதார வீழ்ச்சி ஆட்டிப் படைத்தது. கிரீஸ் நாடு திவாலானதாக அறிவிக்கப் பட்டது. பெல்ஜியத்திலும், பிரான்சிலும் ஊழியர் குறைப்பு செய்யப்பட்டது. பிரிட்டனில் எம்.பிக்களின் செலவுகளை குறைக்க சட்டம் இயற்றப்பட்டது.

ஆனால் அச்சமயத்தில் துருக்கியின் பொருளாதாரம் வலுவாக இருந்தது. 2013-ல் சம்பளம் பட்டுவாடா செய்ய இயலாமல் அமெரிக்க அரசு நிதி நெருக்கடியில் சிக்கி தவித்த சமயத்தில், துருக்கி சீனாவுடன் இணைந்து அணுசக்தி திட்டத்தையும் நீருக் கடியில் மெட்ரோ ரெயில் போக்குவரத் தையும் தொடங்கியது.

நவீன பொருளாதார திட்டங்கள் குறித்து மேற்குலகிடம் இருந்து துருக்கி பாடம் பயின்ற காலம் மாறி, துருக்கியிடம் இருந்து மேற்குலகம் பாடம் படிக்கும் நிலை உருவாகியுள்ளது. மொத்தத்தில் ஐரோப் பாவில் அசைக்க முடியாத பொருளாதார சக்தியாக துருக்கி உருவெடுத்து விட்டது.

**ராணுவத்தின் அதிகாரத்தை குறைத்த எர்துகான்**

இஸ்லாமியவாதியான எர்துகான் ஆட்சியை பிடித்த ஆரம்ப காலத்திலேயே (2002) ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட ராணுவம் திட்டமிட்டது. தகவல் தெரிய வந்த எர்து கான், மிகவும் சாதுர்யமாக அது நடக்காமல் இருக்க துருக்கியை அமெரிக்கா தலைமை யிலான நேட்டோவில் இணைத்தார். ராணுவத்தின் சதித்திட்டம் தவிடுபொடி யானது. 2003-ல் அரசியல் சாசனத்தை திருத்தி, அதுவரை ராணுவ அதிகாரிகள் மட்டுமே இடம்பெற்று வந்த தேசிய பாது காப்பு கவுன்சிலில் சிவில் அதிகாரிகளை இடம் பெறச் செய்தார். இதன் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பின் வாசல் முற்றிலுமாக அடைக்கப் பட்டது.



2003-ல் பொது நிதி நிர்வாக சட்டத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்து, பட் ஜெட்டில் ராணுவத்திற்கான நிதி ஒதுக் கீட்டை குறைத்து , கல்விக்கான நிதி ஒதுக் கீட்டை அதிகப்படுத்தினார். இது உள் நாட்டிலும் வெளிநாடுகள் மத்தியிலும் வெகுவாக பாராட்டப்பட்டது.

2006-ல் அரசியல் சாசனத்தை திருத்தி, நெருக்கடி காலம் அல்லாத சமயங்களில் சாதாரண பொது மக்களுடன் இணைந்து ராணுவத்தினர் குற்றம் செய்தால் அதனை பொது நீதிமன்றங்களில் விசாரிக்கலாம் என்று சட்டம் இயற்றினார்.

2007-ல் ஜனாதிபதி தேர்தலில் அப்துல்லாஹ் குல் போட்டியிட்டார். அப்துல்லாஹ் குல் அவர்களின் மனைவி தலையை மறைத்து புர்கா அணியும் பழக்க முடைவர். நாட்டின் முதல் பெண்மணி தலையை மறைத்து மத அடையாளத்துடன் இருப்பது நாட்டின் அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்றார் ராணுவ தலைமைத் தளபதி.

பிரச்சினையை பெரிதாக்கி ஆட்சியை கவிழ்க்க முயன்றனர் இடதுசாரிகள். தலைமை தளபதியை சந்தித்து பிரச் சினையை முடிவுக்கு கொண்டு வந்த எர்துகான், அதிபர் தேர்தலை கவனிப்பது ராணுவத்தின் வேலை அல்ல என்று பேட்டியளித்தார். அதிபராக அப்துல்லாஹ் குல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ராணுவத்தின் அதிகாரத்தை மேலும் குறைக்கும் வகையில், 2010-ல் நாடு முழுவதும் மக்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தி, சுப்ரிம் மிலிட்டரி கவுன்சிலில் இருந்து ராணுவ அதிகாரிகள் வெளியேற்றப் பட்டனர். ராணுவத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திடம் வந்தது.

தொடர்ந்து 2003-ல் ஆட்சிக் கவிழ்ப்பு சதியில் ஈடுபட்ட ராணுவத்தினர் மீது வழக்கு தொடரப்பட்டது. ஏழு ஆண்டுகள் நடந்த அவ்வழக்கு தொடர்பாக 2010-ம் ஆண்டு பணியில் இருந்த, ஓய்வு பெற்ற அட்மிரல்கள், தளபதிகள், ஜெனரல்கள் 49 பேர் உட்பட 365 பேர் கைது செய்யப்பட்டனர். உலகமே துருக்கியை அதிசயமாக பார்த்தது. பல ஆண்டுகள் நடந்த இவ்வழக்கில் 2012-ல் தீர்ப்பு கூறப்பட்டது. 300 பேர் சிறைத் தண்டனை பெற்றனர்.

### இஸ்லாமிய மயமாக்கலில் எர்துகான்

இஸ்லாமிய ஆட்சியை இலட்சியமாக கொண்ட எர்துகான் படிப்படியாகவே இஸ்லாமியமயமாக்கலை நோக்கி அந்நாட்டை நகர்த்தி வருகிறார். தொடர்ந்து மூன்று முறை ஆட்சியை பிடித்த அவர், மூன்றாவது முறை ஆட்சியை பிடித்த பிறகு மிக வேகமாக இஸ்லாமிய மயமாக்கலில் ஈடுபட்டு வருகிறார்.

நாத்திகன் முஸ்தஃபா கமாலின் துருக்கிய இனவாத கொள்கையால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் துருக்கியில் வாழும் குர்துகள். மொழி அடிப்படையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த அவர்களுடன் இஸ்லாமியவாதிகளின் அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. குர்து மொழி பள்ளிக் கூடங்கள், பள்ளிவாசல்களில் குர்து மொழியில் பயான் போன்றவற்றுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தொழில்முறை விபச்சாரிகளுக்கு அனுமதி அட்டை புதுப்பித்தல் எண்ணிக்கை குறைப்பு சட்டம் (2012) இளநிலை பட்டப் படிப்புக்கான நுழைவுத் தேர்வில் அவரவர் மதம் குறித்த கேள்வி இடம் பெறும் சட்டம் (2012), பொது இடங்களில் பெண்கள் தலை முக்காடு அணியும் உரிமை சட்டம் (2013) , மத அடையாளிங்களில் வாழும் சட்டம், கல்லூரி மாணவ மாணவியர் தனித்தனி விடுதிகளில் தங்கும் சட்டம் (2013) , மது விற்பனை மற்றும் விளம்பர தடை சட்டம் (2013), பொது இடங்களில் அநாகரிகமாக நடப்பதற்கு தடை சட்டம் (2013) பெண் எம்.பிக்கள் தலையை மறைக்கும் உரிமை சட்டம் (2013) தியேட்டர்கள் மற்றும் நாடக அரங்குகளை தனியார் மயப்படுத்தும் திட்டம் ஆகியவை அவரால் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட இஸ்லாமிய மயமாக்கல் சட்டங்கள். வெளிநாட்டு விவகாரங்களில் எர்துகான்

நஜ்முத்தீன் எர்பகானுக்கு பிறகு உலக முஸ்லிம்களின் விவகாரங்களில் எர்துகானின் அரசு தலையிடத் தொடங்கியது.

முஸ்லிம் ஏழை நாடான சோமாலியா 2011-ம் ஆண்டு கடும் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டது. ஐ.நா. கணிப்பின் படி சுமார் 12 மில்லியன் முஸ்லிம்கள் அங்கு பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

அச்சமயத்தில் துருக்கி பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகான் சோமாலியாவுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு உதவிகளை வாரி வழங்கினார். சர்வதேச நாடுகளின் உதவி சோமாலியாவுக்கு கிடைத்ததில் எர்துகானின் பயணத்திற்கு பங்குண்டு. 2012 ஆகஸ்டு மாதம் பர்மாவில் வாழும் ரோஹிங்கோ முஸ்லிம்களுக்கெதிராக மிக மோசமான கலவரம் நடந்தது.

> *எர்துகான், எகிப்து ராணுவம் முர்சி ஆட்சியை கவிழ்த்த போது கடும் கண்டனம் தெரிவித்தார். 2013 மார்ச் மாதம் ஆளும் கட்சி மாநாட்டில், எகிப்தில் நடந்த ஆட்சி கவிழ்ப்பு மொசாதின் சதி வேலை, எகிப்து ராணுவம் மொசாதின் பின்னால் நிற்கிறது, இதற்கு என்னிடம் வீடியோ ஆதாரம் உள்ளது என்று இஸ்ரேலை அவர் குற்றம் சாட்டினார்.*

அச்சமயத்தில் துருக்கி பிரதமர் எர்துகானின் மனைவியும், துருக்கி வெளியுறவு அமைச்சர் அஹ்மத் தாவூத் அவ்குலு () உம் ரோஹிங்கியோ பகுதிக்கு பாதிக்கப்பட்ட முஸ்லிம்களைச் சந்தித்தனர். முஸ்லிம்கள் நாதியற்றவர்கள் அல்ல. அவர்களை அநியாயமாக கொன்றொழிப்பதற்கு என்று பர்மா ராணுவ அரசுக்கு உணர்த்தினர். குறிப்பாக

மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகள் மற்றும் பாலஸ்தீன விவகாரத்தில் அதிகம் கவனம் செலுத்தி வருபவர் எர்துகான்.

2010-ம் ஆண்டு காசா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலை இனப் படு கொலை என்று சொன்ன எர்துகான், 2013 ல் ஐ.நா சபையின் வியன்னா மாநாட்டில் சியோனிசத்தை மனித குலத்துக்கு எதிரான குற்றம் என்றார்.

2011-ம் ஆண்டு எகிப்து புரட்சிக்கு பின்பு இக்வான்களை தேர்தலில் போட்டியிட வற்புறுத்திய எர்துகான், எகிப்து ராணுவம் முர்சி ஆட்சியை கவிழ்த்த போது கடும் கண்டனம் தெரிவித்தார். 2013 மார்ச் மாதம் ஆளும் கட்சி மாநாட்டில், எகிப்தில் நடந்த ஆட்சி கவிழ்ப்பு மொசாத்தின் சதி வேலை, எகிப்து ராணுவம் மொசாத்தின் பின்னால் நிற்கிறது, இதற்கு என்னிடம் வீடியோ ஆதாரம் உள்ளது என்று இஸ்ரேலை அவர் குற்றம் சாட்டினார். சர்வதேச இஸ்லாமியப் பேரறிஞர் டாக்டர் யூசுப் அல் கர்ளாவியின் கருத்துக்கு மதிப்பளித்து எகிப்துக்கான துருக்கி தூதரை வாபஸ் பெற்ற எர்துகான், சிரியா உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட 20 இலட்சம் சிரிய அகதிகளுக்கு துருக்கியில் இடம் தந்தார். இஸ்லாமிய உலகின் அதிகாரம் மிக்க மனிதராக விளங்கிடும் எர்துகானை வீழ்த்திட பல முனைகளில் இருந்து சதிகள் பின்னப்படவே செய்கின்றன.

### 100 தடவை கொலை முயற்சி

ஆட்சிக்கு வந்த காலத்தில் இருந்து எர்துகானின் மீது 100 தடவை கொலை முயற்சி நடந்துள்ளது. பல தடவை இடது சாரி தீவிரவாதிகளால் அவர் மீது குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளன. ஒரு தடவை மொசாத்தும் அவரை கொலை செய்ய முயன்றதாக ஜோர்தான் பத்திரிக்கை தெரிவிக்கிறது.

பல்வேறு பிரச்சினைகளை கிளப்பி, அவரை முடக்க முயன்றாலும் எல்லா வற்றையும் அல்லாஹ்வின் அருளால் புத்தி சாலித்தனத்துடன் சமாளிக்கும் அவர், 2024ல் புதிய இஸ்லாமிய துருக்கி எனும் இலட்சி யத்தை நோக்கி முன்னேறி வருகிறார். அல்லாஹ் அவருக்கு உதவி செய்வானாக!

●

---

25-ம் பக்க தொடர்ச்சி

துருக்கிய தேசியவாதம் (- ) எனும் புதிய தேசியவாத கொள்கையை கொண்டு வந்த நாத்திகர்கள் துருக்கி மொழி, துருக்கி இனம் என்று பிரச்சாரம் செய்தார்கள்.

இத்தகைய இனவாத, மொழி வெறி கொள்கைகளுக்கு இஸ்லாத்தில் இடமில்லை என்பதால் இஸ்லாத்தை கடுமையாக எதிர்த்த இவர்கள், இஸ்லாத்தை சுமந்து நின்ற கிலாஃபத்தையும் அழித்திட முடிவெடுத் தார்கள்.

### கிலாஃபத் வீழ்ந்தது

ஆரம்பத்தில் இரகசியமாக செயல்பட்ட இந்நாத்திகர்கள், யூதர்கள் மற்றும் ஐரோப்பியர்களிடமிருந்து பண உதவி கிடைத்த பின்பு தங்களின் பிரச்சாரத்தை முடுக்கி விட்டனர். அரசின் எல்லா துறைகளிலும் புகுந்த இவர்கள் கடைசியில் ராணுவத்திலும் நுழைந்தனர்.

ராணுவ தளபதி அன்வர் பாஷா, உள்துறை அமைச்சர் தலஅத் பாஷா , சிரியா ஆளுநர் ஜமால் பாஷா போன்றவர்கள் இவர்களில் முக்கியமானவர்கள்.

துரதிர்ஷ்டவசமாக முதல் உலகப் போரில் துருக்கி ஜெர்மனியுடன் அணி சேர்ந்திருந்தது. போரில் துருக்கியும், ஜெர்மனியும் தோற்றதை அடுத்து போர் முடிவுக்கு வந்தது.

பிரிட்டனும், அதன் நேச நாடுகளும் இஸ்தான்பூல் நகரை ஆக்கிரமித்தன. நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியானது. நாட்டின் பாதுகாப்பை நிலைநாட்டிட முஸ்தஃபா கமால் ராணுவ தளபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மத மறுப்பாளரான முஸ்தஃபா கமால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது கிலாஃபத் விரைவில் நீக்கப்படலாம் என்ற செய்தி மக்களுக்கு மத்தியில் பரவலானது.(: )

ராணுவத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த கமால், பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் 1924-ம் ஆண்டு மார்ச் 3-ந் தேதி கிலாஃபத் நீக்கப்பட்டதாக அறிவித்தார். கடைசி கலீஃபா அப்துல் மஜீது நாட்டின் எல்லையில் கொண்டு விடப்பட்டு, வெளி நாட்டுக்கு செல்லுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டார். கலீஃபாவின் உறவினர்கள் மீது நாட்டை விட்டு ஓடும் அளவுக்கு கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டது.

●




# கமாலின் ஆட்சியில் நாத்திக நாடான துருக்கி

**கிலாஃபத்தை** அழித்த பிறகு, அதா துருக் (துருக்கியின் தந்தை) என்று தன்னைத் தானே அழைத்துக் கொண்ட முஸ்தஃபா கமால் பாஷா, ராணுவ தளபதியாக இருந்து, தன்னை நாட்டின் அதிபராக அறிவித்துக் கொண்டார்.

எதிர்ப்போரை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கிய அவர், புதிய அரசியல் சாசனம் எழுதும் முயற்சியில் ஈடுபட்டார். தனது மரணம் வரை தாமே அதிபராக தொடர்வதற்கான சலுகையை அரசியல் சாசனத்தில் இடம் பெறச் செய்தார்.

மன்னராட்சி போய் மக்களாட்சி வர வேண்டும் என்று பேசிய அவர், இஸ்லாமிய வாதிகள் யாரும் அரசியல் கட்சி தொடங்கி விடக்கூடாது என்பதற்காக மத நம்பிக்கை யாளர்களின் அரசியல் கட்சிக்கு அங்கீகாரம் கிடையாது எனும் விதிமுறையை அரசியல் சாசனத்தில் இடம் பெறச் செய்தார்.

### இஸ்லாத்திற்கெதிரான போர்

சுமார் ஏழு நூற்றாண்டுகள் இஸ்லாத்தின் நிழலில் வீற்றிருந்த நாடு துருக்கி. இஸ்லாத்தின் மூலம் தான் உலகின் அகன்ற நிலப்பரப்பு துருக்கி கிலாஃபத்துக்கு கிடைத்தது. இதனை மறவாமல் ஆட்சி நடத்தினார்கள் துருக்கி கலீஃபாக்கள்.

ஆனால் மதமறுப்பாளரான முஸ்தஃபா கமால், அதற்கு நன்றி செலுத்தவில்லை என்பது மட்டுமல்ல.. இஸ்லாம் தந்த அகன்ற நிலப்பரப்பினை தமது துருக்கி இனவாதம், தேசிய வாதம் போன்ற கொள்கையால் சிதறடித்து, கடைசியில் ஒரு சில மாகாணங்கள் மட்டுமே கொண்ட நாத்திக நாடாக்கினார்.

என்னமோ இஸ்லாம் தான் அந்நாட்டிற்கு ஆபத்தை தந்ததைப் போன்றும்; இஸ்லாத்தினால் தான் அந்நாடு முன்னேறாமல் இருந்து விட்டதைப் போன்றும் இஸ்லாத்திற்கெதிராக பெரும் போரையே அவர் தொடுத்தார்.

சண்டை செய்வதற்கு வேறு களமே இல்லாததைப் போன்றும்; கவனம் செலுத்துவதற்கு வேறு துறையே இல்லாததைப் போன்றும் தமது பத்தாண்டு கால ஆட்சியில் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் அழிக்கும் நடவடிக்கைகளில் இறங்கினார் கமால்.

### தொப்பி யுத்தம்

துருக்கி நாட்டுக்கென்று தனி அடையாளம் எதுவும் இன்றி மேற்கத்திய சமூகத்துடன் துருக்கியர்கள் இணைந்து விட வேண்டும் என்று அவர் ஆணையிட்டார்.

அதற்காக வன்முறையையும், எல்லை மீறிய அடக்குமுறைகளையும் அவர் கையாண்டார். ஆண்கள் துர்பூஷ் எனும் துருக்கி பாரம்பரிய தொப்பியை அணிவதை கைவிட்டு விட்டு மேற்கத்திய பாணியில் யூதர்கள் அணியும் வட்ட தொப்பியை அணிய வேண்டும் என்றார். அத்துடன் பெண்கள் தலையை மறைப்பதையும் தண்டனைக்குரிய குற்றமாக்கினார்.

இது மோசமான இரத்தக்களரிக்கு வழிவகுத்தது. முஸ்லிம்கள் பாரம்பரியத் தொப்பிகளையே அணிய விரும்பினர். கமால் அதைத் தடுத்தார். வரலாற்றில் தொப்பி யுத்தம் என்றழைக்கப்படும் அவ்வன்முறையில், பத்தாயிரம் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

### மொழியின் எழுத்து வடிவத்தை மாற்றுதல்

வக்ஃப் சொத்துக்களை அரசுடமையாக்குதல், மதரஸாக்களை பள்ளிக் கூடங்களாக மாற்றுதல், அரபு மொழியில் பாங்கு சொல்வதற்கு தடை, புர்கா அணிய தடை, அரசு அலுவலகங்கள், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் மற்றும் உத்தி யோகப்பூர்வமான பணிகளில் பெண்கள் தலையை மறைப்பதற்கு தடை, முஸ்லிம் ஆண்கள் தாடி வைக்க தடை என ஏராளமான இஸ்லாமிய விரோத

சட்டங்களை அந்நாட்டில் அமல்படுத்திய கமால், இஸ்லாமிய ஒளியும், இஸ்லாமிய எழுச்சியும் மீண்டும் அந்நாட்டில் வந்து விடக்கூடாது என்பதற்காக இன்னொரு நடவடிக்கையிலும் இறங்கினார்.

அது அரபு வடிவத்தில் இருந்த துருக்கி மொழியை ஆங்கில வடிவத்துக்கு மாற்றிய தாகும்.

முன்னர் மங்கோலியர்கள் இஸ்லாமிய நிலப்பரப்பை கைப்பற்றிய சமயத்தில், இஸ்லாமிய அறிவெழுச்சியின் மீது ஏற்பட்ட காழ்ப்புணர்வால் ஈராக் நூலகங்களில் இருந்த கோடிக்கணக்கான புத்தகங்களை யூப்ரடீஸ் நதியிலும், டைக்ரீஸ் நதியிலும் வீசியெறிந்தார்கள்.

முஸ்தஃபா கமால் நூல்களை கொளுத்தும் வேலையிலோ அல்லது அவற்றை நதிகளில் வீசும் வேலைகளிலோ ஈடுபடவில்லை. மாறாக இஸ்லாத்தை பின்பற்றுவதை விட்டு மக்களை தடுத்திட துருக்கி மொழியின் எழுத்து வடிவத்தை மாற்றினார்.

இதனால் பண்டைய கால இலக்கி யங்களை மக்கள் படிக்க முடியாமல் போனது. அலமாரிகளில் வைத்து அவை பூட்டப்பட்டன. சிலந்திகள் அவற்றில் வலை பின்னியிருந்தன. (source: A study of History by Toynbee P. 618,619)

பெண்கள் தலையை , முகத்தை மூடி நடமாடுதல், முஸ்லிம் ஆண்கள் தொப் பியோ, தலைப்பாகையோ கொண்டு தலையை மூடியிருத்தல் போன்ற 13 நூற்றாண்டுகளாக முஸ்லிம்களிடம் இருந்து வந்த வழக்கம் மாறி, முஸ்லிம் ஆண்கள் வெறுந்தலையுடன் இருத்தல், முஸ்லிம் பெண்கள் தலையை மறைக்காமல் வெளியில் நடமாடுதல் போன்றவை கமால் ஆட்சியில் தான் முஸ்லிம் உலகில் அறிமுகமானது.

கமாலின் எண்ணப்படி யூத தொப்பி அணிவதை முஸ்லிம் சமூகம் ஏற்கவில்லை என்றாலும் கமால் தொடங்கி வைத்த வெறுந்தலை கலாச்சாரம் துருக்கி நாட்டுக்கு அப்பால் எல்லா நாடுகளிலும் பரவவே செய்தது.

### மேற்கத்திய நாகரிக மோகம்

இஸ்லாத்தை தடை செய்த முஸ்தஃபா கமால், மேற்கத்திய நாகரிகம் எனும் புதிய இறைவனை துருக்கி மக்களிடம் வணங்கச் சொன்னார். கல்வியிலும், அறிவியல் வளர்ச்சியிலும் முன்னேறிட மேற்கத்திய நாகரித்தை பின்பற்ற வேண்டும் என்று வற்புறுத்தினார்.

மேற்கு உலகுடன் இணைந்து வாழ் வதை அரசியல் சாசன விதிமுறை ஆக்கிய அவர், துருக்கி மக்கள் ஒரே இரவில் மேற் கத்திய பாணியில் உடை, உணவு பழக் கங்களை ஆக்கிட நிர்ப்பந்தப்படுத்தினார்.

இதனை எதிர்ப்பவர்கள் துருக்கியின் சுமை என்று கருதினார். அவர்கள் இருந்தால் நாடு முன்னேறாது என்று அறிவித்த அவர், பொதுமக்களைக் கொல்வதை ஹலால் ஆக்கினார்.

*மதச்சார்பற்ற கல்வி என்று கூறி இஸ்லாத்தை மக்கள் கற்பதை முழுமையாக தடுத்த கமால் அதாதுர்க், தனித்தனியாக இயங்கி வந்த ஆண் - பெண் பள்ளிக் கூடங்கள் மற்றும் கல்லூரி களை ஆண் - பெண் கலப்பு பள்ளிகளாகவும், கல்லூரி களாகவும் மாற்றினார்.*

ராணுவத்தைப் பயன்படுத்தி சொந்த நாட்டு மக்களை அவர் நடத்திய விதத்தை பார்த்து மேற்கத்திய நாடுகளே ஆச்சரியப் பட்டன. கிலாஃபத்தை வீழ்த்துவதற்குத் தான் அவர்கள் அவரை வளர்த்தார்களே தவிர அதற்கும் மேலாக கமால் செய்த அட்டூழியங் களை கண்டு அவர்களே அசந்து போயினர். இதனால் தான் ஐரோப்பாவின் நோயாளி என்று துருக்கி அழைக்கப்பட்டது.

மதச்சார்பற்ற கல்வித்துறை நாடு முழுவதும் உள்ள இஸ்லாமிய மத்ரஸாக் களை அரசுடமைக்கிய அவர், தனியார் பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகள் நடத்துவதற்கான அனுமதியை ரத்து செய்தார்.

மதச்சார்பற்ற கல்வி என்று கூறி இஸ்லாத்தை மக்கள் கற்பதை முழுமையாக தடுத்த அவர், தனித்தனியாக இயங்கி வந்த ஆண் - பெண் பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகளை ஆண் - பெண் கலப்பு பள்ளிக் கூடங்களாகவும்,கல்லூரிகளாகவும் மாற்றினார்.

பள்ளிக்கூடம் மற்றும் கல்லூரிகளில் தனித்தனி ஆண்-பெண் விடுதிகளை இணைந்து தங்கிடும் விடுதிகளாக மாற்றினார். இது அதற்கு முன்னர் துருக்கி முஸ்லிம்கள் நினைத்து பார்க்காத ஒன்று.

**ராணுவத்திற்கு தரப்பட்ட எல்லை மீறிய அதிகாரம்**

ராணுவ தளபதியாக இருந்து, ராணுவத்தின் உதவியினால் அதிபரான கமால் அரசியல் சாசனத்தில், ராணுவத்திற்கு அதிக அதிகாரங்களை வழங்கினார்.

அரசியல் சாசனத்திற்கு எதிராகவோ அல்லது மத தொடர்புடனோ தேர்ந் தெடுக்கப்பட்ட ஓர் அரசு செயல்படுகிறது என்று சந்தேதித்தால் அரசை கலைத்திடும் அதிகாரத்தை ராணுவத்திற்கு தந்தார்.

பட்ஜெட்டில் ராணுவத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு, சிவில் விவகாரங்களில் ராணுவ தலையீடு, நிதி விவகாரத்தை ராணுவம் கையாளுதல், நீதிபதிகளை மாற்றுதல் என எல்லா உரிமைகளும் ராணுவத்திற்கு தரப்பட்டன.

ஆக மொத்ததில் தாம் ஆட்சி செய்த பத்தாண்டுகளில், இஸ்லாமிய துருக்கியை முழுமையான நாத்திக நாடாக மாற்றினார் முஸ்தஃபா கமால்.

# அடக்குமுறைகளால் அழியாத இஸ்லாம்

**முஸ்தஃபா கமால்** மரணமான பொழுது இஸ்லாத்தின் வெளி அடை யாளங்கள் அனைத்தும் அந்நாட்டில் துடைத்தெறியப்பட்டிருந்தன.

ஏழு நூற்றாண்டுகள் அந்நாடு இஸ் லாமிய உலகின் தலைமை வகித்ததா? என்று ஆச்சரியப்பட்டு கேட்கும் அளவுக்கு இஸ் லாமிய அடையாளங்கள் அந்நாட்டில் இல்லாமல் போனது. முஸ்லிம் துருக்கி மேற் கத்திய துருக்கியாக மாற்றப் பட்டிருந்தது.

**மீண்டும் இஸ்லாம் துளிர்த்தது**

இவ்விடம் ஒன்றை கூறியாக வேண்டும். தமது அடக்குமுறையாலும், வன்முறை யாலும் அந்நாட்டில் இருந்து இஸ்லாத்தின் வெளி அடையாளங்களைத் தான் சர்வாதிகாரி கமாலினால் அகற்ற முடிந்ததே தவிர அந்நாட்டு மக்களின் உள்ளங்களில் இருந்து இஸ்லாத்தை அவரால் அகற்ற இயலவில்லை.

இதில் அவர் தோற்றுத் தான் போனார். அல் குர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடுவான். அல்லாஹ்வின் ஒளியை தம் வாய்களினால் (ஊதி) அணைத்து விடுவதற்கு அவர்கள் நாடுகின்றனர். இறை நிராகரிப்பாளர்கள் வெறுத்தாலும் சரி, அல்லாஹ் தனது ஒளியை முழுமைப்படுத்துவான். (அல்குர்ஆன் 61:8)

பல வகையான அடக்குமுறைகளுக்கு அப்பாலும் துருக்கி மக்கள் தங்களின் உள்ளங்களில் இஸ்லாத்தை பாதுகாக்கவே செய்தனர்.

இவ்விடம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் ஐரோப் பாவின் பெரும் பெரும் தாக்குதல்களையும், தொடர்ந்து பின்னப்பட்ட நுண்சதிகளையும் முறிந்தெறிந்தவர்கள் முஸ்லிம்கள்.

இது போன்ற சதி வலைகளையும், ஈவு இரக்கமற்ற தாக்குதல்களையும் ஐரோப் பாவினால் அல்லது முஸ்லிமல்லாத மற்ற சமுதாயத்தினரால் ஒரு நாள் கூட தாக்குப் பிடிக்க முடியாது.

ஆனால் எவ்வளவு அடக்குமுறைகளை கையாண்டாலும், எத்தனை ஆண்டுகள் துன்புறுத்தினாலும் அதனை எதிர்த்து சமாளித்திடும் ஆற்றலும், ஈமானை பாது காக்கும் மன வலிமையும் முஸ்லிம்களுக்கு உண்டு. அது வல்லோன் அல்லாஹ் முஸ்லிம்

களுக்கு தந்த அளப்பெரும் அருள். துருக்கி இஸ்லாமியர்கள் இதற்கு சிறந்த முன்மாதிரி. பல்லாயிரம் முஸ்லிம்களின் மரணத்துக்கு பின்பும் அரசுக்கு தெரியாமல் நகர்ப் புறங்களிலும், கிராமப்புறங்களிலும் அரசுக்கு தெரியாமல் இஸ்லாமிய பிரச்சாரங்களை அந்நாட்டு உலமாக்களும், இஸ்லாமிய இலட்சியவாதிகளும் நடத்தவே செய் தார்கள். விளைவு அந்நாட்டில் இஸ்லாத்தை இலட்சியமாக கொண்ட இஸ்லாமிய வாதிகள் உருவானார்கள்.

**இஸ்லாமிய வாதிகளின் வெற்றி**

ஒரு நாட்டில் இராணுவத்தினர் ஆட்சியை கைப்பற்றினால் கண்துடைப் புக்காக பொதுவாக்கெடுப்பு என்றொரு நாடகத்தை அரங்கேற்றுவார்கள். அதில் அவர்களை அதிகமான பேர் ஆதரித்ததாக முடிவு வெளியிடப்படும். பொது வாக் கெடுப்புதான் நடத்தப்படுமே தவிர பலரும் போட்டியிடும் தேர்தல் நடத்தப்படாது. இது பன்னெடுங்காலமாக ராணுவ சர்வாதி காரிகள் செய்து வரும் கண்துடைப்பு நாடம்.

துருக்கியை பொருத்தவரை கிலாஃபத் நீக்கப்பட்ட பின்பு 26 ஆண்டுகள் வரை பொதுத் தேர்தல் நடத்தப்படவில்லை. சர்வாதிகாரி முஸ்தஃபா கமால் இறந்து 16 ஆண்டுகள் கழித்து துருக்கியில் பொதுத் தேர்தல் நடந்தது. துருக்கி மக்கள் தங்களின் இஸ்லாமிய விசுவாத்தை நிரூபித்தனர். இஸ்லாத்தை இலட்சியமாக கொண்ட வர்களின் கட்சியான டெமாக்ரடிக் கட்சி ஆட்சியை பிடித்தது.

இஸ்லாமிய இலட்சியவாதி அத்னான் முன்தரிஸ் 1950 ல் பிரதமர் பதவி ஏற்றார்.

# இஸ்லாமியாவதிகளின் ஆட்சிகளை கவிழ்த்த இராணுவம்

**கி.பி. 1950** முதல் 1960 வரை பத்தாண்டுகள் துருக்கி பிரதமர் பதவி வகித்தார் அத்னான் முன்தரிஸ். அந்த பத்து ஆண்டுகளில், கமால் காலத்தில் மேற் கொள்ளப்பட்ட இஸ்லாமிய விரோத காரி யங்களை ஒவ்வொன்றாக அகற்றி முழுமை யான இஸ்லாமிய நாடாக மாற்றிடும் வேலையில் அத்னான் ஈடுபட்டார்.

தொடர்ந்து நாட்டை இஸ்லாமிய மயமாக்கும் பணியில் அவர் ஈடுபட்டு வந்த நிலையில், அரசியல் சாசனத்திற்கு முரணாக அத்னான் செயல்படுவதாக கூறி, இராணுவம் நெருக்கடி நிலையை அறிவித்து, ஆட்சியை டிஸ்மிஸ் செய்தது. அனைத்து அரசியல் கட்சிகளும் தடை செய்யப்பட்டன.

26 ஆண்டுகளாக துருக்கி மொழியில் தொழுகைக்கான அதான் எனும் பாங்கு சொல்லப்பட்டு வந்த நிலையை மாற்றி அரபியில் பாங்கு சொல்ல அனுமதித் தார். கைப்பற்றப்பட்ட வக்ஃப் சொத்துக்களை திரும்ப ஒப்படைத்தார். தனியார் பள்ளிக் கூடங்கள் நடத்திட அனுமதி தந்தார்.



தொடர்ந்து அத்னான் கைது செய்யப் பட்டார். பின்னர் தூக்கிலிடப்பட்டார். ராணுவத்தின் அராஜகத்தை எதிர்த்து மக்கள் கொந்தளித்தனர். எதிர்த்து போராடிய மக்கள் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப் பட்டனர். பல்லாயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர். பலர் கைது செய்யப் பட்டனர்.

### இரண்டாவது முறை ஆட்சிக் கவிழ்ப்பு

நெருக்கடி நிலையை நீக்கிய பிறகு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது. தேர்தலில் இஸ்லாமியவாதிகள் போட்டியிட அனுமதிக்கப்படவில்லை.

தொடர்ந்து முடக்கப்பட்ட இஸ்லாமியவாதிகள் நீதிக் கட்சி என்ற பெயரில் கட்சி தொடங்கினார்கள். 1968-ல் நடந்த தேர்தலில் நீதிக் கட்சி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை பிடித்தது. துருக்கி மக்கள் மீண்டும் தங்களின் இஸ்லாமிய விசுவாசத்தை நிரூபித்தனர்.

இஸ்லாத்தின் எழுச்சியை பொறுக்க இயலாமல் இடதுசாரி தீவிரவாதம் துருக்கியில் தோற்றுவிக்கப்பட்டது. இடதுசாரி தீவிரவாதிகள் ஆட்சிக்கு தொடர்ந்து இடையூறு செய்து வந்தனர்.

இஸ்லாமியவாதிகளின் கட்சி அலுவலகங்கள் தாக்கப்பட்டன. தலைவர்கள் முடக்கப்பட்டனர். ஒரு கட்டத்தில் இது ஆளும் இஸ்லாமியவாதிகளின் கட்சித் தொண்டர்களுக்கும், இடதுசாரி தீவிரவாதிகளுக்கும் கடும் மோதலாக வெடித்தது. ஏற்கனவே திட்டமிட்டப்படி, நாட்டை சீரமைப்பதாக கூறி, சிவில் நிர்வாகத்தில் ராணுவம் தலையிட்டது. ஆட்சி கலைக்கப் பட்டது. ராணுவத்தை எதிர்த்து போராடிய ஐந்து இலட்சம் மக்கள் கைது செய்யப் பட்டனர். அவர்களில் ஐம்பது பேர் தூக்கிலிடப்பட்டனர். நூற்றுக்கணக்கோனார் சிறையில் இருந்தே மரணித்தனர்.

### மூன்றாவது முறை ஆட்சிக் கவிழ்ப்பு

கமாலின் கொள்கையை பாதுகாக்கவும், மதச்சார்பின்மையைக் காக்கவும் தவறிவிட்டதாக, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு 1980-ம் ஆண்டு மூன்றாவது முறையாக ராணுவத்தினால் கலைக்கப்பட்டது. அனைத்து அரசியல் கட்சிகளும் தடை செய்யப்பட்டன. பிரதமர் உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

### நான்காவது முறையாக ஆட்சிக் கவிழ்ப்பு

துருக்கி அரசியலில் நஜ்முத்தீன் எர்பகானின் பங்களிப்பை மறக்க இயலாது. தற்போதைய துருக்கி பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகானின் அரசியல் ஆசானாக திகழ்ந்த அவர், முழுமையான இஸ்லாமியவாதியாக வாழ்ந்தவர்.

நாத்திக துருக்கியை இஸ்லாமிய துருக்கியாக மாற்றுவதற்கு பாடுபட்ட இவரின் கட்சி பல தடவை தடை செய்யப்பட்டிருக்கின்றது.

ஒவ்வொரு தடைக்கு பின்பும் வேறொரு பெயரில் கட்சி ஆரம்பித்து, தேர்தலில் களம் காண்பார் எர்பகான்.

நேஷனல் ஆர்டர் ஃபார்ட்டி(National Order Party (1970–71), நேஷனல் ஸ்லேவேஷன் கட்சி, National Salvation Party (1972- 1981),, வெல்ஃபர் ஃபார்ட்டி Welfare Party ( 1987-1998), வெர்ச்சு ஃபார்ட்டி (1998- 2001), ஃபெலிசிட்டி பார்ட்டி (Felicity Party 2003- 2011) என பல கட்சிகளை நடத்திய அவர், 1996 ம் ஆண்டு ஆட்சியைப் பிடித்தார்.

சுமார் ஓர் ஆண்டு காலம் பதவியில் இருந்த அவர், முஸ்லிம் நாடுகளுடன் உறவை புதுப்பித்தார். அத்துடன் சியோனிசத்தை கடுமையாக எதிர்க்கவும் செய்தார்.

இது அதற்கு முன்னர் எந்த பிரதமரும் தைரியமாக செய்யாதது. எர்பகானின் இஸ்லாமியப் பற்று துருக்கியின் மதச்சார்பின்மைக்கு ஊறுவிளைவிக்கிறது என்று கூறி அவரது ஆட்சியை ராணுவம் டிஸ்மிஸ் செய்ததோடு, அவரது கட்சியையும் தடை செய்தது.



# இஸ்லாமிய நாடாகும் துருக்கி

தடை. தடைக்கு மேல் தடை. தொடர்ந்து அரசியலில் ராணுவத் தலையீடு, ஆட்சிக் கவிழ்ப்பு, அரசியல் கட்சிகளை தடை செய்தல், பிரதமருக்கு தூக்கு தண்டனை, எதிர்த்து போராடும் பொது மக்களை இலட்சக்கணக்கில் கைது செய்து செய்தல், தூக்கில் போடுதல், என அத்துணை அடக்குமுறைகளையும் தாண்டி இஸ்லாமிய எழுச்சியை நோக்கி வீறுநடை போட்டு வரும் நாடு துருக்கி.

சுமார் ஏழு நூற்றாண்டுகள் இஸ்லாமிய உலகின் தலைமை பொறுப்பை ஏற்றிருந்த துருக்கி, ஒரு நூற்றாண்டு இடைவெளிக்கு பிறகு மீண்டும் அம்மகா பொறுப்பினை நோக்கி வேகமாக முன்னேறி வருகிறது. இஸ்லாமிய உலகின் முன்மாதிரி நாடாக விளங்கும் அந்நாடு மீண்டும் உலகை தலைமையை ஏற்றால், அது முஸ்லிம்களின் பொற்காலமாக அமையும் என்பதில் சந்தேக மில்லை.

### துருக்கி கிலாஃபத்தின் தொடக்கம்

நபித்தோழர் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நாங்கள் நபி (ஸல் அவர்களைச் சுற்றி அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தோம். அப்போது அவர்களிடம் கேட்கப்பட்டது. அல்லாஹ்வின் தூதரே!..குன்துன்தீனிய்யா, ரோம் நகரம், இரண்டில் எது முதலில் கைப்பற்றப்படும்?

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹிர்கலின் தலைநகரம் ( குஸ்துன்தீனிய்யா) முதலில் கைப்பற்றப்படும். (நூல்: முஸ்னது அஹ்மது 6645)

நபிமொழியில் இடம்பெற்ற குஸ்துன் தீனிய்யா இப்போதைய துருக்கியில் உள்ள இஸ்தான்பூல் நகரமாகும். ரோம் நகரம் இப்போதைய இத்தாலியின் தலைநகராகும். (இன்ஷா அல்லாஹ் அதுவும் இஸ்லாமிய நகரமாக மாறும்.)

வலிமை மிக்க ரோமப் பேரரசின் தலைநகரம் முஸ்லிம்கள் வசமாகும் என்று நபி (ஸல்) அவர்கள் முன்னறிப்பு செய்திருந் ததால், நபித்தோழர்கள் காலத்திலேயே அந்நகரை கைப்பற்ற முயற்சி மேற்கொள்ளப் பட்டது.

கலீஃபா முஆவியா (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் குஸ்துன்தீனிய்யா (கான்டாண்டிநோபிள்) நகரை கைப்பற்ற அவர்களின் மகன் யஸீதின் தலைமையில் படை அனுப்பப்பட்டது. அப்படையில் நபித்தோழர் அபூஅய்யூப் அல் அன்சாரி (ரழி) அவர்கள் இடம் பெற்றிருந்தார்கள். யுத்தத்தில் வீர மரணமுற்ற அபூ அய்யூப் அல் அன்சாரி (ரழி) அவர்களின் அடக்கஸ்தலம் இன்றும் இஸ்தான்பூல் நகரில் உள்ளது.

எனினும் இஸ்லாமிய படைகளால் அப்போரில் அந்நகரை முழுமையாக கைப்பற்ற இயலவில்லை.

காலங்கள் கடந்தன. எட்டு நூற்றாண்டு களுக்கு பிறகு அண்ணலாரின் அந்த முன்னறிப்பு நடந்தேறியது. கி.பி. 1453 ம் ஆண்டு மே 29 (ஹிஜ்ரி 857 ஜமாஅதுல் அவ்வல் பிறை 2 ) செவ்வாய் கிழமை அன்று உதுமானிய கலீஃபா சுல்தான் முஹம்மது பின் முராது அவர்களால் குஸ்துன்தீனிய்யா நகரம் கைப்பற்றப்பட்டது.

இஸ்லாத்துக்கு வாக்களிக்கப்பட்ட நகரமாக அது திகழ்ந்ததால் அதனையே தலைநகரமாக ஆக்கி ஆட்சி செய்தார்கள் துருக்கி உஸ்மானிய ஆட்சியாளர்கள்.

**துருக்கியில் கிலாஃபத் மலர்ந்தது**

அப்பாசிய கிலாஃபத் வீழ்ச்சியுற்ற பின்பு இஸ்லாமிய உலகில் துருக்கியே மிகவும் வலிமையான நாடாக இருந்ததால், கிலாஃபத் எனும் இஸ்லாமிய தலைமை உஸ்மானியப் பேரரசிடம் வந்து சேர்ந்தது.

முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், பௌத்தர்கள் என எல்லா மதத்தினரையும் அரவணைத்து மிகச் சிறந்ததொரு நல்லாட்சி நடத்தினார்கள் உஸ்மானிய கலீஃபாக்கள். அவர்களின் அமைச்சரவையில் கிறிஸ்தவர்கள், யூதர்கள் ஷீஆக்கள் என அனைத்து தரப்பினரும் இடம் பெற்றிருந்தனர்.

கிரேக்கம், பெல்ஜியம் மட்டுமல்ல.. பிரான்ஸ் வரை கைப்பற்றி, ஐரோப்பாவின் மூன்றில் இரண்டு பகுதிகளை தமது ஆதிக்கத்தினுள்ள வைத்திருந்த உஸ்மானியப் பேரரசு, 17ம் நூற்றாண்டிற்கு பிறகு வீழ்ச்சியுறத் தொடங்கியது.

**வீழ்ச்சிக்கான காரணங்கள்**

18 ம் நூற்றாண்டில் மேற்குலகில் நடந்த கல்விப் புரட்சிகள், தொழில் புரட்சிகள், சிந்தனைப் புரட்சிகள் ஆகியன ஐரோப்பாவின் இதயத்தில் வாழ்ந்த துருக்கியர்களை திரும்பிப் பார்க்க வைத்தன.

அறிவியல் மற்றும் ராணுவத்தில் ஐரோப்பாவுக்கு நிகராகவும், நவீன காலத்திற்கேற்றவாறும் துருக்கி இருக்க வேண்டும் என்பதற்காக சுல்தான் மூன்றாம் சலீம் (1789- 1807) அவர்களும், சுல்தான் மஹ்மூத் (1808 1839 ) அவர்களும் கொண்டு வந்த ராணுவ சீர்திருத்தங்களை பழமைவாதிகள் எனப்படுவோர் கடுமையாக எதிர்த்தனர்.

கிறிஸ்தவர்களையும், யூதர்களையும் நாடு பின்பற்றுகின்றது என்று அவர்கள் குற்றம் சாட்டினர். (Source: Conflict between Islamic thought and western thought by Abul hasan ali nadwi)

ஐரோப்பாவிலும், ரஷ்யாவிலும் மதத்தை பொது வாழ்வில் இருந்து அகற்றிய பிறகே அந்நாடுகளால் அறிவியல் மற்றும் ராணுவ துறைகளில் முன்னேற முடிந்தது என்று ஐரோப்பாவில் பொதுக்கருத்து நிலவி வந்த நிலையில், பழமைவாதிகளின் எதிர்ப்பு அதற்கு தூபம் போடுவதாக அமைந்தது. விளைவு நாத்திகக் கொள்கை துருக்கியில் உருவானது. இஸ்லாமோ அறிவிலுக்கு எந்த தடையும் விதிக்காத மார்க்கம். முஸ்லிமல்லாதவர்களின் தொழில் நுட்பங்களை பயன்படுத்திட இஸ்லாத்தில் எந்த தடையும் இல்லை.

அகழ் யுத்தத்தில் நபி (ஸல்) அவர்கள் பாரசீகர்களின் ராணுவ உத்தியை பயன்படுத்தியுள்ளார்கள். பாரசீகர்கள் நெருப்பை கடவுளாக வழிபடுபவர்கள். முஸ்லிம்கள் அல்ல.. அவ்வாறே கடிதங்களுக்கு முத்திரையிடுவதில் ரோமானியர்களின் நிர்வாக முறையை பின்பற்றினார்கள். ரோமர்களோ கிறிஸ்தவர்கள். துருக்கி உஸ்மானிய கலீஃபாக்கள் முற்போக்கான இஸ்லாமிய அறிஞர்களின் வழிகாட்டலில் தான் ஆட்சி நடத்தினார்கள் என்றாலும் சிறு கூட்டமான பழமைவாதிகளின் எதிர்ப்பை பயன்படுத்தி இஸ்லாத்திற்கெதிரான பிரச்சாரத்தை தொடங்கினார்கள் நாத்திகர்கள்.

> *பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் 1924-ம் ஆண்டு கிலா:பத் நீக்கப்பட்டதாக அறிவித்தார். கடைசி கலீ:பா அப்துல் மஜீது நாட்டின் எல்லையில் கொண்டு விடப்பட்டு, வெளி நாட்டுக்கு செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார். கலீ:பாவின் உறவினர்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டது.*

ஐரோப்பாவை அப்படியே ஈமான் கொண்டிருந்த இந்நாத்திகர்கள், அங்கிருந்து தேசியவாத கொள்கையையும் இறக்குமதி செய்திருந்தார்கள். துருக்கி கிலாஃபத்தில், துருக்கியர்கள், அரபிகள், குர்துகள் என எல்லா இனத்தவர்களுக்கும் திறமைக்கேற்ற பதவிகள் தரப்பட்டிருந்தன.

.... தொடர்ச்சி 28-ம் பக்கம்

# திருக்குர்ஆன் பாடம்

மௌலவி இல்யாஸ் ரியாஜி



## பாடம் - 16

وَلَقَدْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ وَقَفَّيْنَا مِنْۢ بَعْدِهٖ بِالرُّسُلِ وَاٰتَيْنَا عِيْسَى ابْنَ مَرْيَمَ
الْبَيِّنٰتِ وَاَيَّدْنٰهُ بِرُوْحِ الْقُدُسِؕ اَفَكُلَّمَا جَآءَكُمْ رَسُوْلٌۢ بِمَا لَا تَهْوٰٓى اَنْفُسُكُمُ
اسْتَكْبَرْتُمْۚ فَفَرِيْقًا كَذَّبْتُمْ وَفَرِيْقًا تَقْتُلُوْنَ ﴿۸۷﴾ وَقَالُوْا قُلُوْبُنَا غُلْفٌؕ بَلْ لَّعَنَهُمُ
اللّٰهُ بِكُفْرِهِمْ فَقَلِيْلًا مَّا يُؤْمِنُوْنَ ﴿۸۸﴾ وَلَمَّا جَآءَهُمْ كِتٰبٌ مِّنْ عِنْدِ اللّٰهِ مُصَدِّقٌ
لِّمَا مَعَهُمْ ۙ وَكَانُوْا مِنْ قَبْلُ يَسْتَفْتِحُوْنَ عَلَى الَّذِيْنَ كَفَرُوْا ۖۚ فَلَمَّا جَآءَهُمْ مَّا
عَرَفُوْا كَفَرُوْا بِهٖ فَلَعْنَةُ اللّٰهِ عَلَى الْكٰفِرِيْنَ ﴿۸۹﴾

*அல்பகரா : 87-89*

*மேலும் நிச்சயமாக நாம் மூஸாவுக்கு வேதத்தை வழங்கினோம். அவருக்குப் பிறகு தொடர்ந்து (நம்) தூதர்களை அனுப்பினோம். மர்யமின் மைந்தர் ஈஸாவுக்குத் தெளிவான சான்றுகளைத் தந்து பரிசுத்த ஆன்மாவைக் கொண்டு அவருக்கு வலுவூட்டினோம். உங்கள் மனம் விரும்பாதவற்றை (நம்) தூதர் உங்களிடம் கொண்டு வரும் போதெல்லாம் நீங்கள் ஆணவம் கொண்டு (புறக்கணித்து தூதர்களில்) சிலரைப் பொய்யர் என்றீர்கள். சிலரைக் கொலை செய்தீர்கள் அல்லவா?*

*‘எங்கள் உள்ளங்கள் மூடப்பட்டுள்ளன’ என்கின்றனர். அல்ல. அவர்களின் இறைமறுப்பின் காரணமாக அல்லாஹ் அவர்களைச் சபித்து விட்டான். எனவே, அவர்கள் மிகக் குறைவாகவே நம்பிக்கை கொள்வார்கள்.*

*அவர்களிடமுள்ள (தவ்ராத்) வேதத்தை உண்மையாக்கக் கூடிய ஒரு வேதம் (குர்ஆன்) அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு வந்தபோது (அதை ஏற்க மறுத்த) அவர்கள் இதற்கு முன்னர் இறைமறுப்பாளர்களுக்கு எதிராக (இந்த வேதத்தின் மூலம்) வெற்றி தேடிக் கொண்டிருந்தனர். அப்படியிருக்க (ஏற்கனவே) அவர்கள் அறிந்திருந்த (வேதமான)து வந்தபோது அதை ஏற்க மறுத்துவிட்டனர். இந்த (வேதத்தை) மறுப்பவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் நிலவும்.*

**அத்தியாயம் அல்பகரா . வசனங்கள் 87, 88, 89**

**ஷஹீத் ஸய்யித் குதுப்** (ரஹ்) கூறுகின்றார்: "நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மதீனாவில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் இஸ்லாத்தைத் தழுவ மறுத்து இந்த சன்மார்க்கத்தைப் புறக்கணித்து வந்தனர். இஸ்ரவேல் சமுதாயத்தின் இறைத்தூதர்கள் போதித்த போதனைகளே எங்களுக்குப் போதுமானது. அந்த அறிவுரைகளை ஏற்று அந்த மார்க்கத்தின்படி நாங்கள் வாழ்ந்து வருவதால் இன்னொரு மார்க்கமோ இன்னொரு இறைத்தூதரோ அவரின் போதனைகளோ தேவை இல்லை என்று கூறிக் கொண்டிருந்தனர்.

ஆனால், உண்மை என்ன? இஸ்ரவேலர்கள் தம்முடைய இறைத்தூதர்களையும் அவர்களின் அறப் போதனைகளையும் அவர்களின் மார்க்கத்தையும் எப்படி எதிர்கொண்டார்கள். இதில் அவர்களின் நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவுபடுத்தி யூதர்களை இழிவுபடுத்துகின்றது இவ்வசனம்.

தங்களுடைய மன விருப்பங்களுக்கு ஏதுவாக இறைத்தூதர்களின் போதனைகள் இல்லாவிட்டால் தங்களின் புத்தியைக் காட்டி விடுவார்கள் இஸ்ரவேலர்கள். (அதாவது புறக்கணித்து விடுவார்கள்) என்றும் இவ்வசனம் உறுதிபடத் தெரிவிக்கிறது.

வல்ல இறைவன், அல்லாஹ் மூஸா நபியை வேதம் கொடுத்து இஸ்ரவேல் சமுதாயத்துக்குத் தூதராக அனுப்பி வைத்தான். அந்த நபியிடம் அவர்கள் எப்படியெல்லாம் நடந்து கொண்டார்கள் என்பதை இதற்கு முந்தைய பல வசனங்களில் அவர்களிடமே உரையாடும் தோரணையில் கூறியிருந்தான் அல்லாஹ்.

இந்த (87வது) வசனத்தில் கூடுதலான தகவல் இடம்பெறுகின்றது. இஸ்ரவேல் சமுதாயத்தில் இறைத்தூதர்கள் ஒருவர் பின் ஒருவராக தொடர்ச்சியாக வந்து கொண்டேயிருந்தனர். கடைசியாக மர்யமின் மைந்தர் ஈஸா நபி வந்தார். அவருக்குப் பல தெளிவான அற்புதங்களை அல்லாஹ் வழங்கினான். பரிசுத்த ஆன்மா எனும் ஜிப்ரீல் (அலை)வின் மூலம் அவரை அல்லாஹ் பலப்படுத்தினான்.

இப்படி தொடர்ச்சியாய் வந்த நபிமார்கள் கூட்டத்தையும் கடைசியாய் வந்த ஈஸா நபியையும் இவர்கள் எப்படி வரவேற்றார்கள்? சில நபிமார்களைப் பொய்யர்கள் என்றனர். சில நபிமார்களைக் கொலை கூடச் செய்தார்கள். இதை அவர்களால் மறுக்கவே முடியாது. அவர்களின் வேத நூல்களே இதைக் கூறுகின்றன. அவர்களின் செயல்களுக்கு அவர்களின் வேதங்களே சாட்சி கூறிக் கொண்டிருக்கின்றன.

அவ்வப்போது அடிமனதில் தோன்றுகின்ற ஆசைகளுக்கு ஏற்பவும் இறைத்தூதர்களான நேர்வழி காட்டிகளும் மார்க்கங்களும் சட்டங்களைச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் விரும்புவதும் எப்போது ஒரு சமுதாயத்தில் ஏற்படும் தெரியுமா? மனிதனின் இயல்பு பாழ்பட்டுப் போன பிறகும் மனித இனத்திடம் பிணைந்தே இருக்கின்ற நியாய உணர்வு முற்றாக அழிந்த பிறகும் தான் ஏற்படும்.

இறைமார்க்கம் என்பது உறுதியான அடித்தளத்தில் அமைந்திட வேண்டும். மன இச்சைக்கு ஏற்ப வளைந்து விடக் கூடியதாக இல்லாமல் மனக் கிளர்ச்சியால் வீழ்த்த முடியாத உறுதி மிக்கதாகத்தான் மார்க்கத்தின் அடித்தளம் அமைந்திட வேண்டும் என்றே மனிதர்கள் அனைவரின் இயல்பும் விரும்பிக் கொண்டிருக்கிறது.

விருப்பு, வெறுப்பு, ஆரோக்கியம், சுகக் குறைவு என எல்லாச் சூழ்நிலைகளிலும் ஒரு மனிதன் இறைமார்க்கத்துக்குக் கட்டுப்பட்டு நடந்திட வேண்டும் என்றே மனித இயல்பு விரும்பும்.

மார்க்கம் மனித இச்சைகளுக்கு ஏற்ப வளைந்திட வேண்டும் என்று மனிதனின் இயல்பான சுபாவம் சொல்லாது. ஆனால், யூதர்களோ தமது மன விருப்பங்களுக்கு ஏற்ப மார்க்கம் வளைந்திட வேண்டும் என்று விரும்பினர். இதற்குக் காரணம் மனிதனாகப் பிறந்த அனைவரிடமும் பிணைந்திருக்கக் கூடிய நல்ல சுபாவங்கள் அவர்களிடம் கெட்டுப் போய் விட்டது என்பது தான்.

முஸ்லிம்களுக்கு அல்லாஹ் இஸ்ரவேல் சமுதாயத்தின் வரலாற்றை எடுத்துரைக்கிறான். இதன் மூலம் முஸ்லிம்களை எச்சரிக்கிறான்.

இஸ்ரவேல் சமுதாயத்தினர் அல்லாஹ்வின் கட்டளைகளைப் புறக்கணித்து அவனது மார்க்கத்தைக் கைவிட்டு மனம் போன போக்கில் வாழ்ந்தனர். வழிகாட்ட வந்த (இறைத்தூது)வர்களைக் கொன்றனர். பொய்யர்கள் என்றனர். அதனால் அவர்களிடம் அல்லாஹ் ஒப்படைத்திருந்த

(அமானத்) பொறுப்புகள் (கிலாஃபத்) இறை யாட்சியை இறைவனின் பிரதிநிதியாய் இருந்து பூமியில் நிலைநாட்டுதல் ஆகியன வற்றை அவர்களிடமிருந்து பறித்து விட்டான்.

முஸ்லிம்களே...! நீங்களும் இஸ்ரவேலர் களைப் போல நடந்து கொண்டால் அவர்களுக்கு ஏற்பட்ட கதிதான் உங்க ளுக்கும் ஏற்படும். மேலும், இஸ்ரவேல் சமுதாயம் பல பிரிவுகளாகப் பிளந்து பட்டு இழிவுக்கும் அவமானத்துக்கும் ஆளாகி துர்பாக்கியமடைந்தது போல் நீங்களும் ஆகிவிடுவீர்கள்.

*இறுதித்தூதர் ஒருவர் வருவார் என்று தங்களின் வேதமான தவ்ராத் கூறுவதை நம்பிய யூதர்கள் 'இறுதி நபியை நம்பி ஏற்றுக் கொண்டு அவருடன் அணி சேர்ந்து நம்முடைய எதிரிகளை நாம் வெல்ல வேண்டும்' என்று நெடுங்காலமாகக் காத்திருந்தனர்.*

எனவே, அல்லாஹ்வுக்கும் அவனின் திருத்தூதருக்கும் கட்டுப்படுங்கள். இறை வேதத்துக்கும் இறைமார்க்கத்துக்கும் உங்களின் மனஇச்சைகளைக் கட்டுப்பட வையுங்கள். உங்களுடனும் உங்கள் முன்னோர் களுடனும் அல்லாஹ் செய்திருந்த உடன் படிக்கைகளை நிறைவேற்றுங்கள். இறை வேதத்தை உறுதியுடன் பற்றிப் பிடித்து அதில் கூறப்பட்டிருப்பவற்றிலிருந்து படிப் பினை பெற்றுக் கொள்ளுங்கள். இல்லை யென்றால் இஸ்ரவேல் சமுதாயத்தின் கதிதான் உங்களுக்கும் ஏற்படும் என்று எச்சரிக்கிறான்.

(நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)

**ரூஹுல் குத்ஸ்**

பரிசுத்த ஆன்மா என்பது ஜிப்ரீல் (அலை) அவர்களைக் குறிக்கிறது.

அல்குத்ஸ் (பரிசுத்த) என்ற வார்த்தை அல்லாஹ்வையும் ரூஹ் (ஆன்மா) என்ற வார்த்தை ஜிப்ரீலையும் குறிக்கிறது. அதாவது தந்தை என்று எவருமில்லாமல் அல்லாஹ் வால் நேரடியாகப் படைக்கப்பட்டவர் என்பதே 'ரூஹுல் குத்ஸ்' என்பதன் பொரு ளாகும் என்கிறார் அறிஞர் நுஹாஸ் (ரஹ்) அவர்கள்.

ஈஸா நபி தந்தையின்றி படைக்கப் பட்டதால் அவர்களுக்கு ரூஹுல்லாஹ் என்று கூறப்படுகிறது. (நூல்: குர்த்துபீ)

**நபிமார்கள் கொலை**

இஸ்ரவேலர்கள் சில இறைத்தூதர் களை பொய்யர்கள் என்று கூறியதாகவும் சில இறைத்தூதர்களைக் கொலை செய்து விட்டதாகவும் அல்லாஹ் கூறுகின்றான்.

ஈஸா நபி முஹம்மது நபி (ஸல்) போன்ற முக்கிய நபிமார்களைப் பொய்யர் என்றும் கூறினார்கள். கொலை செய்திடவும் முயன் றார்கள். இருவரையும் அல்லாஹ் காப்பாற்றி னான்.

ஈஸா நபியைக் கொலை செய்திட முயன்றபோது அவர்களை வானத்துக்கே உயர்த்திவிட்டான். மேலும், அல்லாஹ் கூறு கிறான்:

நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் தூதரான மர்யமின் மைந்தர் ஈஸா மஸீஹைக் கொன்றுவிட்டோம் என்று அவர்கள் கூறுவதாலும் (சபிக்கப்பட்டனர்). அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை. சிலுவையில் அறையவுமில்லை. அவர்களுக்கு அவரைப் போன்று ஒருவன் காட்டப் பட்டான். இதில் மாற்றுக் கருத்துடைய வர்கள் சந்தேகத்திலேயே இருக்கின்றனர். வெறும் யூகத்தைப் பின்பற்றுவதன்றி வேறு உறுதியான ஞானம் எதுவும் அவர்களிடம் இல்லை. நிச்சயமாக அவர்கள் அவரைக் கொல்லவே இல்லை. (4:157) ஆனால், அவரை அல்லாஹ் தன்னளவில் உயர்த்திக் கொண் டான். அல்லாஹ் வலிமை மிக்கவனாகவும் நுண்ணறிவுத்திறன் மிக்கவனாகவும் இருக் கிறான். (4:158)

இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை விஷம் கொடுத்தும் சூனியம்

செய்தும் கொலை செய்திட முயன்றனர் யூதர்கள். (காண்க: புகாரி ஹதீஸ் எண்: 4249 மற்றும் அல்ஃபலக் அத்தியாயம் விரிவுரை)

மேலும் யஹ்யா (அலை), ஸகரிய்யா (அலை) ஆகிய நபிமார்களைக் கொன்று விட்டனர் யூதர்கள். (நூல்: குர்த்துபீ)

நிகழ்கால உலகில் நபிமார்களின் வாரிசு களான சங்கைக்குரிய இஸ்லாமிய அறிஞர்கள் பலர் யூதர்களின் கொலைப் பட்டியலில் இருந்திருக்கிறார்கள் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது.

### வசனம் 88ன் விளக்கம்

முந்தைய வசனங்களில் இஸ்ரவேலர்கள் தமது நபிமார்களிடம் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது விரிவாகக் கூறப் பட்டிருந்தது. இனி புதிய நபியும் இறுதி நபி யுமான முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் எப்படி நடந்து கொண்டார்கள் என்று கூறுகிறது திருக்குர்ஆன்.

தங்களின் மன விருப்பத்துக்கு ஏற்பவே மார்க்கம் இருந்திட வேண்டும் என்று விரும்பிய இஸ்ரவேலர்கள் அதற்கு மாறாக கட்டளை வந்த போது ஆணவத்தால் அதைப் புறக்கணித்தனர். இறுதி நபியின் போதனைகளும் அவர்களின் மன விருப்பங் களுக்கு ஏற்றபடி இல்லை என்பதோடு இறுதி நபித்துவம் இஸ்ரவேல் குலத்துக்குக் கிடைக்காமல் போய் விட்டதே என்றொரு பொறாமையும் அவர்களுக்கு இருந்தது.

எனவே, இறுதி நபியின் போதனைக்கு செவி சாய்த்திடவில்லை. "எங்கள் உள்ளங்கள் புதிய உபதேசங்கள் நுழைந்து விடாதபடி மூடப்பட்டுள்ளது" என்றனர்.

இப்படி அவர்கள் கூறியதற்குக் காரணம் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பின் பற்றும் முஸ்லிம்களுக்கு வெறுப்பேற்று வதற்காக இருக்கலாம். அல்லது "நாங்கள் முஸ்லிம்களாக மாற முடியாது. ஏனென்றால் உங்கள் உபதேசங்களைக் கேட்க எங்களால் முடியாது" என்று கூறுவதாகக் கொள் ளலாம்.

ஆனால், உண்மை என்னவென்றால் அவர்களள் ஏற்கனவே பல நபிமார்களை ஏற்க மறுத்த காரணத்தால் அல்லாஹ் அவர் களைச் சபித்து விட்டான். நேர்வழியை விட்டும் வெகுதூரத்தில் அவர்களைத் தடுத்து நிறுத்தி விட்டான். (நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)

*தங்கள் இனத்துக்கே நபித்துவம் கிடைக்க வேண்டும். நபித்துவத்தின் போதனைகள் கூட தங்களின் அபிலாஷை களுக்குத் தடை விதிக்காதபடி இருந்திட வேண்டும். இல்லாவிட்டால் எதிர்ப்போம். இப்படியொரு இழிவான மறுப்பையே இஸ்ரவேலர்கள் முன்வைத்தனர்.*

### குறைவாகவே

"எனவே, அவர்கள் மிகக் குறைவாகவே நம்பிக்கை கொள்வார்கள்" என்று இவ்வசனத்தில் அல்லாஹ் கூறியுள்ளான்.

இதற்கு இரண்டு வகையான விளக் கங்கள் கூறப்படுகின்றன. "இஸ்ரவேலர்களில் மிகவும் சொற்ப நபர்களே நம்பிக்கை (ஈமான்) கொள்வார்கள்" என்று சில விரிவுரையாளர்களும் "அவர்களின் (ஈமான்) நம்பிக்கை மிகக் குறைவாகவே இருக்கும்" என்று சில விரிவுரையாளர்களும் கூறு கின்றனர். (நூல்: இப்னு கதீர்)

அடுத்த வசனம், இஸ்ரவேலர்களின் இறைமறுப்பு எவ்வளவு இழிவானது என்பதை விரித்துரைக்கிறது.

### வசனம் 89.ன் விரிவுரை

இறுதித்தூதர் ஒருவர் வருவார் என்று தங்களின் வேதமான தவ்ராத் கூறுவதை நம்பிய யூதர்கள் 'இறுதி நபியை நம்பி ஏற்றுக் கொண்டு அவருடன் அணி சேர்ந்து நம் முடைய எதிரிகளை நாம் வெல்ல வேண்டும்' என்று நெடுங்காலமாகக் காத்திருந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்தபடியே தவ்ராத் வேதத்தில் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட இறுதிநபி முஹம்மது (ஸல்) அவர்கள் வந்தார்கள். குர்ஆன் என்ற வேதத்தையும் அல்லாஹ்விடமிருந்து பெற்று வந்தவர்கள். 'தவ்ராத் ஓர் இறைவேதமே' என்றே குர்ஆனும் கூறியது.

இஸ்ரவேலர்கள் எதிர்பார்த்த நபியும் வேதமும் வந்தபோது அதை ஏற்பதற்குப் பதிலாகப் புறக்கணித்தனர் இஸ்ரவேலர்கள். தங்களுடைய சமுதாயத்துக்கு இறுதி நபித்துவம் எனும் பாக்கியம் கிடைக்காமல் போய் விட்டதே என்ற கோபமும் பொறாமையுமே இதற்குக் காரணம். இறுதிநபித்துவம் அரபு இனத்துக்குப் போய்விட்டதால் கோபமும் பொறாமையும் கொண்டனர்.

ஆக, தாங்கள் விரும்பும் (தங்களின்) இனத்துக்கே நபித்துவம் கிடைக்க வேண்டும். நபித்துவத்தின் போதனைகள் கூட தாங்கள் விரும்பும்படி தங்களின் அபிலாஷைகளுக்கு தடை விதிக்காதபடி இருந்திட வேண்டும். இல்லாவிட்டால் எதிர்ப்போம். ஏற்க மாட்டோம் என்ற மறுப்பு, இழிவான மறுப்பு இப்படியொரு இழிவான மறுப்பையே இஸ்ரவேலர்கள் முன்வைத்தனர்.

அறிஞர் முஹம்மது பின் இஸ்ஹாக் (ரஹ்) கூறுகின்றார்: முஆத் பின் ஜபல் (ரலி) அவர்கள் யூதர்களிடம், 'அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். நாங்கள் இணை வைப்பவர்களாக இருந்தபோது எங்களுக்கெதிராக முஹம்மது (ஸல்) அவர்களைக் கொண்டு தானே நீங்கள் உதவி தேடிக் கொண்டிருந்தீர்கள். பிற் காலத்தில் அவர்கள் இறைத்தூதராக அனுப்பப்படுவார்கள் என்று கூறி நபி (ஸல்) அவர்களின் குணங்களைக் கூட வருணித்தீர்களே.... என்று கூறினார்கள்.

அதற்கு பனூநளீர் குலத்தைச் சார்ந்த சல்லாம் பின் முஷ்கிம் என்ற யூதன் "இவர் கூறுவது நாங்கள் அறியாத புதிய விஷயமாக இருக்கிறது. நாங்கள் கூறிக் கொண்டிருக்கிறது இவரைப் பற்றியல்ல" என்றான். அப்போது தான் 89-வது வசனம் இறங்கிற்று.

அறிஞர் முஜாஹித் (ரஹ்) கூறுகிறார்: (வேத) மறுப்பாளர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் நிலவும் என்று இவ்வசனம் கூறுவது யூதர்களைத்தான். (நூல்: இப்னு கதீர்)

**... தொடரும் இன்ஷா அல்லாஹ்**


## தாலிபானின் பிடியில்...

**யுவான்னி ரிட்லி**

தமிழில் : மு.குலாம் முஹம்மத்



இரண்டாம் பதிப்பு
பிப்ரவரி 2013
பக்கங்கள் : 202
விலை : ரூ. 90/-

**இப்போது கிடைக்கிறது....**

வெளியீடு
**வேர்கள் வெளியீட்டகம்**
52/1, மண்ணடி தெரு, 4வது தளம், மண்ணடி,
சென்னை-1. Tel: 044-45566909


## வைகறை வெளிச்சம்
**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| பின் அட்டை | ரூ.6000/- |
| உள் பக்க அட்டை | ரூ.4500/- |
| முழுப்பக்கம் | ரூ.1000/- |
| அரை பக்கம் | ரூ.500/- |
| விசிட்டிங் கார்டு அளவு | ரூ.250/- |

வைகறை வெளிச்சம் இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்; இதழ் வளர்ச்சிக்கும் உதவுங்கள்.

## வைகறை வெளிச்சம்
**துபையில் பெற...**
+971551390923

**தஞ்சையில்**
**வைகறை வெளிச்சம்**
**கிடைக்குமிடம்**
நைனார் முஹம்மது
**89401 53872**



அறிஞர் அபுல் ஹசன் அலீ நத்வீ

தொடர் — 25

### முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

# அலாதியான அன்பு ஈடு இணையற்ற பாசம்

25

மொழிபெயர்ப்பு
**அஹ்மது ஜலாலுதீன் நத்வி**

**அபூபக்கர் சித்தீக் (ரலி)** அவர்கள் இஸ்லாத்தின் தொடக்க காலத்திலேயே அதை ஏற்றவர். அதனால் வந்த இழப்புகளை இன்முகத்துடன் ஏற்றவர்.

ஒரு நாள் இஸ்லாத்தின் எதிரிகள் அபூபக்கர் (ரலி) அவர்களை அடித்துத் துவைத்தார்கள். ஏறி மிதித்தார்கள். உத்பா பின் ரபீஆ என்பவன் அருகே வந்தான். தன் செருப்பைக் கழற்றி அபூபக்கர் (ரலி) அவர்களை அடித்தான். அவனது செருப்பின் கீழிருந்த ஆணிகள் அபூபக்கர் (ரலி) அவர்களின் முகத்தில் காயங்களை ஏற்படுத்தின. ரத்தம் வழியத் தொடங்கிற்று. அவன் அடியை நிறுத்தவில்லை.

அவர்களைக் கீழே தள்ளினான் உத்பா. வயிற்றில் ஏறி அமர்ந்தான். தன் பருத்த உடலின் பாரங்களை அபூபக்கர் (ரலி) மீது அழுத்தினான். தொடர்ந்து அடிகளைத் தந்து கொண்டிருந்தான். மூக்கு எது, முகம் எது என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு ரத்த மயமானது அபூபக்கர் (ரலி) அவர்களின் முகம். களைத்துப் போய்த் திரும்பினான் உத்பா.

அப்போது அங்கு வந்தது பனூதய்ம் என்ற குலத்தினர் ஒரு துணியில் சுற்றி அபூபக்கர் (ரலி) அவர்களின் உடலை அள்ளிச் சென்றார்கள். இல்லத்துக்குச் சென்று உடலை இறக்கி வைத்தபோது அவர்கள் இறந்து போய்விட்டார்கள் என்றே அனைவரும் நம்பினர்.

தம் இல்லத்தில் இறக்கி வைக்கப்பட்ட அபூபக்கர் (ரலி) அவர்கள், மயக்கம் தெளிந்து கண் விழித்தபோது அன்றைய பகல் பொழுது முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. கண் விழித்த அபூபக்கர் (ரலி) அவர்கள் பேசிய முதல் வார்த்தை 'அல்லாஹ்வின் திருத்தூதர் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?' என்பதுதான்.

அவர்களைச் சுற்றி நின்று கொண்டிருந்த அவர்களின் நலம் விரும்பிகள் வாய்க்கு வந்தபடி பேசினார்கள்; பழித்தார்கள். எந்த முஹம்மதால் இவர் இந்த நிலைக்கு ஆளாகிக் கிடக்கிறாரோ, அவரைப் பற்றியல்லவா முதலில் விசாரிக்கிறார் என்று விநோதமாகப் பார்த்தார்கள் அபூபக்கர் (ரலி) அவர்களை.

அனைவரும் அங்கிருந்து அகன்றார்கள். 'இவருக்கு எதையாவது உண்ணவும் பருகவும் கொடுங்கள்' என்று அபூபக்கர் (ரலி) தாயிடம் கூறி விட்டுப் போனார்கள். அனைவரும் வெளியேறிய பின் அபூபக்கர் (ரலி) அவர்களின் தாயாரும் தன் பங்குக்குத் திட்டினார்.

'அல்லாஹ்வின் திருத்தூதருக்கு என்ன ஆயிற்று? அவர்கள் எங்கே?' என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். அவர்களின் தாயார், 'நீ கேட்கும் நபரைப் பற்றி எனக்கென்ன தெரியும்? எனக்கொன்றும் தெரியாது' என்றார். அதற்கு 'என்னருமைத் தாயே...! கத்தாபின் மகள் உம்முல் ஜமீலிடம் கேட்டுப் பாருங்கள். ஏதாவது தகவல் கிடைக்கும்' என்றார்கள் அபூபக்கர் (ரலி).

அபூபக்கர் (ரலி) அவர்களின் தாய், உம்முல் ஜமீலிடம் வந்து, 'என் மகன் அபூபக்கர் உன்னிடத்தில் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றி

விசாரித்து வரச் சொன்னார்' என்று கூறினார்கள். அதற்கு உம்முல் ஜமீல் என்ற மாதரசி (நபியைப் பற்றிய ரகசியம் வெளியே தெரிந்து விடக் கூடாது. அதே நேரத்தில் அபூபக்கர் (ரலி) அவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்துவிட்டு நபியைப் பற்றி அவர்களிடம் நேரில் பேசி விடலாம் என்றெண்ணி 'எனக்கு அபூபக்கரையும் தெரியாது; முஹம்மதையும் தெரியாது. நான் உங்கள் மகனை நேரில் சந்திக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் நான் சந்திக் கிறேன்' என்று கூறினார்கள்.

'சரி, போவோம்' என்று அபூபக்கர் (ரலி) அவர்களின் அன்னை கூற, இருவரும் புறப்பட்டார்கள். வீட்டில் அபூபக்கர் (ரலி) என்ற அந்த மாமனிதர் படுக்கையில் வீழ்ந்து மரணத்தை எதிர்நோக்கியிருப்பவரைப் போலக் கிடக்கும் காட்சியைப் பார்த்து அதிர்ந்தார் உம்முல் ஜமீல் (ரலி).

பெருங்குரலில் இப்படிச் சொன்னார்: 'உம்மை இந்த கதிக்கு ஆளாக்கியவர்கள் நிச்சயமாக பெரும்பாவிகளே. இதற்காக அல்லாஹ் அவர்களை நிச்சயம் தண்டிப் பான்.'

அபூபக்கர் (ரலி) அவர்கள் 'அண்ணல் நபிக்கு என்ன ஆயிற்று? அவர்கள் எங்கே?' என்று கேட்டார்கள். அதற்கு உம்முல் ஜமீல் (ரலி), 'நாம் பேசுவதை உங்களின் தாய் கேட்டுக் கொண்டிருக்கிறாரே...?' என்று கேட்க, 'இவர்களால் பிரச்னை வராது' என்று அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறி னார்கள்.

'நபி (ஸல்) அவர்கள் பத்திரமாக, பாது காப்பாக இருக்கிறார்கள்' என்றார் உம்முல் ஜமீல் (ரலி). 'எங்கே இருக் கிறார்கள்?' என்று அபூபக்கர் (ரலி) அவர்கள் கேட்க, 'இப்னுல் அர்கமின் இல்லத்தில்' என்றார் உம்முல் ஜமீல் (ரலி). அப்போது, 'அல்லாஹ்வின் மீது சத்தியமாகச் சொல்கிறேன், நான் நபி (ஸல்) அவர்களை நேரில் சந்திக்கும் வரை உண்ணவோ, பருகவோ மாட்டேன்' என்றார்கள் அபூபக்கர் (ரலி).

அவர்களின் மன உறுதியைக் கண்ட அவ்விருவரும் மக்காவின் வீதியில் மக்கள் நடமாட்டம் குறைந்து ஊரடங்கிய பின் அவரை கைத்தாங்கலாக நபி (ஸல்) அவர் களிடம் அழைத்துச் சென்றார்கள். (நூல்: அல்பிதாயா வந்நிஹாயா)

உஹதுப் போர். முஸ்லிம் வீரர்கள் பலர் ஷஹீதானார்கள் அந்தப் போரில். நபி (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்றொரு வதந்தி மதீனாவெங்கும் பரவியது. இதைக் கேள்விப்பட்ட சில பெண்கள் பெருமானாருக்கு என்ன ஆயிற்றோ என்ற கவலையில் உஹதுப் போர்க் களத்துக்கே ஓடோடி வந்தனர்.

நபி (ஸல்) அவர்கள் பற்றிய தகவல் அறிந்திட ஓடி வந்த ஒரு பெண்ணிடம், 'உன் தந்தை, சகோதரர், கணவர் அனைவருமே போரில் கொல்லப்பட்டு விட்டார்கள்' என்று சொன்னார்கள் போர் வீரர்கள். அதைக் காதிலேயே போட்டுக் கொள் ளாதவர் போல அப்பெண்மணி, 'நபி (ஸல்) அவர்களுக்கு என்ன ஆயிற்று?' என்று கேட்டார். அதற்கு, 'புகழுக்குரிய அல்லாஹ் வின் உதவியால் நீங்கள் விரும்புவது போலவே அவர்கள் பத்திரமாக இருக் கிறார்கள்' என்று கூறினார்கள்.

அதற்கு அப்பெண், 'இப்போதே நான் நபி (ஸல்) அவர்களைக் காண வேண்டும். அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? என்று காட்டுங்கள்' என்று கூறினார். பெரு மானாரை நேரில் கண்ட பின் அப்பெண், 'நீங்கள் நலமாக இருக்கிறீர்கள் என்பதை நேரில் கண்ட பின் எனக்கு நேர்ந்த சோத னைகள் எல்லாம் ஒன்றுமில்லாமல் போய் விட்டன அல்லாஹ்வின் திருத்தூதரே...!' என்றார். (நூல்: பைஹகீ, இப்னு இஸ்ஹாக்)

ஹுபைப் (ரலி) என்றொரு நபித்தோழர் எதிரிகளை உளவுபார்த்திட நபி (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்த குழுவில் இவரும் ஒருவர். எதிரிகளிடம் சிக்கிக் கொண்டார். கழுவில் ஏற்றப்பட்டார். கொலைக் களத்தில் நிறுத்தப்பட்டிருந்த அவரிடம் எதிரிகள், 'ஹுபைபே... நீ நிற்கும் இதே கொலைக் களத்தில் முஹம்மதை (ஸல்) அவர்களை நிறுத்திட விரும்புவாயா?' என்று கேட்டனர்.

இதைக் கேட்ட ஹுபைப் (ரலி) உரக்கச் சொன்னார்கள்: 'மகத்தான அல்லாஹ்வின் சத்தியமாகச் சொல்கிறேன். ஒருபோதும் இதை நான் விரும்ப மாட்டேன். அண்ணல் நபியின் கால் பாதத்தில் ஒரு சிறு முள் குத்துவதைக் கூட நான் விரும்ப மாட்டேன்' என்றார். இதைக் கேட்ட எதிரிகள் ஏளனமாக எள்ளி நகையாடினார்கள். (நூல்: அல்பிதாயா வந்நிஹாயா)

ஸைது பின் ஸாபித் (ரலி) கூறு கிறார்கள்: 'உஹதுப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த நாளில் என்னைப் போர்க் களத்துக்குள் நபி (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். போர்வீரர்களுள் ஒருவரான ஸஅத் பின் ரபீஅ (ரலி) அவர்களைச் சந்தித்து என் ஸலாமை அவருக்கு எடுத்துக் கூறி எப்படி இருக்கிறீர்கள் என்று நபி (ஸல்) அவர்கள் விசாரிக்கச் சொன்னார்கள் என்று கேட்டுவர வேண்டும். இதுவே எனக்கு பெருமானார் இட்ட கட்டளை.

நான் களத்துக்குள் புகுந்தேன். போர் முடிந்திருந்த நேரமது. அந்தப் போரில் அல்லாஹ்வுக்காக தன்னுயிர் ஈந்த வீரர்களின் உடல் அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கிடந்தன. வீர மரணமடைந்தோர் மத்தியில் நான் ஸஅது பின் ரபீஅ (ரலி) அவர்களை நான் தேடினேன். கண்டுபிடித்தேன். அவர் மரணத்தின் மடியிலிருந்தார்.

ஈட்டியின் குத்தல், வாளில் வெட்டு, அம்பின் தாக்குதல் என எதிரிகள் அவர் மீது எழுபது காயங்களை ஏற்படுத்தியிருந் தார்கள்.

தன் பொன்னார்ந்த மேனியில் எழுபது காயங்களைச் சுமந்து மரணத்தினருகே நிற்கும் அவரின் உடலருகே நான் சென்றேன். 'ஸஅது (ரலி) அவர்களே! அல்லாஹ்வின் திருத்தூதர் உங்களுக்கு ஸலாம் உரைத் தார்கள். எப்படி இருக்கிறீர்கள்? என்று விசாரித்து வரும்படிக் கூறினார்கள்' என்று கூறினேன்.

அதற்கவர், 'அல்லாஹ்வின் திருத்தூதர் மீதும் ஸலாம் நிலவட்டும். அல்லாஹ்வின் திருத்தூதரே! நான் சுவனத்தின் நறுமணத்தை நுகர்ந்து கொண்டிருக்கிறேன் என்று நபி (ஸல்) அவர்களிடம் சொல்வீராக. மேலும் மதீனாவாசிகளான முஸ்லிம்களிடம் சென்று என் சார்பில் இப்படிச் சொல்வீராக: அல்லாஹ்வுடைய திருத்தூதரின் கட்ட ளையை ஏற்று அவர்களிடம் நீங்கள் வந்து விட்டால் உயிருள்ளவரை நீங்கள் அதில் நிலைத்திருக்க வேண்டும். நீங்கள் கூறும் எந்த சாக்குப் போக்குகளும் அல்லாஹ்விடம் ஏற்கப்படாது.'

இவ்வாறு தன் செய்தியை அல்லாஹ் வின் திருத்தூதருக்கும் மதீனாவாழ் முஸ்லிம் களுக்கும் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவரின் உயிர் பிரிந்தது. (நூல்: ஸாதுல் மஆது)

அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கொன்றே தீர வேண்டும் என்ற வெறியோடு கிளம்பி வந்த எதிரிக் கூட்டம் உஹதுப் போரில் நபியைக் குறி வைத்து அம்புகளை எறிந்து கொண்டே முன்னேறியது. இதைக் கண்ட அபூதுஜானா (ரலி) ஓடி வந்தார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருகே நின்று கொண்டார். தன் எழிலார்ந்த மேனியையே கேடயமாக்கி நின்றார். நபியை நோக்கிப் பாய்ந்து வந்த அம்புகள் அபூதுஜானா (ரலி)வின் முதுகைத் துளைத்தன. அவரோ ஆடாமல் அசையாமல் அரண் போல் நின்றார். (நூல்: ஸாதுல் மஆது)

> *உஹதுப் போரில் நபி (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட காயத்திலிருந்து வழிந்து கொண்டிருந்த ரத்தத்தை உறிஞ்சினார். ரத்தம் வழிவது நின்றது. இனி இந்தக் காயத்தினால் ஆபத்தில்லை. 'உறிஞ்சிய ரத்தத்தைத் துப்பி விடு' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியபொழுது அவர் 'நபியின் ரத்தத்தை நான் (தரையில் துப்ப மாட்டேன்' என்று கூறி (அதை விழுங்கி) விட்டார்.*

பிரபல நபித் தோழர் அபூஸயீத் அல் குத்ரீ (ரலி)வின் தந்தை மாலிக் (ரலி) உஹதுப் போரில் நபி (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட காயத்திலிருந்து வழிந்து கொண்டிருந்த ரத்தத்தை உறிஞ்சினார். ரத்தம் வழிவது நின்றது. இனி இந்தக் காயத்தினால் நபி (ஸல்) அவர்களுக்கு ஆபத்தில்லை. 'உறிஞ்சிய ரத்தத்தைத் துப்பி விடு' என்று அவரிடம் நபி (ஸல்) அவர்கள் கூறியபொழுது அவர் 'நபியின் ரத்தத்தை நான் (தரையில் துப்ப மாட்டேன்' என்று கூறி (அதை விழுங்கி) விட்டார்.

அவர் திரும்பிச் சென்ற போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'சுவனவாசி களுள் ஒருவரைக் காண விரும்புவோர் இவரைப் பார்த்துக் கொள்ளட்டும்.' (நூல்: ஸாதுல் மஆத்)

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனைவியருள் ஒருவர் உம்மு ஹபீபா (ரலி). இவர்களின் தந்தை அபூசுப்யான் இஸ் லாத்தின் எதிரியாக நீண்ட காலம் இருந்தவர். ஒரு முறை இவர் மதீனாவுக்கு வந்திருந்தார். தன் மகள் உம்மு ஹபீபா (ரலி)வைச் சந்திக்க

*'முஹம்மது ஏதேனும் ஒன்றைச் சொன்னால் அதனைச் செயல்படுத்திட விரைந்து செல்கின்றனர் அவரின் தோழர்கள். அவர் ஒளு செய்து வழியும் நீரைக் கையில் ஏந்திட அவரின் தோழர்கள் அடித்துப் பிடித்து முன்னேறுகின்றனர். அவர் வாய் திறந்து பேசி னால் அதைக் கேட்டிட அனைவரும் வாய் மூடி செவி தாழ்த்துகின்றனர்.*

வந்தார். மகளின் இல்லத்தினுள் நுழைந்து நபி (ஸல்) அவர்கள் அமரும் விரிப்பில் அமர முற்பட்டார். இதனைக் கண்ட உம்மு ஹபீபா (ரலி) வெடுக்கென எழுந்து அந்த விரிப்பைச் சுருட்டி வைத்து விட்டார்.

அபூசுப்யான் கேட்டார்: 'என் அருமை மகளே! இந்த விரிப்பில் அமர்ந்திருக்கும் தகுதி எனக்கில்லை என்று நினைக்கிறாயா? அல்லது நான் அமர்ந்திடும் தகுதி இந்த விரிப்புக்கு இல்லை என்று நினைக்கிறாயா? எனக்குத் தெரியவில்லையே.'

உம்மு ஹபீபா (ரலி) கூறினார்கள்: 'நீங்கள் இவ்விரிப்பில் அமர்வதை நான் விரும்பவில்லை. ஏனென்றால் இது நபி (ஸல்) அவர்களின் விரிப்பு. நீங்களோ இணை வைப்பு எனும் அசுத்தம் சுமக்கும் மனிதர்.' (நூல்: சீரா இப்னு ஹிஷாம்)

உர்வா பின் மஸ்ஊது என்பவர் மக்காவின் அதிமுக்கிய பிரமுகர்களுள் ஒருவர். ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது குறைஷிகள் தம் சார்பில் நபி (ஸல்) அவர்களிடம் இவரை அனுப்பியிருந்தனர். உடன்படிக்கை முடிந்து திரும்பிய பின் இவர் தம் சமுதாயத்தினரிடம், 'என் சமுதாயமே! நான் ரோம், பாரசீகம், எத்தியோப்பியா (அபிசீனியா) ஆகிய நாடுகளின் மன்னர் களிடம் சென்று தூதுக் குழுக்களில் இடம் பெற்றுள்ளேன். அல்லாஹ்வின் மீது சத்திய மிட்டுச் சொல்கிறேன். முஹம்மதை அவரின் தோழர்கள் மதிப்பது போல எந்த மன்ன ரையும் அவர்களின் தோழர்கள் மதிப்பதாக நான் பார்த்ததில்லை. இந்த முஹம்மது எச்சில் துப்பினால் கூட அது கீழே விழுந்திட அவரின் தோழர்கள் விடுவதில்லை.'

'முஹம்மதின் தோழர்களில் யாரேனும் ஒருவர் அதைத் தம் கையில் ஏந்துகிறார். தனது முகத்திலும் உடலின் மற்ற பகுதிகளிலும் தடவிக் கொள்கிறார்.'

'முஹம்மது ஏதேனும் ஒன்றைச் சொன் னால் அதனைச் செயல்படுத்திட விரைந்து செல்கின்றனர் அவரின் தோழர்கள். அவர் ஒளு செய்து வழியும் நீரைக் கையில் ஏந்திட அவரின் தோழர்கள் அடித்துப் பிடித்து முன்னேறுகின்றனர். அவர் வாய் திறந்து பேசி னால் அதைக் கேட்டிட அனைவரும் வாய் மூடி செவி தாழ்த்துகின்றனர். அவரை நேருக்கு நேராகப் பார்ப்பது கூட ஒழுங் கீனம், அவமரியாதை என்றெண்ணி அவருக்கு மரியாதை செய்யும் முகமாக நேர் நோக்கி நிற்பதில்லை அவரின் தோழர்கள்.' (நூல்: ஸாதுல் மஆது)

(அபூசுப்யான், உர்வா பின் மஸ்ஊத் ஆகிய மக்காவின் பிரமுகர்களும் பின்னர் இஸ்லாத்தைத் தழுவினர். மொ-ர்.)

இவ்வாறு நபித் தோழர்கள் நபி (ஸல்) அவர்கள் மீது வைத்திருந்த பாசம் ஈடு இணையற்றது; வார்த்தைகளில் வடிக்க முடியாதது; அலாதியானது; அற்புதமானது.

**தொடரும்....**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**




# கூடு முதல் வீடு வரை

இலக்கியச் சுடர்
ரஹ்மத் ராஜகுமாரன்
Cell No: 9443446903

**உண்ண உணவும்,** உடுத்த உடையும், இருக்க வீடும் மனித வாழ்விற்கு இன்றி யமையாதவை. ஆனால், மனித இனத்தைத் தவிர்த்து மற்ற ஜீவராசிகளுக்கு ஆடைகள் தேவை இல்லாத போது உண்ண உணவும், இருக்க கூடோ, புற்றோ, வலையோ, பொந்தோ, பொடப்போ கண்டிப்பாகத் தேவைப்படுகிறது.

விலங்குகள் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உயிரினங்களில் காணப்படும் அற்புதங்களில் ஒன்றாகும்.

பல உயிரினங்கள் தங்களுக்கு வரக் கூடிய இடையூறுகளைப் பற்றி மதிப்பிட்டு, அதனைத் தடுக்கக் கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கண்டு பிடிக்கும் திறமைகளைக் கொண்டுள்ளன. இவை அனைத்தும் இவற்றின் உள்ளுணர்வினால் செய்கின்றன.

கறையான்கள் உருவாக்கும் புற்றின் சுவர்கள், ஒரு பெரிய கடப்பாறையைக் கொண்டும் கூடத் தகர்க்க முடியாத அளவுக்கு கனமும், பலமும் கொண்டவை.

தூக்கணாங்குருவிகள் ஈச்ச கருவை, வெவ்வேல் உடை மரங்களில் தான் கூடு கட்டும். தங்களது பிரதான எதிரியான பாம்புகள் கூட நுழைய முடியாத அளவு தங்களது கூடுகளின் வாசலை அமைத்துக் கொள்கின்றன.

பிலிப்பைன்ஸ் நாட்டில் 'போயா' (Boya) என்கிற பறவை மின்மினிப் பூச்சிகளை உள்ளே வைத்து கூடு கட்டுகிறது. இதனால் அதற்கு இரவில் வெளிச்சத்துடன் பாதுகாப்பு கிடைக்கிறது.

ஹுத்ஹுத் பறவைகள் தங்கள் கூடு களை ஒரு வகை பசுந்தழைகளினால் கட்டு கின்றன. இதற்குக் காரணம், இந்த இலை களில் சுரக்கும் பொருள் பூச்சிகளைக் கொல்லும். இதனை ஃபிலடெல்பியா (அமெரிக்கா) ஆராய்ச்சியாளர்கள், கூடு களில் ஒட்டுண்ணிகள் பரவி தங்கள் குஞ்சு களுக்குத் தீங்கு விளைவிப்பதை இப்பறவை கள் இவ்வாறு தடுக்கின்றன என்பதாக ஆய்வில் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியா, நியூகினியா நாடுகளில் 'பாரடைஸ் பேரட்' எனப்படும் சொர்க்கக் கிளிகள் உயர்ந்த கரையான் புற்றில் துவாரங்களை உண்டாக்கி உள்ளே புகுந்து கூடு அமைத்து முட்டைகள் இடுகின்றன. பெண் கிளிகள் அடை காத்து குஞ்சு பொரிக் கின்றன. இங்குள்ள கரையான்களுக்கு தொல்லை கொடுப்பதில்லை. கரையான் களும் ஈரக் களிமண் கொண்டு வந்து தன் புற்றில் கிளிகள் உண்டாக்கிய துவாரங்களை அடைத்து சீல் செய்து விடுமாம். இதனால் முட்டைகளுக்கும் குஞ்சுகளுக்கும் பாது காப்பு கிடைத்துவிடுகிறது.

அடுத்து, சிலந்தி பின்னும் வலை ரொம்பவும் ஆச்சர்யமூட்டுகிறது. சிலந்தி அந்த நூலை அதன் அடி வயிற்றுப் பகுதியில் இருக்கும் சுரப்பிகளிலிருந்து மிக நுட்பமான துவாரங்கள் மூலம் வெளியே அனுப்புகிறது. வெளியே வரும்போது திரவ வடிவத்தில் இருக்கும் நூல் காற்று பட்டதும் இறுகி விடுகிறது.

சிலந்தி நூலில் பல வகை உண்டு. 'ஒட்டிக் கொள்ளும் நூல்' இது இரைகளைப் பிடிப்பதற்கென்றே ஸ்பெஷல். சிலந்தி வலைகளுக்குக் குறுக்கே அமைக்கப்படும் நூல் ஒட்டாத வகை. இதோடு முட்டையிடும் போது அதைப் பாதுகாக்கச் சுருட்டப்படும்

நூல் பஞ்சு மெத்தை போல் இருக்கும். வலுவாக நார் நாராக இருக்கும்.

சிலந்தி, வலையை 30 நிமிடம் முதல் 60 நிடமித்திற்குள் கட்டி விடுகிறது. சிலந்திகள் தாங்கள் பிடிக்க விரும்பும் பூச்சிகளுக்கு ஏற்ப விதவிதமாய் ஒரு கணக்கின்படி வலை கட்டுகின்றன என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வலை பின்னும் டிசைன் அதன் உள்ளுணர்வில் பதியப் பட்டுள்ளது. சிலந்தி காலையில் ஒரு அளவில் வலை கட்டுகிறது. மாலையில் காலையை விட சற்று பெரியதாக கட்டுகிறது என்பதையும் கண்டறிந்துள்ளனர்.

சிலந்தி வலையைப் பற்றி குர்ஆனில் அல்லாஹ்:

வீடுகளில் எல்லாம் மிக பலவீனமானது நிச்சயமாக நூலாம் பூச்சியின் வீடுதான். (குர்ஆன் 29:41)

"சிலந்தி பின்னுவதை 'வலை' என்கிறோம். ஆனால், இறைவன் மேற்கண்ட வசனத்தில் 'சிலந்தியின் வீடு' என்கின்றான். அது ஏன்? ஒரு சமயம் இப்படி இருக்குமோ... பறவைகள் தங்கள் உணவை வெகு தொலைவில் தேடிக் கொண்டு கூட்டிற்கு வந்து தன் குஞ்சுகளுக்கு ஊட்டுகிறது. ஆனால், சிலந்தியின் உணவான பூச்சிகள் தனது வலைக்குத் தேடி வந்து மாட்டிக் கொள்கிறது. சிலந்தியின் உணவு தன் வலையில் தயாராகி விடுகிறது. இதனால் தானோ சிலந்தி வலையை இறைவன் சிலந்தியின் வீடு என்கின்றானோ..?

அடுத்து, தேன்கூடு. தேன் கூட்டில் உள்ள அறைகள் ஒவ்வொன்றும் அறுங்கோண வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தேனீக்களின் உள்ளுணர்வில் பதிந்திருக்கும் வடிவம் அறுங்கோணம். காரணம், தேன்கூட்டின் உட்பகுதி சதுரமாகவோ வட்டமாகவோ இருந்தால் தேன்கூடு கட்டுவதற்குரிய மெழுகு அதிகம் தேவைப்படும். எனவே, குறைந்த மெழுகில் திடமான கூட்டிற்கு அறுங்கோணம் வடிவம் சிறந்தது. மேலும், கூட்டின் அறையில் சேமிக்கப்படும் தேனிக்குப் பிடிமானம் மற்ற அமைப்புகளை விட அறுங்கோண வடிவம்தான் சிறந்தது என்று யாரோ தேனீக்களுக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்.

'உங்களது இறைவன் தேனீக்கு மலைகளிலும் மரங்களிலும் மக்கள் கட்டும் கட்டிடங்களிலும் கூடுகளை அமைத்துக் கொள்ளும்படி அறிவூட்டினான். (குர்ஆன் 16:68)

தேனீக்களைப் பற்றி வான் பிரிஷ் (Von Frisch), லோரென்ஜ்(Loreng) தின்பெர்ஜன் (Tinbergen) இந்த 3 விஞ்ஞானிகளும் ஆய்வில் ஈடுபட்டு, தேனீக்களின் நடமாட்டங்களையும் அவை மலர்களில் இருந்து தேனை உறிஞ்சும் பாங்கையும், தேனீக்கள் நடனமாடும் போது அதன் அங்க அசைவுகளிலிருந்து இதர தேனீக்களுக்கு இன்ன இன்ன விஷயங்களைக் கூறுகின்றன என்பதையும், அதை உள்வாங்கி மற்ற தேனீக்களும் மலர்களைத் தேடி குறிப்பிட்ட திசையில் பயணிக்கின்றன என்பதையும் அலசி ஆராய்ந்த மூவருக்கும் 1973-ஆம் ஆண்டில் நோபல் பரிசே வழங்கப் பட்டிருக்கிறது.

அனைத்து ஜீவராசிகளும் தனித் தனியாக இரை தேடி அலையும் போது எறும்புகள் மட்டும் சாரி சாரியாகச் செல்வது ஏன்? இப்படி ஒரு கேள்வி உங்களுக்கு எறும்பைப் பார்க்கும் போது வந்திருக்கும். எனக்கும் இந்தக் கேள்வி எழுந்தது. எறும்பைப் பற்றி ஆராய்ந்த போது...

எறும்புகள் தங்களுக்குள் பேசிக் கொள்வது, தகவல் தெரிவிப்பது எல்லாம் மூக்கிலிருந்து துருத்திக் கொண்டிருக்கும் 'ஆண்ட்டெனா' மூலம்தான். ஆண்ட்டெனா ஒன்றை ஒன்று தொட்டுக் கொள்ளும்போது ஒரு எறும்பிலுள்ள செய்தி மற்ற எறும்புக்கு சங்கேத பாஷையாக பரிமாறிக் கொள்ளப்படுகிறது. மேலும், இவை போகிற பாதையில் செண்ட், அத்தர் மாதிரி ஒரு வித ஹார்மோன்களைத் தெளித்து அடையாளக் குறியிட்டும் செய்தியைத் தெரிவித்தும் கொள்கின்றன. அதாவது, நாம் போஸ்டர் ஒட்டி விஷயத்தைச் சொல்வது மாதிரி, ஒரே ரூட்டில்தான் போக்குவரத்து; இவை மற்ற ரிஸ்க் எடுப்பதில்லை. பெரிய சைஸில் எதையாவது இழுத்து வந்து கூட்டிற்குள் சேர்க்க வேண்டுமென்றால் கிரேன் கொண்டு வரலாமா என்றெல்லாம் யோசிக்காது. உடனே அத்தனை எறும்புகளும் பேரணியாக ஸ்பாட்டில் ஆஜராகி விடும். பிறகு ஐலேசா... ஐலேசாதான்!

எறும்புகள் புற்று கட்டி விட்டால் வருடக்கணக்கில் அப்படியே இருக்கும். எறும்புப் புற்றுக்குள் வீதி மாதிரி தெருக்கள்,

குறுக்குத் தெரு, தனித்தனி அறைகள், உணவுக்குரிய ஸ்டோர் ரூம், பக்கத்துப் புற்றிலுள்ள எறும்பைக் கைது செய்து அடிமைப் படுத்தி தங்கள் புற்றுக்குள் சிறை வைப்பதற்காக பிரத்யேக சிறைச்சாலை.... இப்படி எல்லா வசதி வாய்ப்புகளோடு புற்று அமைக்கும். ஒரு எறும்பு காலனியில் சுமார் ஒரு லட்சம் எறும்புகள் வரை இருக்கும்.

எறும்புகளில் 'இலை வெட்டும் எறும்புகள்' என்று ஒரு வகை உண்டு. இவற்றின் புற்று பூமிக்கு அடியில் 16 அடி ஆழத்தில் ஓர் ஏக்கர் அகலத்திற்கு இருக்கும். பொதுவாக எந்த எறும்புகளும் ஒரு புற்றிலுள்ள எறும்புகள் பக்கத்து புற்றுகளில் நுழைவதில்லை. அப்படியே நுழைந்தால் உளவாளியோ என்றெண்ணி கைது செய்து அடிமையாக்கி விடும்.

புற்றில் உள்ள அத்தனை எறும்புகளுக்கும் 'ஒரே ஜீவன் ஒன்றே உள்ளம்' என்ற தியரி உண்டு. தேனீ மாதிரியே ஆண் எறும்பு, ராணி எறும்பு, வேலைக்கார எறும்பு என்ற பாகுபாடுகள் உண்டு. இங்கும் தலைவி ராஜ்யம்தான்! ஆனாலும், பாதுகாப்பும் பொறுப்பும் மிக்க தலைவியாகத்தான் எப்போதும் செயல்படும் என்பதாக ஆய்வில் கண்டறிந்துள்ளனர்.

ஒரு எறும்பு தலைவியின் பொறுப்பைப் பாருங்களேன்!

"சுலைமானுடைய ராணுவம் ஜின்கள், மனிதர்கள், பறவைகள் ஆகியவற்றிலிருந்து ஒன்று திரட்டப்பட்டு அணியணியாகப் புறப்பட்டன இந்தப் படைகள் எறும்புகள் வசிக்கும் ஓர் ஓடையின் சமீபமாக வந்த பொழுது அதிலொரு எறும்பு, மற்ற எறும்புகளை நோக்கி, 'எறும்புகளே! நீங்கள் உங்கள் வீடுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள். சுலைமானும், அவருடைய ராணுவமும் நீங்கள் இருப்பதை அறியாது உங்களைத் தங்கள் கால்களால் மிதித்து விட வேண்டாம்' என்று கூறியது." (குர்ஆன் 27:18)

மேற்கண்ட வசனங்கள் மூலம் மிருகங்களும், பறவைகளும், மனிதனைப் போன்று சமுதாயங்களாகவே (Communities) வாழ்கின்றன. இந்த வசனத்திற்கு ஷெய்க் அபூபக்கர் ஹம்ஸா என்ற விரிவுரையாளர், இவற்றுக்கு தானாகவே ஒரு வகை உள்ளுணர்வு ஏற்படுகிறதென்றும் இது இறைவனின் அருட்கொடை என்றும், இந்த உள்ளுணர்வு காரணமாக அவை கூட்டம் கூட்டமாக இயங்குகின்றன என்றும் கருத்து தெரிவித்திருக்கிறார்.

"பூமியில் ஊர்ந்து திரியக் கூடியவையும், தம்முடைய இரு இறக்கைகளால் ஆகாயத்தில் பறக்கக் கூடியவையும், உங்களைப் போன்ற சிருஷ்டிகளே சமுதாயங்களேயன்றி வேறில்லை." (குர்ஆன் 6:38)

அடுத்து மனிதர்கள் வாழ்ந்த குகை இல்லங்கள்... ஆதிகால மனிதர்கள் நிலங்களில் உள்ள குகைகளிலும் மலைக் குகைகளிலும் வாழ்ந்ததாக அநேக பண்டைக்கால வரலாறுகள் குறிப்பிடுகின்றன. குர்ஆனில் அல்லாஹ் 'ஸமூத்' என்ற மக்கள் கூட்டத்தினர் மலைகளைக் குடைந்து குகைகளை உருவாக்கி அதில் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றான்.

*ஹிஜ்ருவாசிகள் அச்சமற்று வாழலாம் எனக் கருதி அவர்கள் மலைகளைக் குடைந்து வீடுகள் அமைத்தார்கள். அவர்களை விடியற்காலையில் பேரிடிச் சத்தம் பிடித்துக் கொண்டது. அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளச் செய்திருந்தவற்றில் ஒன்றுமே அவர்களுக்குப் பலனளிக்கவில்லை.*

இந்த ஸமூத் கூட்டத்தினர் மதீனாவுக்கும், ஷாமுக்கும் இடையில் மதீனாவிலிருந்து 150 மைல் தூரத்தில் 'ஹிஜ்ர்' என்னுமிடத்திலுள்ள பிரமாண்டமான மலைகளைக் குடைந்து அற்புதமான வாசஸ்தலங்களை தங்களுக்காக அமைத்து பூமியில் ஏற்படும் எந்தத் தீங்கிலிருந்தும் அச்சமற்று வாழலாம் என்ற நம்பிக்கையில் குகைகளை அமைத்தனர். இவ்வாறே அம்மலைகளின் அடிவாரத்திலும் அழகிய மலைகளைக் குடைந்து தட்பவெப்ப காலங்களுக்கு ஏற்ப தனித்தனி குகை இல்லங்களை உருவாக்கினார்கள்.

ஹிஜ்ரி 8வது நூற்றாண்டில் பிரபல உலகப் பயணி இப்னு பதூதா தமது ஹஜ்ஜுப் பிரயாணத்தின் பொழுது இங்கு வந்து குகை இல்லங்களை ஆய்வு செய்து தனது பிரயாணக் குறிப்பில்:

"இங்கே சிவந்த நிறமுள்ள மலைகளில் தமூது வர்க்கத்தினரின் கட்டடங்கள் காணப் படுகின்றன. பெரும் பெரும் மலைகளைக் குடைந்து, குகை போன்ற வீடுகளை உண்டாக்கி இருக்கின்றனர். அவற்றை யெல்லாம் பார்க்கும்பொழுது இன்று கட்டப்பட்டவை போன்று அப்படியே அழகுறக் காட்சி அளித்துக் கொண்டிருக் கின்றன. அந்த இடங்களில் மக்கிப் போன மனிதர்களின் எலும்புகளும் காணப்படு கின்றன.(ஆதாரம்: இப்னு பதூதா பிரயாணக் குறிப்பு)

ஹிஜ்ருவாசிகள் அச்சமற்று வாழலாம் எனக் கருதி அவர்கள் மலைகளைக் குடைந்து வீடுகள் அமைத்தார்கள். அவர்களை விடியற்காலையில் பேரிடிச் சத்தம் பிடித்துக் கொண்டது. அவர்கள் தங்களைப் பாது காத்துக் கொள்ளச் செய்திருந்தவற்றில் ஒன்றுமே அவர்களுக்குப் பலனளிக்க வில்லை.(குர்ஆன் 15:82-84)

குர்ஆன் இன்னொரு இடத்தில் அம்மக்களைப் பற்றி...

"ஆகவே, முன்னர் அவர்களுக்கு எச்ச ரிக்கப்பட்டு வந்த பூகம்பம் அவர்களைப் பிடித்துக் கொண்டது. அதனால் அவர்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறே இறந்து கிடந்தனர்." (குர்ஆன் 7:78)

வீடுகள், ஆடம்பரமான மாளிகைகள், உயரமான கோபுரங்கள்.... என இப்பூமியில் கட்டப்பட்ட கட்டடங்களைக் குறித்து குர்ஆனில் நிறைய வந்துள்ளது.

பழுதடைந்த இரு அநாதைகளின் வீட்டுச் சுவரை ஹஜரத் ஹிழ்ரு (அலை) அவர்கள் சரி செய்ததாக குர்ஆனில் அல்லாஹ்:

"அவர் அங்கு விழுந்து விடக் கூடிய நிலையில் இருந்த ஒரு சுவற்றைக் கண்டார். ஆகவே, அவர் அதற்கு மண் அப்பி செப்ப னிட்டு அதனை விழாது நிலைநிறுத்தி வைத்தார்." (குர்ஆன் 18:77)

வானத்தில் இறைவனைத் தேடி கண்டுபிடிக்க பிர்அவ்ன் கட்டிய உயரமான கோபுரத்தைப் பற்றி குர்ஆனில் அல்லாஹ்:

".... ஹாமானே! களிமண்ணால் செய்த செங்கல் சூளைக்கு நெருப்பு வை. அச்செங் கல்லைக் கொண்டு வானளாவ மாளிகை நீ கட்டு. அதில் நான் ஏறி மூஸாவினுடைய இறைவனை நான் பார்க்க வேண்டும்." (குர்ஆன் 28:38)

சுலைமான் (அலை) அவர்கள் விரும்பி கட்டிய அழகான உயரமான பளிங்கினால் ஒரு மாளிகையும், அம்மாளிகையின் பளிங்கு தரையைப் பற்றியும் குர்ஆனில்,

"இம்மாளிகையில் நுழை' என்று அவளுக்குக் கூறப்பட்டது. அவள் அதன் தரையில் பதிக்கப்பட்டிருந்த பளிங்குக் கற்களை தண்ணீர் என்று எண்ணி ஆடை நனைந்து போகாதிருக்க இரு கெண்டைக் கால்களிலிருந்து உயர்த்தினாள். அதற்கு சுலைமான் 'அது தண்ணீரல்ல. பளிங்கு கற்கள் பதிக்கப்பட்ட மாளிகைதான்' என்று கூறினார்." (குர்ஆன் 27:44)

இது போன்ற சுவனத்து கூடாரங்கள், மாட மாளிகைகள் குறித்து குர்ஆனில் அல்லாஹ்:

"சிறந்த குணம் படைத்தவர்களான ஹூர் என்னும் கண்ணழகிகளாகிய கண்ணிய பெண்கள் முத்து பவளங்களாலான கூடாரங்களில் வசித்திருப்பார்கள்." (குர்ஆன் 55:70,72)

"பொறுமையுடன் இருந்த காரணத் தால் இவர்களுக்குச் சுவனபதிப்பில் உன்னத மான மாளிகை நற்கூலியாக அளிக்கப்படும். வாழ்த்தும் ஸலாமும் கொண்டு அவர்கள் எதிர்கொண்டு அழைக்கப்படுவார்கள்." (குர்ஆன் 25:75)

"எவர்கள் ஈமான் கொண்டு நல்லறங்கள் புரிகிறார்களோ அவர்களை, சதா கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும் சுவன பதியில் உள்ள உயர்ந்த மாளிகைகளில் நிச்சயமாக நாம் அவர்த்துவோம். அவற்றில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள்." (குர்ஆன் 29:58)

பறவைகளுக்குப் பாதுகாப்பான கூட்டையும், விலங்கினங்களுக்கு தக்க குகைகளையும், இவ்வுலகில் வாழும் நமக்கு நல்ல இல்லங்களையும் வழங்கிய இறைவன் நாளைய மறுமையில் சுவனபதியில் நல்லதொரு மாளிகையை நமக்கும் நம் சந்ததியருக்கும் வழங்கி அருள்வானாக! ஆமீன்!

# IM-ஐ கொண்டு கெஜ்ரிவாலைக் கொல்ல IB சதி?




**19-01-2014 அன்று** மாலை தொலைக் காட்சியிலும், 20-01-2014 அன்று வந்த தினசரி பத்திரிகைகளிலும் வந்த செய்தி இந்தியன் முஜாகிதீன் அமைப்பினர் கெஜ்ரி வாலைக் கொல்ல சதி என்று பரபரப்பாக வந்தது. 2010ஆம் ஆண்டு ஏப்ரல் 17-ல் பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்தில் குண்டு வெடித்தது. இதில் 15 பேர் காய மடைந்தனர். இந்த குண்டுவெடிப்பை விசாரிக்க பட்கலை, டெல்லியிலிருந்து பெங்களூருக்கு கர்நாடக போலீசார் கொண்டு செல்ல உள்ளதாகவும், இந்த தருணத்தில் இந்தியன் முஜாகிதீன் பட்கலை விடுவிக்க விமானத்தைக் கடத்தப் போவதாகவும் உளவுத்துறைக்கு தகவல் வந்துள்ள தாகச் சொல்லப்பட்டது. இதனால் நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்கள் பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், குடியரசு விழாவை சீர்குலைக்க சதி என்றும் செய்தி வெளியானது.

மத்திய உளவுத்துறை இந்தச் செய்தியை ஏன் வெளியிட்டது என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். நடந்து முடிந்த 5 மாநில தேர்தலில் டெல்லியில் BJP தோல்வி அடைந்தது. மேலும், மீடியாக்களில் ஊதிப் பெரிதாகக் காட்டப்பட்ட மோடி என்கிற அலை ஒன்றும் இல்லாமல் வெறும் மாயை என்று மக்கள் புரிந்து கொண்டனர். மேலும், ஆம் ஆத்மி கட்சி ஆட்சிக்கு வந்து 21 நாளில் கொடுத்த வாக்குறுதிகளில் பலவற்றை நிறை வேற்றியது - குறிப்பாக ஒவ்வொரு குடும்பத் துக்கும் 600 லிட்டர் தண்ணீர் தினமும் இலவசம். மின்சாரக் கட்டணத்தை பாதி யாகக் குறைத்தது. ஊழலை ஒழிக்க ஹெல்ப் லைன் ஏற்படுத்தித் தந்தது. மேலும், இதன் மந்திரிகள் இரவு முழுவதும் டெல்லி நகரை வலம் வந்து மக்களைக் கண்டறிந்தது, 5500 ஆட்டோக் களுக்கு NCR Permit தந்தது என பல செயல்கள் நாடு முழுவதும் இவர்களின் புகழ் பரவியுள்ளது. ஆம் ஆத்மி கட்சியின் வெற்றியை பத்திரிகையாளர்கள் இரண் டாவது சுதந்திர புரட்சியை மக்கள் செய்து உள்ளனர் எனக் கூறுகின்றார்கள் (Second Referendum).

கெஜ்ரிவால் பேசும்போது தாம் ஆட்சிக்கு வந்தால் அப்பாவி முஸ்லிம் சிறைவாசிகளை விடுதலை செய்வதாகக் கூறியுள்ளார். மேலும், காங்கிரஸ் மற்றும் பா.ஜ.கவினர் இந்து மற்றும் முஸ்லிம்களைப் பிரித்து ஆள்வதாகக் குறை கூறினார். ஆளும் காங்கிரஸ் முஸ்லிம்களின் ஓட்டு எங்கு சென்று விடுமோ எனக் கலக்கமடைந் துள்ளது. எங்கே நாங்கள் ஆட்சிக்கு வந்து விடுவோமோ என இந்துத்துவாதிகள் கலக்க மடைந்துள்ளனர். இதனால் விரக்தி அடைந்து அவர்கள் பெண் MLA ஒருவரின் வாகனத்தைச் சேதப்படுத்தியும் காசியாபாத்தில் உள்ள AAP கட்சி அலுவலகத்தைத் தாக்கியும் உள்ளனர். நாடு முழுவதும் கலவரத்தை ஏற்படுத்தி Riot is our right என்று அதன் மூலம் ஆட்சியைப் பிடிக்க நினைத்த இந்துத்துவாதிகளின் எண்ணத்துக்கு கெஜ்ரிவாலை வெற்றியால் சம்மட்டி அடி விழுந்துள்ளது.

தன்னைக் கடத்தப்போவதாக வரும் செய்தி பற்றி கெஜ்ரிவாலிடம் நிருபர்கள் கேட்டபோது, மதியம் (17-01-2014) என்னை சில போலீசார் சந்தித்தனர். அவர்கள் என்னிடம் உங்கள் உயிருக்கு தீவிரவாதி களால் ஆபத்து. எனவே, 2 PLUS பாதுகாப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றனர். நான் என்னை என் இறைவன் பாதுகாப்பான் எனக் கூறி, பாதுகாப்பை ஏற்க மறுத்து விட்டேன். மேலும், இந்த தகவலை ஊடகங் களுக்குத் தர வேண்டாம் என்றேன். ஆனால், அவர்கள் தந்துவிட்டனர். அவர்கள் முட்டாளாக இருக்கிறார்களா? இல்லை

அரசியலாக்குகிறார்களா? எனத் தெரியவில்லை. என்னை யார் தாக்கினாலும் அதனைச் செய்தது பட்கலின் ஆட்கள் என்று கூறுவார்கள் இந்த உளவுத்துறையினர் என நெத்தியடியாகக் கூறினார்.

கெஜ்ரிவாலைப் பற்றிக் கூறும் போது இவர் முன்னாள் சமூக ஆர்வலர். மக்கள் படும் கஷ்டங்களைப் பற்றி அக்கறையுள்ள மனிதர். இவர் முதலமைச்சராக வந்துள்ளதைப் பல முதலாளித்துவவாதிகள் விரும்பவில்லை. இவரைப் பற்றி CNN - IBN தொலைக்காட்சிக்கு Infosis தலைவர் நாராயணமூர்த்தி கூறும்போது இவர் இந்தியாவை 1950-60க்குக் கொண்டு செல்லக் கூடாது. முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றார். இதிலிருந்து நாம் இவரைத் தெரிந்து கொள்ளலாம்.

*பிராமணரான கர்கரேயை இவர்கள் கொன்று விட்டார்கள். மும்பை தாக்குதலின் போது தாக்கிய தீவிரவாதிகள் செல்போனில் அடிக்கடி மத்திய உளவுத்துறையினரிடம் பேசியுள்ளனர். இவர்கள் சரளமாக மராட்டியம் பேசுவார்கள் என்று புதிதாக '26/11 ஏன் நீதித்துறை தோல்வி அடைந்தது' என்ற தன்னுடைய இரண்டாவது புத்தகத்தில் முஷ்ரிப் அவர்கள் கூறியுள்ளார்.*

கெஜ்ரிவால் கட்சியின் அலை நாடு முழுவதும் வீசுகிறது. மோடி பிரதமராவதைத் தடுக்கிறது. இந்தியாவில் ஒரு இந்துராஷ்டிராவை ஏற்படுத்த RSS மற்றும் இந்தியாவின் மத்திய உளவுத்துறை முயற்சி செய்வதை நாம் 'கர்கரேயைக் கொலை செய்தது யார்?' என்ற புத்தகத்தின் மூலம் வெளியே கொண்டு வந்தோம். இந்த இந்து ராஷ்டிராவிற்கு கெஜ்ரிவால் பெரும் தடையாக இருப்பதால் மத்திய உளவுத்துறை (IB) இவரைக் கொல்ல நினைக்கலாம். 2006 முதல் 2008 வரை நாட்டில் நடந்த அனைத்து குண்டுவெடிப்பையும் நடத்தியது இந்த பிராமண தீவிரவாத அமைப்பான அபினவ் பாரத் மற்றும் IB-யின் பிராமணர்கள் அதிகம் என்பதை கர்கரே கண்டுபிடித்தார்.

பிராமணரான கர்கரேயை இவர்கள் கொன்றுவிட்டார்கள். மும்பை தாக்குதலின் போது தாக்கிய தீவிரவாதிகள் செல்போனில் அடிக்கடி மத்திய உளவுத்துறையினரிடம் பேசியுள்ளனர். இவர்கள் சரளமாக மராட்டியம் பேசுவார்கள் என்று புதிதாக '26/11 ஏன் நீதித்துறை தோல்வி அடைந்தது' (26/11 Why Judiciary also failed) என்ற தன்னுடைய இரண்டாவது புத்தகத்தில் முஷ்ரிப் அவர்கள் கூறியுள்ளார்.

மத்திய உளவுத்துறை ஒரு செய்தி வெளியிடுகிறது என்றால் அது நடக்கப் போகிறது என அர்த்தம். இதனை நாம் அடுத்த பலிகடா அப்சல் குரு? என்று ஜனவரி 2013 வைகறை வெளிச்சம் பதிப்பில் வெளியிட்டோம். அது உண்மையாகி விட்டது.

அது போலவே இன்று கெஜ்ரிவாலையும் மத்திய உளவுத்துறை கொல்லலாம் என விசயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அவரும் அதையே கூறுகின்றார்.

●

வைகறை
வெளிச்சம்
இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்.

# அதிர்ச்சியான நிகழ்ச்சிகளைக் கண்டு நிலைகுலையும் குழந்தைகள்



**குழந்தைகள்** 93 பேர் கும்ப கோணத்தில் கரிந்து போனார்கள்.

இந்தச் சம்பவம் சகிக்க இயலாதது. ஆனால், தொலைக்காட்சியும் பத்திரிகை களும் அதைப் படம் போட்டுக் காட்டின.

இந்தக் கோரங்களைக் குழந்தைகள் பார்க்கும் போது அவர்களின் எண்ணங்கள் அலைபாயும். அத்தோடு அவர்களின் மனநிலைகள் பாதிக்கப்படும்.

இவை நிகழ்ச்சியோடு சம்பந்தப் படாதவர்களைப் பற்றியது.

இனி இந்த நிகழ்ச்சியோடு சம்பந்தப் பட்ட குழந்தைகள், இந்தக் கோரத்தைக் கண்ணால் கண்டவர்கள், நேற்றுவரை தன்னோடு தவழ்ந்தவர்கள் தன்னோடு விளை யாடியவர் பிணமாக கருகிப் போன நிலைகள் இவற்றைக் கண்டு கலங்கி நிற்பவர்கள்.

இப்படி பீதி வயப்பட்டிடும் குழந்தை களை எப்படிக் கையாள்வது?

அவர்களிடமிருந்து ஒட்டுமொத்த மாகச் செய்திகளை மறைத்து விடுவதா அல்லது அவர்களுக்குப் புரிய வைத்து, அவர்களைப் பீடித்திருக்கும் அச்சங்களை அகற்றுவதா?

இந்தக் கேள்விக்கு விடை காணும் முன் கும்பகோணம் தீ விபத்தில் உயிர் தப்பிய குழந்தைகளின் மனநிலை எப்படி இருந்தது என்பதை அறிந்து கொள்வது நல்லது.

**குழந்தைகளின் மனநிலை**

“என்னுடைய வகுப்பறை நான்காவது மாடியில் இருக்கிறது. அதனால் எனக்கும் ஏதாவது நிகழுமா?” இது கும்பகோணம் நிகழ்வுகளை நேரில் பார்க்காத பட்ட ணத்தில் படிக்கும் குழந்தையின் மன நிலையைப் பீடித்திருக்கும் பீதி.

ஆமாம்! அண்ணாந்து பார்த்து ஆச்சரியப்படும் அளவுக்கு உயர்ந்து நிற்கும் பட்டணத்து பள்ளிக்கூடங்கள் இதுவரை பெருமையாகவே பேசப்பட்டு வந்தன. ஆனால், இப்போது பயத்தோடு பார்க்கப் படுகின்றன.

எங்கள் (ஸ்கூல்) பள்ளிக்கூடம், மிகப் பெரியது எனப் பெருமை பேசிய குழந்தைகள், மிகப் பெரிய பள்ளிகளின் மூன்றாவது மாடி ‘மரணத்தின் வாயிலா’ எனப் பேசிடத் தலைப்பட்டு விட்டன.

அந்தப் பள்ளி ஆசிரியைகள், ஆசிரி யர்கள் ஏன் ஓடினார்கள்? அவர்கள் நல்ல வர்களல்ல.

இந்தக் கேள்வியும் அதற்கான பதிலும் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் குலத் திற்குப் பேரிடி.

ஆமாம்! குழந்தைகளை மீட்கும் பணியில் உயிரைத் தந்த ஆசிரியைகள் விருதைப் பெற எந்த ஆசிரியரும் முன்வர வில்லையே!

இவர்களை தாயாக, காப்பாளராக எண்ணி தங்கள் குழந்தைகளை ஒப்படைத்த தாய்மார்களுக்கு ஆத்திரம்; ஆதங்கம்.

ஆக, ஆசிரியர்களை கண்ணியமாகப் பார்த்த காலங்கள் மங்கி வருகின்றன. ஆசிரி யர்கள் ஓடியதைத் தவிர்த்து குழந்தைகளுக்கு உதவி இருக்கலாம். அத்தோடு இதர

குழந்தைகளையும் அடுத்தவர்களுக்கு உதவும்படி ஏவி இருக்கலாம். இதன் மூலம் ஓர் சிறந்த முன்மாதிரியைக் காட்டி இருக்கலாம். இதனால் இந்த சோகத்தை சாதனையாகத் திருப்பிட முயற்சி செய்திருக்கலாம். ஆனால், எதுவுமே நடக்கவில்லை. ஆசிரியர்கள் எப்படி இருக்கக் கூடாது என்பதன் மறு பதிப்பே இது.

குழந்தைகளின் மனநிலை வேறு விதமாக வளருகின்றன

*திறந்து பேசுவது நல்லது. மறைத்து, மூடி வைப்பது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். குழந்தைகளிடம் உண்மையை விளக்கி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் விபத்துகளைத் தடுக்கும் முறைகளையும் எடுத்துச் சொல்லலாம்.*

"நான் அழுது கொண்டே இருந்தேன்" என்கின்றது மற்றொரு குழந்தை. இப்படி பேதலிக்கும் குழந்தைகளுக்குச் சில பரிந்துரைகள் செய்கின்றார்கள் மனநோய் மருத்துவர்கள். அவற்றை இங்கே சுருக்கமாகத் தருகின்றோம்.

குழந்தைகளிடம் நடந்தவற்றை மறைக்க வேண்டாம். அவர்களிடம் நடந்தவற்றை நடந்தபடியே சொல்லுங்கள். இது என்ன நடந்தது என்பதைப் பற்றிய குழப்பத்தை அகற்றும். நம்மிடமிருந்து எதையோ மறைக்கின்றார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு வர வேண்டாம்.

அத்தோடு குழந்தைகளிடம் இன்னொன்றையும் சொல்லி வையுங்கள். இது போன்ற நிகழ்வுகள் நடக்காமல் தடுத்திட மிக எளிதான வழிகள் இருக்கின்றன என்பதையும் சொல்லிக் கொடுங்கள்.

சில முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுத்தால் இது போன்ற அசம்பாவிதங்கள் நடக்காது என்றே அடித்துக் கூறலாம்.

அனைத்துத் தரப்பிலும் நடந்த தவறுகளை சுட்டிக் காட்டுங்கள். இந்தத் தவறுகள் மீண்டும் நிகழ்ந்திடாமல் தடுத்திட அரசு விரைந்து எடுத்துவரும் நடவடிக்கைகளையும் சொல்லுங்கள். இதனால் இது போன்ற நிகழ்வுகள் இனி நடக்காது என்பதையும் அவர்களிடம் சொல்லுங்கள்.

இப்போது தமிழக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குழந்தைகளிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

அது போல் தேசிய அளவில் உருவாகி இருக்கும் அனுதாபங்கள் ஜாதி, மத உணர்வுகளைக் கடந்து மக்கள் அனைவரும் ஒன்றாய்க் காட்டும் அக்கறையையும் எடுத்துச் சொல்லுங்கள்.

இதனால் நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்தவை உங்களுக்கு ஒருபோதும் நடக்காது என்பதையும் சொல்லி வையுங்கள்.

**மனநிலை வல்லுநர்களின் ஆலோசனை**

திறந்து பேசுவது நல்லது. மறைத்து, மூடி வைப்பது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

குழந்தைகளிடம் உண்மையை விளக்கி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் விபத்துகளைத் தடுக்கும் முறைகளையும் எடுத்துச் சொல்லலாம்.

இதன் மூலம் குழந்தைகள் பொறுப்பு மிகுந்த குழந்தைகளாக வளரும்.

இஃது கும்பகோணம் நிகழ்வுக்கு மட்டுமல்ல, இது போன்ற எல்லா எதிர்பாராத அசம்பாவிதமான நிகழ்வுகளுக்கும் பொருந்தும்.

MGM

# மோடியின் காஷ்மீர் நாடகம்

**கஷ்மீர் பண்டிட்டுகள்** 19-01-2014 அன்று மோடியைச் சந்தித்தார்களாம். அவர்களுடைய விவகாரத்தில் மோடி தலை யிட வேண்டும் என விரும்பினார்களாம்.

இப்படியொரு செய்தியை 'தி இந்து' நாளிதழ் வெளியிட்டது 20-01-2014 அன்று.

செய்தியைக் கூர்ந்து கவனித்தோம். இரண்டு வினாக்களுக்கு விடை கண்டிட!

1. கஷ்மீர் பண்டிட்டுகள் எங்கேனும் தங்களை விரட்டியவர்கள் முஸ்லிம்கள் என்றோ அல்லது முஸ்லிம் போராளிகள் என்றோ குறிப்பிடுகின்றார்களா?

2. இப்போது, முஸ்லிம்கள் தங்களை கஷ்மீர் திரும்பக் கூடாது என்கிறார்களா? என்றொரு புகாரை வைக்கின்றார்களா?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் 'இல்லை' என்பதே தெளிவான பதில். இதை இந்து நாளிதழின் 20-01-2014 செய்தி தெளிவுபடுத் திற்று.

இவை அல்லாமல், மோடியைச் சந்தித்த பண்டிட்டுகள் சுயப் பிரசவமாக ஓர் உண்மையை ஒத்துக் கொண்டுள்ளார்கள். அது, தங்களை 1990-ல் ஜக்மோகன் கட்டாயப் படுத்தித்தான் வெளியேற்றினார் என்பதே!

Forced to Leave their homeland – அவர்கள் அன்று வீடுகளை விட்டு வெளியேற்றப்பட் டார்கள். இதை மோடியே மொழிந்திருக் கின்றார்.

அன்று 1990-களில் கஷ்மீரின் கவர்ன ராக ஜக்மோகன் நியமிக்கப்பட்டதே பண்டிட்டு களை வெளியேற்றி பழியை முஸ்லிம்கள் மேல் போட்டு, முஸ்லிம்களை அழிக்க வேண்டும்; முஸ்லிம்கள் இல்லாத கஷ்மீர் ஒன்று உருவாக் கப்பட வேண்டும் என்பதற்காகத்தான். இதனை அன்றைய கஷ்மீரின் அனைத்து நிகழ்வு களையும் தொகுத்து வெளியிட்ட இராம் ரட்டன் சேட்டர்ஜி அவர்கள் வெளியிட்டுள் ளார்கள். இதனை நாம் வெளியிட்ட 'கஷ்மீரின் பாதி விதவைகள்' நூலில் விரிவாகக் கூறியுள் ளோம். (வாசகர்கள், அதனை வாங்கிப் படிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.)

சரி, ஒரு மாநிலத்திலிருந்து எப்படி யெல்லாம் ஆட்களை வெளியேற்றலாம் வகுப்புக்கலவரங்களை நடத்தி, என்பதில் நிறைவான தேர்ச்சியைப் பெற்றவர் மோடி. அன்று 2002-ல் குஜராத்தில் அவர் இதை நடத்திக் காட்டியபோது அது இந்துத்துவா பரிசோதனை கூடம் (Hindutuva Labaratory) என்றனர்.

பிறகு அதை இந்தியா முழுவதும் கொண்டு சென்றிட வேண்டும் எனப் பீற்றினார். அப்போதைய இந்துத்துவா பிரதமர் 'வாஜ்பேயி.' இந்த வாஜ்பேயைப் போன்ற நல்ல வர்கள் இப்போது மோடியின் கட்சியில் இல்லை என வருத்தப்பட்டுக் கொண்டார். நம்ம ஊர் கலைஞர். அந்த வாஜ்பேயின் அடிவருடிகளில் ஒருவர்தான் கலைஞரின் நாக்கை அறுப்பேன் என நர்த்தனமாடினார். அதைக் கூட கலைஞர் மறந்துவிட்டு மோடியின் கட்சியில் நல்ல வரைத் தேடினார் கலைஞர். பாவம்!

இதெல்லாம் நடந்து கொண்டிருக்கும் போது நமது டெல்லி நண்பர்களுடன் பேசி னோம். கஷ்மீர் பண்டிட்டுகள் மோடியை சந்தித்த விவகாரத்தைக் கேட்டோம்.

அதற்கு அவர்கள் இது பாரதீய ஜனதா கட்சி ஏற்பாடு செய்த ஒரு நாடகம். மோடியைச் சந்தித்தவர்கள் கஷ்மீர் பாரதீய ஜனதா கட்சியினரே என்றார்கள். அதன் பின்னரே உண்மை விளங்கிற்று.

இப்படி சந்தித்த பாரதீய ஜனதா கட்சி யினரிடம் கூட மோடி உங்களை மீண்டும் குடியமர்த்துவேன் எனக் கூறிடவில்லை.

கஷ்மீர் மக்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிரித்து, பிளந்து போடும் கட்சியை நாம் முடிந்தவரை தடுத்தே தீருவோம் - இன்ஷா அல்லாஹ்!

மோடி முதலில், குஜராத்திலிருந்து வெளி யேற்றப்பட்ட மக்களை மறு குடியேற்றம் செய் யட்டும்,அதன்பின் கஷ்மீர் கனவுகளைக் காணட்டும்.

கஷ்மீர் முஸ்லிம்கள் பண்டிட்டுகளை வரவேற்கவும், பாதுகாக்கவும், வாழ வைத்திட வும் தயாராக இருக்கின்றார்கள். மோடியைப் போன்ற இனப்படுகொலையாளர்கள். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

MGM

Owned and published by M.Gulam Mohamed From 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor : M.Gulam Mohamed, Printed by M.Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.



# ஒரு பெண்ணுக்குப் பின்னால் முதலமைச்சர் மோடி

**2005ஆம் ஆண்டு மான்சி சோனி என்றொரு பெண்ணை அரசு நிகழ்ச்சி ஒன்றில் சந்திக்கின்றார் குஜராத் முதல் அமைச்சர் மோடி.**

**அந்த நாள் முதல் ஏற்பட்ட சந்திப்புகள், உறவுகளாக வளருகின்றன. அந்தப் பெண்ணிடம் மோடி கட்டுண்டு போனதாக ஆங்கில வாரமிருமுறை இதழ் 'பிரண்ட் லைன்' குறிப்பிடுகின்றது.** (Frontline January)

**அதன் பின் அந்தப் பெண் பிரிந்து விடுகின்றார். வேறொரு ஆண் மகனிடம் காதலில் விழ்கின்றாள். இந்தப் பெண்மணி கட்டட வரைகலை நிபுணர்.**

**(இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு)**

**குஜராத் பூகம்பம்**

2001ஆம் ஆண்டு குஜராத்தில் பேரழிவுகளை ஏற்படுத்திய பூகம்பம் ஒன்று நிகழ்ந்தது.

இந்த பூகம்பத்தின் போது மிகவும் சிறப்பாக செயல்பட்டார்.

(கலெக்டர்) புஜ்மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் ஷர்மா.

அவருக்கு விருந்து வைத்துப் பாராட்டினார் முதலமைச்சர் மோடி. நிலநடுக்கத்தில் அழிந்து போன மக்களைத் தவிர எஞ்சியவர்களுக்கு மனமகிழ் பூங்கா என்று அமைத்திடும் திட்டம் ஒன்று உருவாக்கப் பட்டது.

பூங்கா பூம்பொழிலாக அமைந்திட வேண்டும் என்பதற்காக கட்டடக் கலையில் சிறந்தோங்கிய பெண் நிபுணர், மாதுஜி என்ற மான்சி சோனியிடம் (பெயர் மாற்றப் பட்டுள்ளது) அந்த ஒப்பந்தம் ஒப்படைக்கப் பட்டது.

சோனி பூங்காவை சிங்காரம் சொட்ட அமைத்தார்.

பூங்காவைத் திறந்து வைத்திட வந்தார் முதலமைச்சர் மோடி. கலெக்டர் பிரதீப் ஷர்மா, மோடியை அம்மணிக்கு அறிமுகம் செய்தார்.

மோடியும் நோக்கினார், சோனியும் நோக்கினார். அதன் பின் பல குஜராத் அரசு ஒப்பந்தங்கள் இந்த அம்மணிக்குத் தாரை வார்த்துத் தரப்பட்டுள்ளது.

சாதாரண உறவாகப் போயிருக்க வேண்டும் இந்த நிகழ்வு. பாரதீய ஜனதா அரசியல் தலைவர்களின் வாழ்வில் இது போன்ற பெண் உறவுகள் சாதாரணம். ஆனால், நவம்பர் 15, 2013 அன்று முதல் மீடியாக்கள் என்ற ஊடகங்களில் 'விஸ்வரூபம்' எடுத்தது இந்த மோடி - மான்சி உறவு. காரணம், மோடியை அப்பிக் கொண்ட பயமும் அதைத் தொடர்ந்த நிகழ்வு களுந்தான்.

**மோடியின் பயம்:** முதலமைச்சர் மோடியின் முதல் பயம். அந்தப் பெண் 'உண்மைகளை' வெளியே விளம்பி விடுவாளோ என்பதுதான்.

மோடியின் அடுத்த பயம் அந்தப் பெண்ணிடம் ஓர் CD என்ற குறுந்தகடு இருக்கின்றது. (அதில் என்ன இருக்கின்றது என்பதை இதுவரை யாரும் கண்டுபிடிக்க வில்லை.)

ஒருவேளை குஜராத் முதலமைச்சர் மோடிக்கு அதில் என்ன இருக்கின்றது என்பது தெரிந்திருக்கலாம். அதனால் தான் அவருக்கு பயம் CD பயம் - சோனி பயம்!

இந்த பயங்களெல்லாம் சேர்ந்து அந்தப் பெண்ணைக் கண்காணிக்க முழு அளவில் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தினார். தன்னுடைய உள்துறை இணை அமைச்சர், அடியாள் அமித்ஷாவை நியமித்தார். அமித்ஷா இந்தப் பெண்மணியையும் அவள் நிழலையும் கண்காணித்திட ஆட்களை நியமித்தார்.

ஒரு ஐ.பி.எஸ் என்ற காவல்துறை அதிகாரி. கிரிஷ் எல். சிங்கால். அவருக்குக் கீழ் உயர்மட்ட அதிகாரிகள். அத்தனை பேரும் உளவுத்துறையைச் சார்ந்தவர்கள். (Frontline : January 10, 2014)

**மோடியின் இரகசியப்படை**

இவர்களின் கண்காணிப்புகள் போதாதென்று மோடி தனியாக தன்னுடைய நேரடிப் பார்வையின்கீழ் ஒரு சிறப்புக் குழுவை அமர்த்தியிருக்கின்றார். இந்தக் குழு சில சமயங்களில் மோடிக்குத் தந்த அறிக்கையில் மோடியின் அடியாள் அமித்ஷா தந்த தகவல்களை விட அதிகமான தகவல்கள் அந்தப் பெண்ணைப் பற்றி இருந்திருக்கின்றன. இந்த தகவல்களைக் கொண்டு மோடி அடியாள் அமித்ஷாவையே மிரட்டி இருக்கின்றார். அதில் நீங்கள் இன்னின்ன ஹோட்டல்களில் அந்த நங்கை சாப்பிட்டதைப் பற்றி எந்தத் தகவலையும் சொல்லவில்லை. என்ன வேலை செய்கின்றீர்கள்? என்பதாக மோடி மிரட்டி இருக்கின்றார். இந்த அளவுக்கு அந்தப் பெண்மணியின் அசைவுகள் அனைத்தும் கண்காணிக்கப் பட்டுள்ளது.

**பிரதீப் ஷர்மா**

முதலமைச்சர் மோடிக்கும், இந்தப் பெண்மணி மாதுரி (ஊடகங்களில் அந்த அம்மணியின் பெயர்)க்கும் இடையேயுள்ள உறவில் கலக்டர் பிரதீப் ஷர்மாவுக்கும் பங்குண்டு. அதனால் அந்த கலெக்டரின் தொலைபேசி அங்க அசைவுகள் அனைத்தும் கண்காணிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

**விடாதே பிடி**

'அவளைத் தப்பிக்க விடாதே -

ஒருமுறை மோடியின் அடியாள் அமித்ஷா காவல்துறை அதிகாரி சிங்காலுக்கு இப்படி திடீரென ஆணையிட்டார்.

மான்சி சோனியை நிழலாய்த் தொடர்ந்து சென்று கொண்டிருந்த அதிகாரி சிங்கால் "நான் கூர்மையாகத்தான் கண் காணித்துக் கொண்டிருக்கின்றனே்" என்றார். இதற்கு அமித்ஷா இப்படி பதில் சொன்னார். "இல்லை. சாகிபிடம் நான் பேசினேன். அவர் சிலர் வழியாக இரண்டு முறை வெளியே சென்றதாக அறிந்திருக்கின்றார். நமது ஆட்கள் சரியாக கவனிக்கவில்லை. சாகிபுக்கு எல்லாத் தகவல்களும் கிடைக்கின்றன. இதில் நாம் எங்கே கோட்டை விடுகின்றோம் என்பது தெரிந்து விடுகின்றது" என்றார். (இங்கே சாகிப் என்பது மோடியைக் குறிக்கும் சொல்.)

இன்னொரு நாள் அந்த அம்மணி திடுதிப்பென விமான நிலையம் சென்று விட்டாள். இதனை மோடியின் தனி ஆட்கள் கண்டுபிடித்து சொல்லிவிட்டனர். மோடி உடனேயே அடியாள் அமித்ஷாவுக்கு அந்த விமானத்தில் நமது ஆள் ஒருவரை அனுப்பு எனக் கூற அமித்ஷா அதிகாரி சிங்காலுக்குச் சொல்ல, உடனேயே அந்த விமானத்தில் ஓர் அதிகாரி ஏற்றப்பட்டார்.

இந்தத் தகவல் மோடிக்குச் சொல்லப் பட்ட போது மோடி விமானத்தில் நம்ம ஆள் தூங்கிட மாட்டான் அல்லவா? என நையாண்டி செய்திருக்கின்றார்.

இன்னொரு முறை அந்த அம்மணி ஓர் ஹோட்டலுக்கு உணவு உண்ணச் செல்கின்றாள். அங்கு யாரோடு சாப்பிடுகின்றாள் என்பதைக் கண்டு பிடியுங்கள் என மோடி அமித்ஷாவுக்கு ஆணையிட்டுள்ளார். இந்த அளவுக்கு விடாப்பிடியாக அந்த அழகி தொடரப்பட்டுள்ளார். (January 10, 2014 Frontline)

**2010 நிகழ்வு**

2010ஆம் ஆண்டு இந்தப் பெண்மணி அஹ்மதாபாத் வியாபாரி ஒருவரை மணந்து கொண்டார்.

இந்த ஆண்டில் குஜராத்திலேயே தலை சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் எனப் போற்றப் பெற்ற, பிரதீப் ஷர்மா பணி நீக்கம் செய்யப்பட்டதோடு, 'சதி, நம்பிக்கைத் துரோகம்' ஆகிய குற்றங்கள் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்

பட்டார். பின்னர் பிணையில் வெளிவந்தார். இப்போதும் தற்காலிக பணி நீக்கம் செய்யப் பட்ட நிலையிலேயே இருக்கின்றார். இந்தப் பெண்மணிக்கும் பிரதீப் ஷர்மாவுக்கும் இடையில் அடிக்கடி தொலைபேசி பேச்சுகள் இடம்பெற்றதே இதற்குக் காரணம்.

ஆனால், பிரதீப் ஷர்மா தன் மீது சாட்டப்பட்ட குற்றங்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் வரை சென்றார். உச்சநீதி மன்றத்தில் இந்தப் பெண் விவகாரத்தை எழுப்பினார்.

*மோடி மான்சி சோனிக்குப் பின்னால் அலைகின்றார் என்ற செய்திகள் வெளி யானவுடன் மோடி ஓர் ஜமுக்காளத்தில் வடிகட்டின பொய்யை உலாவ விட்டார். இந்தப் பெண்மணியின் தந்தை இந்தப் பெண்மணிக்குப் பாதுகாப்பு வேண்டும் எனக் கேட்டுக் கொண்டாராம். அதனால்தான் இந்தப் பின் தொடரலாம்.*

உச்சநீதிமன்ற நீதிபதிகள் உங்கள் பணி, கைது ஆகியவற்றைப் பற்றிய ஒரு மனுவில் நீங்கள் குஜராத் முதலமைச்சர் ஒரு பெண் ணுடன் தொடர்பு என்றெல்லாம் எழுதி இருப்பது சரியல்ல. நாங்கள் முதலமைச்ச ருடைய ஒழுக்கத்தைப் பற்றிய விசாரணை யையோ விவாதத்தையோ உச்சநீதி மன்றத்தில் நடத்திட முடியாது எனக் கூறி விட்டார்கள். அத்தோடு உங்கள் மனுவில் பெண் விவகாரம் பற்றி வருவனவற்றை நீக்கிவிட்டு வேறொரு மனுவைக் கொண்டு வாருங்கள் எனவும் கூறினார்கள்.

அப்போது மோடி - சோனி தொடர்பை ஏற்படுத்திய பிரதீப் ஷர்மாவின் வழக்கை உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் காலிங் கன்சால்வஸ் என்பவர்தான் நடத்தினார். இவர் நீதிபதிகளோடு மோதுவதில் வல்லவர். நீதிபதிகளின் கூற்றை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

ஒரு மூத்த வழக்கறிஞர் இப்படி விடாப் பிடியாக வாதிடுவது, நீதிபதிகளை சற்றே மலைக்கச் செய்தது. அதிலும் வழக்கறிஞர் காலிங் கன்சால்வஸ் நாடறிந்த ஒரு வழக் கறிஞர்.

இந்த நெருக்கடியில் நீதிபதிகளே சற்று இறங்கி வந்தார்கள். சரி, உங்கள் மனுவை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால், நீங்கள் முதலமைச்சர் மோடியின் ஒழுக்கம் பற்றி உங்கள் மனுவில் குறிப்பிட்டிருப்பதை மீண்டும் வலியுறுத்த மாட்டேன் என வாக்களிக்க வேண்டும் என்றார்கள். இதனை காலிங் கன்சால்வஸ் ஏற்றுக் கொண்டார்.

இப்படி மோடியின் மானத்தை அன்று உச்சநீதிமன்றம் காப்பாற்றியது.

இதில் நாட்டு மக்கள் அனைவரும் கவனிக்க வேண்டியது மோடிக்கு தொடர்ந்து உதவி செய்து கொண்டிருப்பது உச்சநீதிமன்றம்தான். இல்லையேல் 2002 குஜராத் இனப்படுகொலையில் அவர் சிறைப்பிடிக்கப்பட்டிருப்பார். அல்லாதபோது குஜராத்தில் நடந்த போலி என்கவுண்டர் என்ற எதிர்தாக்குதல்களில் அவர் சிக்கியிருப்பார். மோடிக்கு எதிரான எந்த வழக்கும் உச்சநீதிமன்றம் சென்றால் நிச்சயமாக அவர் காப்பாற்றப்பட்டு விடுவார் என நம்பலாம். அதிலும் இப்போதைய தலைமை நீதிபதியின் மனநிலை ஊரறிந்த விவகாரம். பல முஸ்லிம்கள் இந்தியாவில் உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆகிவிடாமல் பார்த்துக் கொண்டவர் மட்டுமல்ல, அதைப் பெருமையோடு பீற்றிக் கொண்டிருப்பவர்.

### 2013 - 2014 மோடி - சோனி உறவு

2013 நவம்பர் 15இல் ஒரு பெண் கலைஞர் மோடியின் ஆட்களால் பின்தொடரப் படுகிறார் என்ற செய்தியை இரண்டு வலைத்தள செய்தி நிறுவனங்கள் வெளிக் கொண்டு வந்தன. அவை 1. கோப்ரா நியுஸ் போர்ட்டல் 2. குலாயில்.

இந்த செய்தி நிறுவனங்கள் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் ஆகஸ்ட் 4, 2008க்கும், செப்டம்பர் 10, 2009க்கும்

இடையில் மோடி '279' தொலைபேசி பேச்சுகளை ஒட்டுக் கேட்டிருக்கின்றார்.

மோடி குஜராத்தில் முதலமைச்சர் பணிகளைக் கவனித்தாரா அல்லது இந்தப் பெண்ணின் தொலைபேசிகளை கவனித் தாரா என்பது தெரியவில்லை.

இதில் அந்தப் பெண் கட்டடக் கலைஞர் வேறு மாநிலங்களுக்குச் சென்றால் அந்த மாநிலங்களுக்கு ஆளனுப்பி அல்லது அந்த மாநிலங்களின் காவல்துறையோடு குஜராத் காவல்துறை அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளச் செய்து அந்தப் பெண் பற்றிய தகவல்களை சேகரித்து வருகின்றார்.

நமது அண்டை மாநிலமான, கன்னட மாநிலத்தில் ஊழல் புகழ் எடியூரப்பா என்பவர் முதமைச்சராக இருந்த நாட்களில், அவரைப் பயன்படுத்தி இந்தப் பெண்மணியைப் பற்றிய தகவல்களைச் சேகரித்திருக்கின்றார்.

இப்படி ஓர் முதலமைச்சர் ஒரு பெண்ணைப் பற்றி தகவல்களைச் சேகரிக்க வேண்டிய காரணம் என்ன?

இந்த வினாவுக்கு பிரண்ட்லைன் மாத இதழ் இப்படிப் பதில் சொல்கின்றது: 'Spy on a woman with whom Mr.Modi was apparently besotted'

அதாவது, மோடி தெளிவாக மயங்கி விட்ட ஒரு பெண்ணின் மீது வேவு எனக் குறிப்பிடுகின்றது. இதனை மோடி கட்டுண்ட ஒரு பெண் என்றும் குறிப்பிடலாம். (Frontline, January 10, 2014) இதே சொற்றொடரை The Econmist என்ற பத்திரிகையும் தனது டிசம்பர் 14, 2013 இதழில் பயன்படுத்தியுள்ளது.

அடுத்து, இந்தப் பெண்மணியை மோடிக்கு அறிமுகப்படுத்தி வைத்த பின்னர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்ட பிரதீப் ஷர்மா இந்த ஆண்டு (2014) ஜனவரி 6ஆம் நாள் குஜராத் காவல்துறை யினரிடம் ஓர் புகாரை தாக்கல் செய்தார். அதில், முதலமைச்சர் மோடி என்மீது ஏன் கோபமாக இருக்கின்றார் என்பதைக் குறிப்பிடும் போது இப்படிக் குறிப்பிட்டார்:

The reason for his resentment was both the proximity of Mansi Soni to me and the fear that she was perhaps sharing with me the detail. of her intimate relation with the Chief Minister. (MG 16-31 January 2014)

அதாவது, 'முதலமைச்சரின் வெறுப்பு எதனால் ஏற்பட்டிருக்கும் என்றால் மான்சி சோனி என்ற பெண்மணிக்கும் எனக்கும் உள்ள நெருக்கமாக இருக்கலாம். இந்த நெருக்கத்தால் இந்தப் பெண்மணிக்கும் முதலமைச்சருக்கும் உள்ள உறவுகளைப் பற்றிய இரகசியங்களை அவள் என்னிடம் பரிமாறி இருப்பாள் என்ற அச்சமாகவும் இருக்கலாம்.' ஆக, மோடி ஓர் ஒழுக்கமற்றவர் என்பது தெளிவு.

### மோடியின் விளக்கம்

மோடி மான்சி சோனிக்குப் பின்னால் அலைகின்றார் என்ற செய்திகள் வெளி யானவுடன் மோடி ஓர் ஜமுக்காளத்தில் வடிகட்டின பொய்யை உலாவ விட்டார்.

அதாவது, இந்தப் பெண்மணி மான்சி சோனியின் தந்தை இந்தப் பெண்மணிக்குப் பாதுகாப்பு வேண்டும் எனக் கேட்டுக் கொண்டாராம். அதனால்தான் இந்தப் பின் தொடரலாம்.

இது பொய் என்பதை அனைவரும் அறிவர். இதை பத்திரிகையாளர்கள் இந்தப் பெண்மணியின் தந்தையிடம் கேட்ட போதுதெரியவந்தது.

### மோடியின் தகிடுதத்தம்

இந்த விவகாரம் பெரிதாகவே மத்திய அரசு இதில் தலையிடும் நிலை வந்தது. மத்திய அரசு ஓர் விசாரணை கமிஷனை நியமிக்க உத்தேசித்தது. எங்கே தன்னுடைய வண்ட வாளம் தண்டவாளத்தில் ஏறிடுமோ என அஞ்சிய மோடி இந்த விவகாரத்தை விசாரிக்க ஓர் அதிரடி விசாரணைக் கமிஷனை நியமித்தார்.

மோடியின் இந்த அச்சத்தைக் கண்ட மத்திய அரசு ஓர் விசாரணைக் கமிஷனை அறிவித்தது. இந்த வேவு பார்க்கும் வேலை குஜராத் மாநிலத்திற்கு வெளியேயும் நடந்திருப்பதால் அதனை மத்திய அரசுதான் விசாரிக்க முடியும் என்ற விசாரணை கமிஷன் விதியை மத்திய அரசு பயன்படுத்திக் கொண்டது. இதற்கு விசாரணை கமிஷன் சட்டத்தின் பிரிவு 3(1)(b) வகை செய்கின்றது. (The Commissions of Inquiry Act 1952 Section 3(1)(b))

**காங்கிரசின் நாடகம்**

இப்படியொரு விசாரணைக் கமிஷனை நியமித்தது காங்கிரசின் அரசியல் நாடகம் தான் என்பதில் எந்த ஐயமுமில்லை. மோடியைத் தண்டிக்க எத்தனையோ வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் காங்கிரஸ் அவற்றை எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சியிடம் சில பேரங்களை பேசத்தான் பயன்படுத்தியதே அல்லாமல் எந்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏனெனில், அவற்றிலெல்லாம் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள்.

**'ஜோஷி'வினை மோடியைச் சுட்டது.**

மோடியின் உட்கட்சி ரவுடித்தனங்களை அன்று பாரதீய ஜனதா கட்சியின் குஜராத் செயலாளர்களில் ஒருவரான ஜோஷி என்பவர் எதிர்த்தார். அப்போது மோடி இந்த ஜோஷியையும் அவருடைய வேலைக்காரப் பெண்ணையும் அசிங்கமாகக் காட்டும் CD ஒன்றை பாரதீய ஜனதா கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் புழங்க விட்டு அவரைப் பதவி நீக்கம் செய்தார்.

ஆனால், இப்போது மோடி உண்மையாகவே மாட்டிக் கொண்டார். அதனால் என்ன உச்சநீதிமன்றம் சென்றால் அவருக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்குமே.

**பாரதீய ஜனதாக கட்சியும் பெண்களும்**

முன்னர் பாரதீய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெண்களைக் கடத்தி வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று ஒரு பெரும் வியாபாரத்தையே நடத்திக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் விமான நிலையத்தில் வைத்து கையும் களவுமாகச் சிக்கினார்.

இப்படி பெண்கள் விவகாரங்கள் பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்களுக்கு அந்நியமானதல்ல.

இவர்கள் நாடாள வந்துவிடாமல் பார்த்திட வேண்டியது பெண்களின் பொறுப்பு. அப்போது மட்டுமே அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்.

●

# கஷ்மீர் பாதி விதவைகளுக்கு விடிவு காலம் பிறக்கலாம்..!

“வைகறை வெளிச்சம்” ஜனவரி 2014 இதழில் கஷ்மீரின் பாதி விதவைகள் பற்றி இரண்டு செய்திகளை வெளியிட்டிருந்தோம். ஒன்று, ஆறு இராணுவ அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்தச் செய்தியை தினமணி நாளிதழும் 'தி இந்து' நாளிதழும் வெளியிட்டிருந்தன.

இரண்டு, கஷ்மீரின் பாதி விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாம் என மார்க்க அறிஞர்கள் பிரகடனப்படுத்தி இருக்கின்றார்கள். இந்தச் செய்தியை 'தி இந்து' நாளிதழ் வெளியிட்டிருந்தது.

இப்போது இன்னும் சில செய்திகள், இந்து ஆங்கில நாளிதழ் 22-01-2014-இல் அதில் கஷ்மீரில் இராணுவத்தையும் போலீஸ் என்ற காவல்துறையையும் குறைத்துவிட்டால், கஷ்மீரில்அமைதி நிலவும் என்பதே அந்தச் செய்தி.

ஆக, இராணுவந்தான் கஷ்மீர் பெண்களைப் பாதி விதவைகள் ஆக்குகின்றன என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்தோடு இராணுவத்தை அங்கிருந்து அகற்றிட வேண்டும் எனவும் பேச்சுகளும் அழுத்தங்களும் எழுந்துள்ளன.

'டைம்ஸ் ஆப் இந்தியாவின்' கணிப்பின்படி ஒரு கஷ்மீரிக்கு 20 இராணுவத்தினர் - கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்து கையில் வைத்திருந்த நாள்களில், '20 ஈராக் குடிமகனுக்குத்தான் ஒரு அமெரிக்க இராணுவ உறுப்பினர்தான் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர்.

ஓர் ஆக்கிரமிப்பை விஞ்சிய, இராணுவம் கஷ்மீரில் குவிக்கப்பட்டு வருகின்றது. இதனால் தான் அங்கு கண்மூடித்தனமாக கற்பழிப்புகள், கொலைகள் இவற்றின் விளைவாக பாதி விதவைகள். இவை குறித்து இன்னும் ஆழமாக அறிந்திட 'கஷ்மீரின் பாதி விதவைகள்' என்ற நூலைப் படிக்கவும்.

**MGM**

# ஏரியல் ஷரோன்
# நவீன ஃபிர்அவ்ன் மரணம்



**ஏரியல் ஷரோன்** இரண்டாவது உலகப் போருக்குப் பின்னும் காலனி ஆதிக்கத்தை நிலைநாட்டியவன், முஸ்லிம் பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கொன்று குவித்த ஃபிர்அவ்ன் ஆவான். கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் கோமா நிலையில் இருந்தவன் பிப்ரவரி 11 அன்று இறந்தான்.

யூதர்கள் தங்கள் குழந்தைகளுக்கு 6 வயதில் இருந்தே வரலாற்றைச் சொல்லித் தருகின்றனர். ஆனால், முஸ்லிம்கள் எவ்வளவு ஆதாரங்களோடு தங்களுடைய வரலாறுகள் இருந்தாலும் அதனை தங்கள் பிள்ளை களுக்கு சொல்லுவதில்லை. எந்தச் சமூகம் வரலாற்றை மறந்ததோ அந்தச் சமூகம் காலப்போக்கில் தன்னுடைய அடை யாளத்தை இழக்க நேரிடும். ஒவ்வொரு முஸ்லிமும் இவனைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம் ஆகும்.

ஏரியல் ஷரோன் இவன் 1920-ல் ரஷ்யாவில் இருந்து பாலஸ்தீனுக்கு குடும்பத்தோடு குடியேறினான். 10 வயதில் சியோனிச இளைஞர் அமைப்பில் சேர்ந்தான். 14 வயதில் இளைஞர் துணைப் பாதுகாப்புப் படையில் பணியாற்றினான். பிறகு யூத திவிரவாத அமைப்பான ஹக்கானில் (பாதுகாப்பில்) சேர்ந்தான். 1953-ல் இரகசிய கொலைப்படையில் தன்னை இணைத்துக் கொண்டான்.

இஸ்ரேலிய இராணுவப் படைப்பிரிவு (101) கிபாயா என்ற இடத்தில் உள்ள பாலஸ்தீனர்களின் வீடுகளை வெடிகுண்டு வைத்தது. இதில் 69 பேர் கொல்லப்பட்டனர். இதில் பெரும்பான்மையினர் பெண்கள், குழந்தைகள். இதனை முன்னின்று செய்தது இவன் தலைமை ஏற்ற படைப்பிரிவு ஆகும். அதுவரை காஸாவில் கிட்டத்தட்ட 2000 வீடுகளை இடித்து தரைமட்டமாக்கினான். இதனால் 12,000 பாலஸ்தீனர்கள் அகதிகளாக ஜோர்டான் மற்றும் லெபனானுக்குச் சென்றனர். இந்தத் தாக்குதலுக்கும் இவனே முக்கியமான காரணம்.

இவன் இஸ்ரேலிய வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்தபோது புதிய ஆக்கிர மிப்பு குடியிருப்புகளை ஏற்படுத்தித் தந்தான். மேலும், வீடுகளை இழந்த பாலஸ்தீன முஸ்லிம்கள் மீள் குடியிருப்பு மேற்கொள் வதைத் தடுத்தான். முஸ்லிம்களின் எந்த இடத்தை நாம் கைப்பற்றினோமோ அதனை நாம் திருப்பித் தரக் கூடாது என்று வெளிப் படையாக கொக்கரித்தான்.

இவன் இராணுவ அமைச்சராக இருந்த போது இஸ்ரேலியப் படை லெபனானை ஆக்கிரமித்தது. லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) அலுவலகம் செயல்பட்டது. அங்கிருந்து பாலஸ்தீனப் போராளிகள் இயங்கினர். PLO அலுவலகத்தைத் தரைமட்டமாக்கவும், லெபனானில் தம்முடைய பேச்சைக் கேட்கும் பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்தவும், லெபனானை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. லெபனானில் உள்ள சப்ரா மற்றும் சத்திலா என்ற இரு அகதி முகாம்களை இஸ்ரேலியப் படை ஆக்கிரமித்தது. இந்த முற்றுகையின் போது கிட்டத்தட்ட 20,000 ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப் பட்டனர்.

அபுஜமால் இஸ்ரேலிய லெபனானின் ஆக்கிரமிப்பைப் பற்றிக் கூறும்போது சப்ரா மற்றும் சத்திலா முகாம்களில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களை வெளி யேற்றினர். பிறகு தனித்தனியாக நிற்க வைத்து துப்பாக்கியைக் கொண்டு கண்மூடித் தனமாகச் சுட்டனர். இதனை நேரடியாக தான் கண்ணால் கண்டதாகக் கூறினார்.

70 வயது சுப்ஹா போர்ஜி கூறும்போது எனது கணவனையும் மகனையும் என் கண் முன்னால் சுட்டுக் கொன்றனர் என்றார். இவன் இறந்துவிட்டான் என்பதைக் கேள்விப் பட்டேன். இவனை (ஏரியல் ஷரோன்) அல்லாஹ் நரகில் வீசி எறிய வேண்டும் என்றார் கோபத்தோடு.

ஷேர்பியா என்ற பெண் இதனைப் பற்றிக் கூறும்போது எங்கள் குடும்பத்தில் என்னுடைய 3 குழந்தைகள் என் அக்காவைச் சேர்த்து மொத்தம் 5 பேர். நாங்கள் சத்திலா முகாமில் இருந்தோம். ஒருவர் என் முகாமுக்கு வந்து இஸ்ரேலிய இராணுவம் முற்றுகை இட்டுள்ளனர் என்றார். நாங்கள் இராணுவத்தால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டோம். எங்கள் அடையாள அட்டையை வாங்கிப் பார்த்த இஸ்ரேலிய இராணுவன் ஒருவன் பாலஸ்தீன நாட்டைச் சேர்ந்தவர்களா? எனக் கேட்டு, அருகில் உள்ள விளையாட்டு மைதனத்துக்கு ஓடுங்கள் என்றார். நாங்கள் சிறிது தூரம் ஓடியபோது துப்பாக்கியைக் காட்டி சுடப் போவதாக மிரட்டினான். நான் அல்லாஹ் வுக்காக மற்றும் ரஸுலுக்காக எங்களை விட்டு விடுங்கள் என்று கெஞ்சினோம். அதற்கு அவன் அல்லாஹ்வும் இல்லை, ரஸுலும் இல்லை. எல்லாமே நாங்கள்தான் என்றான். நாங்கள் ஸ்டேடியம் நோக்கி ஓடும்போது இடையில் பெரிய குண்டு ஒன்று வெடித்தது. பலர் இறந்துகிடந்தனர் எனக் கூறினார்.

மேலும், இவன் பிரதமராகும் முன் 2000ம் ஆண்டில் இவனும் இவனது பாதுகாப்புப் படையினர் சுமார் 1000 பேரும் அல்அக்ஸா (பைத்துல் முகத்தஸ்) மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடத்தை ஆக்கிரமித்தனர். இதனை எதிர்த்த பாலஸ்தீனப் போராளிகள் இரண்டாவது இன்பிதா - அதாவது இஸ்ரேலுக்கு எதிராக புனிதப் போர் அறிவித்தனர்.

இந்தப் புனிதப் போரின் தொடர்ச்சியாக இவன் பிரதமரானதும் ஜெனின் என்ற இடத்தில் இஸ்ரேலிய இராணுவத்தினர் கடும் ஆயுதங்களைக் கொண்டு தாக்கினர். இதில் உள்ள அகதிகள் முகாமில் உள்ள ஆண்கள் மற்றும் சிறுவர்கள் வீதிகளுக்கு வந்து போரிட்டனர். இதில் புல்டோசரைக் கொண்டு இஸ்ரேலிய இராணுவம் தாக்கியது. இதில் பல நூறு மக்கள் இனப் படுகொலை செய்யப்பட்டனர். மேலும், புல்டோசர் மூலம் ஹெனின் நகரம் தரை மட்டமாக்கப்பட்டது.

இந்த இனப்படுகொலையை விசாரிக்க வந்த ஐ.நா. விசாரணைக்குழுவை இஸ்ரேலிய இராணுவம் தடுத்தது.

மற்ற மனித உரிமை அமைப்புகள் விசாரணை நடத்தியது. இது மனித உரிமை மீறலும், போர்க் குற்றமும் ஆகும் என அறிக்கை வெளியிட்டனர். இத்தாக்குதலுக்கு முழுக் காரணம் ஏரியல் ஷரோன் ஆவான்.

இவன் பிரதமராக இருக்கும் வரை மேற்குக் கரை மக்களுக்கு, மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதி போன்றவற்றை கிடைக் காமல் செய்தான். இதனால் பாலஸ்தீனர்கள் மிகவும் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளாயினர்.

இவன் இராணுவ அமைச்சராக இருந்தபோது இஸ்ரேலுக்கு எதிரானவர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களைக் கொல்ல அதிகாரம் அளித்தான் மொஸாதுக்கு. இவன் அதிகாரத்தில் இருந்த போது பல முஸ்லிம் தலைவர்கள் குறிப்பாக ஷேக் அஹமது யாஸின், பாலஸ்தீன முன்னாள் பிரதமர் அப்பாஸ் போன்றவர்களைக் கொன்றான். மேலும், ஹிஸ்புல்லாவின் முன்னாள் தலைவர் நஸ்ருல்லாவையும் கொன்றான். மேலும் பல முஸ்லிம் விஞ்ஞானிகளைக் கொன்றான்.

பாலஸ்தீனம் என்ற நாட்டை உலக வரைபடத்தில் இருந்து அழிக்க முயற்சி செய்தவன் என்று, பாலஸ்தீன உளவுத்துறை முன்னாள் தலைவர் தவ்ஃபீக் திராவி கூறினார்.

1967 எகிப்து யுத்தத்தில் இஸ்ரேல் படை முன்னேறி தாக்கியது. இதில் பல முஸ்லிம் நாடுகள் தாமாக சண்டைக்கு முன்வந்தன. 6 நாள் யுத்தம் நடந்தது. இறுதியில் முஸ்லிம்கள் இஸ்ரேலை வெல்லும் சூழ்நிலை ஏற்பட்டபோது ஐ.நா தலையிட்டு போரை நிறுத்தியது. இல்லை என்றால் அன்றே இஸ்ரேலை முஸ்லிம்கள் உலக வரைபடத்தி லிருந்து எடுத்திருப்பார்கள். இந்த 6 நாள் யுத்தத்திற்கு மிக முக்கிய காரண மானவன் இந்த பிர்அவ்ன் ஆவான். அல்லாஹ் இவனுக்கு இங்கேயே தண்டனையாக எட்டு ஆண்டுகள் கோமாவில் இருக்க வைத்து இறுதியில் நரகிற்கு அவனை நுழையச் செய்து விட்டான்.

**H.முகமது இக்பால்** B.E.,



## நீதிக்காகப் போராடும் வீராங்கனை

# டீஸ்டா செடல்வாட் மீது வழக்கு

### மோடி அரசின் மற்றொரு மோசடி

**2002-இல்** நரேந்திர மோடியின் தலைமையில் நடந்தது குஜராத் இனப்படு கொலைகள். அதற்கு பல ஆண்டகளுக்கு முன்னரே குஜராத்தில் இப்படியொரு இனப்படுகொலை நடக்கப் போகின்றது. என்று பல முறை எச்சரித்தவர் டீஸ்டா செடல்வாட்.

1999-இல் தான் நடத்திவரும் பத்திரிகை யாகிய 'Communalism Combat' கம்யூனலிசம் காம்பேக்ட் என்ற பத்திரிகையில் ஓர் விரிவான கள ஆய்வைத் தந்தார்.

அதில் குஜராத்தில் சங்கப் பரிவாரத் தினர் ஓர் இனப்படுகொலை நடத்திடத் தயாராக இருக்கின்றார்கள். அவர்கள் எல்லா விதத்திலும் தயாராகி விட்டார்கள். அதை விரைவில் நடத்தி விடுவார்கள் என்றெல் லாம் விரிவாக ஆதாரத்தோடு குறிப்பிட் டிருந்தார்.

அத்தோடு மாநில அரசு எல்லா விதத்தி லேயும் இந்தக் கலவரக்காரர்களோடு கைகோர்த்திட தயாராக இருப்பதால் மத்திய அரசு இதனைத் தடுத்திட முன்வந்திட வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த எச்சரிக்கையை யாரும் கண்டு கொள்ளவில்லை. ஆனால், மீண்டும் 2001-ஆம் ஆண்டு மத்திய அரசையும் மாநில அரசையும் தனது எழுத்துக்கள் வழியும் பத்திரிகை வழியும் எச்சரித்தார். (இந்தக் கட்டுரைகள் எல்லாம் வைகறை வெளிச்சம் அலுவலகத்தில் கிடைக்கும்) ஒரு தீர்க்கமான தலையங்கத்தையும் எழுதியிருந்தார்.

இந்த சகோதரியின் எந்த எச்சரிக்கை யையும் நமது மத்திய அரசோ, மாநில அரசுகளோ கண்டுகொள்ளவில்லை.

2002 பெப்ருவரி 27ஆம் நாள் தொடங்கி முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்கும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மோடியே முன்னின்று இந்தத் திட்டங்களை நிறை வேற்றினார். இதற்கு முன்னேற்பாடாக சபர் மதி எக்ஸ்பிரஸின் இரண்டு பெட்டிகளைக் கொளுத்திக் கொண்டார்கள்.

### 2002 படுகொலைகள்

மோடியின் இந்த பாசிசத்திற்கு எதிராகப் போராடிட யாரும் முன்வரவில்லை. நிவாரணம், நிதி என்ற கூப்பாடுகளே எங்கனும் கேட்டன.

குஜராத் இனப்படுகொலைகளைச் செய்தவர்களுக்கு எதிராகப் போர் தொடுத் திட வேண்டிய பொறுப்பும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்திட வேண்டிய பெருஞ்சுமையையும் வீர நங்கை டீஸ்டா செடல்வாட்டே ஏற்றாள்.

இந்துத்துவ பாசிசம், குஜராத்தையும் அதே பாசிசம் வாஜ்பேயின் தலைமையில் நாட்டை ஆட்சி என்ற பெயரில் அல்லோல கல்லோலப்படுத்திக் கொண்டிருந்தபோது அந்தப் பாசிசவாதிகளை நீதிமன்றத்தில் நிறுத்தினார்.

### போலி என்கவுண்டர்கள்

பல நூறு பாசிஸ்டுகளைத் தண்டித்தார். சிறையில் அடைத்தார். பல போலி என்கவுண்டர் என்ற போலி எதிர்தாக்குதல் வழி அப்பாவி முஸ்லிம்களைக் கொலை செய்ய ஏவினார் மோடி.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்து கொண்டே ஓர் இனப்படுகொலையை முன்னின்று நடத்தினார் மோடி.

அவரை தண்டிக்கும் இமாலயப் பணியை தன் சிரமேற்கொண்டார் டீஸ்டா செடல்வாட்.

குஜராத்தின் கீழ் நீதிமன்றங்கள் முதற் கொண்டு உயர்நீதிமன்றம் வரை மோடிக்கே லாலிபாடின. நேர்மையோடு நீதிக்காக நிலையாக நின்ற அத்தனை காவல்துறை அதிகாரிகளும் வேலை பறிக்கப்பட்ட வர்களாக கதியற்றவர்களாக நின்றார்கள். 'சிரீகுமார்' என்ற நேர்மையான காவல்துறை அதிகாரியின் பதவி உயர்வுகள் அனைத்தும் மறுக்கப்பட்டன. பதவி பறிக்கப்பட்டவராக நின்றார். நீதிமன்றங்களை அணுகியே அவர் ஓய்வு பெற்ற நிலையில் அவர் பதவி உயர்வைப் பெற்றார். இன்னொரு ஐ.ஏ.எஸ் அதிகாரி எப்படியெல்லாம் அலைக்கழிக்கப் பட்டு வருகின்றார் என்பதை இதே இதழில் மோடி - சோனி என்ற கட்டுரையில் விளக்கி யுள்ளோம்.

நேர்மையான அதிகாரிகள் இப்படி அலைக்கழிக்கப்பட்டார்கள் என்றால், மோடி இடம் விலை போன அதிகாரிகள் பலர் லஞ்சத்தையும் அஹ்மதாபாத்தில் வீட்டு மனைகளையும் வாங்கிவிட்டு மோடியிடம் மண்டியிட்டோர் ஏராளம்! ஏராளம்!

இப்படி மண்டியிட்ட தோட்டத்துத் தொழும்பர்களில் R.K.இராகவன் என்ற முன்னாள் மத்திய புலனாய்வுத் துறை அதிகாரியும் ஒருவர்.

இவர் எந்த அளவுக்கு மோடிக்கு செஞ் சோற்றுக் கடனாற்றினார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

### குல்பர்க் சொசைட்டி குடியிருப்பு

2002 இனப்படுகொலையின் போது மோடியின் அடியாள்கள் குல்பர்க் சொசைட்டி என்ற குடியிருப்பை நோக்கி வந்தார்கள். அங்கு முன்னாள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் இஹ்ஷான் ஜாபரி என்பவரைக் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டார்கள். பெட்ரோலை ஊற்றி தீப்பற்றி வைத்தார்கள். இன்னும் அதே குடியிருப்பைச் சார்ந்த 200 பேரை குரூர மாகக் கொலை செய்தார்கள். கொலைகள் முடிந்த பின் மொத்த குடியிருப்பையும் கொளுத்தினார்கள்.

இத்தனையையும் இஹ்ஷான் ஜாபரீ கொலைகளுக்கு முன் பல முறை மாவட் டத்தின் பல்வேறு அதிகாரிகளுக்கும் தொடர்ந்து தொலைபேசியில் செய்திகளைச் சொன்ன பின்னரும், நடந்தன. இதில் மோடியின் முதலமைச்சரின் அலுவலகத் திற்கு ...... ஆனால், முதலமைச்சர் உட்பட அனைவரும் கொலைகளும், தீ வைப்புகளும் நடப்பதைத் தடுக்கவில்லை. மாறாக, அதற்கான உற்சாகத்தையே தந்தார்கள்.

அரசின் தவறுகள், காவல்துறையின் தவறுகள் மோடிக்கும் இந்தக் கொலை களுக்கும் உள்ள தொடர்புகள். இவற்றை யெல்லாம், நீதிமன்றங்களில் செல்லும் ஆவணங்களாக மாற்றினார் டீஸ்டா செடல்வாட். உச்சநீதிமன்றம் வரை கொண்டு சென்றார். உச்ச (அ)நீதிமன்றம் சென்ற போதெல்லாம் அது மோடிக்குச் சாதக மாகவே தீர்ப்பு வழங்கிற்று. இந்த முறை உச்ச (அ)நீதிமன்றம் மோடி இன்னும் 62 பேருக்கு எதிராக வழக்கு தொடரலாமா? கூடாதா? என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை மோடியின் அடிமை ஆர்.கே. இராகவனிடம் தந்தது. ஆர்.கே. இராகவன் நீதிமன்றத்தில் தந்த அறிக்கையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இஹ்ஷான் ஜபாரியின் கொலைக்குக் காரணம் அவரேதான் என அறிக்கை தந்தார். ஒரு பச்சையான, கொச்சை யான பாசிஸ்ட் கூட இப்படியொரு அறிக் கையைத் தாக்கல் செய்ய மாட்டான் கொலை கார மோடியைக் காப்பாற்றிட.

இப்படி குஜராத் நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றம், அனைத்து மட்டத்திலும் மோடிக்கு ஆதரவு, அதிகாரிகளின் துரோகம் அனைத்தையும் தாண்டி மோடிக்கு எதிரான இந்தப் பெரும் போரை - உண்மையைச் சொன்னால் - பாசிசத்தின் உண்மை முகத்திற்கு எதிரான பெரும் போரை டீஸ்டா டெல்வாட் தனித்து நின்றே எதிர்கொள் கின்றார்.

பல முறை அவடைய அலுவலகம் பாசிஸ்டுகளால் அடித்து நொறுக்கப் பட்டது. ஆனாலும் 12 ஆண்டுகளாக இந்தப் பெரும் போரை பாசிஸ்டுகளுக்கு எதிரான இந்தப் பெரும் போரை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்.

### என்றும் நினைவில்

இவரில்லை என்றால் மோடிக்கு எதிராக இந்தப் பெரும் போரை நடத்திட ஆளில்லாமல் போயிருக்கும். 2002 குஜராத் - இனப்படுகொலைகளை எல்லோரும் எப்போதோ மறந்து போயிருப்பார்கள்.

முஸ்லிம்களில் சிலரே - பாசிஸ்டுகளுக்கு சாதகமாகவும் இந்த வீராங்கனைக்கு எதிராகவும் போய்விட்டார்கள். எனினும், தான் மேற்கொண்ட பெரும் போரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றார்.

இடையே நிதி நெருக்கடி முஸ்லிம்கள் ஏறெடுத்தும் பார்த்திடவில்லை. ஒரு கலை அரங்குக்கு ஏற்பாடு செய்து அதில் நுழைவுச் சீட்டுக் கட்டணங்களைப் பெற்று இந்த வழக்குகளை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றார்.

*இவரில்லை என்றால் மோடிக்கு எதிராக இந்தப் பெரும் போரை நடத்திட ஆளில்லாமல் போயிருக்கும். 2002 குஜராத் - இனப்படுகொலைகளை எல்லோரும் எப்போதோ மறந்து போயிருப்பார்கள்.*

*முஸ்லிம்களில் சிலரே - பாசிஸ்டுகளுக்கு சாதகமாகவும் இந்த வீராங்கனைக்கு எதிராகவும் போய்விட்டார்கள்.*

பல முறை இவருடைய அலுவலகத்தைத் தாக்கியதோடு இவர் மீது பல்வேறு வழக்குகளையும் மோடி பல்வேறு அதிகாரிகளை ஏவி தாக்கல் செய்தார். குஜராத் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குகளில் குஜராத் நீதிமன்றங்கள் மோடிக்குச் சாதகமாகவே தீர்ப்புகளை அறிவித்தன. உச்சநீதிமன்றம் சென்றிட வேண்டிய நிலை - உச்சநீதி மன்றத்தில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இப்படி எத்தனையோ இடர்களைத் தாண்டித்தான் குஜராத் இனப்படுகொலைகளின் போது கொலை செய்யப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி தேடிக் கொண்டிருக்கின்றார் டீஸ்டா செடல்வாட்.

அவரது இலக்கு இனப்படுகொலை புகழ் மோடியையும், இன்னும் 62 பேரையும் தண்டிக்க வேண்டும். இதுவே இலக்கு.

**முஸ்லிம்களில் சிலரது நயவஞ்சகம்**

எண்ணற்ற இடர்களை வீராங்கனை டீஸ்டா செடல்வாட் தாண்டித்தான் தன் கடும் பயணத்தை நடாத்திக் கொண்டிருக்கும்போது முஸ்லிம்களில் சிலரும் விலை போய் விட்டார்கள் மோடியிடம்.

இப்போது ஒரு மாபெரும் முனாஃபிக் அவன் பெயர் ரெயிஸ்கான். இவன் சில காலம் டீஸ்டா செடல்வாட்டின் கீழ் வேலை செய்து கொண்டிருந்தவன்.

இவன் வேலை போன பின் இவன் தந்த வாக்குமூலம் எனப் பல வழக்குகளை மோடி தன் அரசு இயந்திரத்தை வைத்து பதிவு செய்தார்.

முதன் முதலில் இந்த ரெயிஸ்கான் டீஸ்டா செடல்வாட்தான் மோடிக்கு எதிரான போலி ஆவணங்களையும் தயார் செய்கின்றார் என்றொரு பொய் வழக்கைப் பதிவு செய்தார். அது தானாகவே வீழ்ந்து போனது.

இப்போது இவர் வழியாக மோடி இன்னும் சில முஸ்லிம்களை விலைக்கு வாங்கி விட்டார். அவர்கள் வழியாக டீஸ்டா செடல்வாட் மீது ஒரு புதிய வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.



### அந்த வழக்கு

2002 குஜராத் இனப்படுகொலைகளின் போது 200 பேரை மோடியின் தலைமையில் கொலை செய்தார்கள் குல்பர்க் சொசைட்டி என்ற குடியிருப்புப் பகுதியில் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

பின்னர் அந்தக் குடியிருப்புப் பகுதியை நெருப்பிட்டுக் கொளுத்தினார்கள். அது முற்றாக எரிந்து விட்டது என்பதை உறுதி செய்த பின்னரே மோடியின் ஆட்கள் அவ்விடம் விட்டு அகன்றார்கள்.

இந்த குல்பர்க் சொசைட்டியை 2002 குஜராத் இனப்படுகொலையின் நிரந்தரச் சின்னமாக ஆக்கிக் காட்டிட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் டீஸ்டா செடல் வாட். இதற்காக அவர் மக்களிடம் நிதி வசூலித்து வருகின்றார். இதில் அவர் ஒரு கோடியே 51 லட்சம் ரூபாய் வசூலித்திருக் கின்றார்.

இந்தக் கணக்குகளையும் அவர் அவ்வப் போது வெளியிட்டு வருகின்றார். ஆனால், இந்தத் தொகையை மையப்படுத்தி மோடி யின் ஆட்கள் அவதூறுகளைப் பரப்பி வரு கின்றனர். ஓராண்டுக்கு முன் நயவஞ்சகன் ரெய்ஸ்கான் ஒரு புகாரைக் கொடுத்துள்ளார் டீஸ்டா செடல்வாட் மீது. இந்த ஒரு கோடியே 51 லட்சம்தான் மையக் கருத்து.

இந்தப் புகாரை குஜராத் காவல் துறையினர் அப்போது விசாரித்தார்கள். டீஸ்டா செடல்வாட் விளக்கங்களைத் தந்தார். புகார் உண்மையல்ல என்பதை ஏற்றுக் கொண்டு, புகாரை அன்று தள்ளுபடி செய்தார்கள்.

ஆனால், ஜனவரி 5, 2014 அன்று டீஸ்டா செடல்வாட் மீது ஓர் வழக்கை அதாவது முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்துள்ளார்கள். இதனை அவர் டீஸ்டா செடல்வாட் முறையாக நீதிமன்றங்கள் வழி எதிர்கொள்வதாக இருக்கின்றார். நாமும் அவருடன் நிற்போம் (இன்ஷா அல்லாஹ்).

### விநோதம்

இப்போது பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் டீஸ்டா செடல்வாட், அவருடைய கணவர் ஜாவித், குல்பர்க் சொசைட்டி குடியிருப்புப் பகுதியில் கொலை செய்யப்பட்ட இஹ்ஷான் ஜாபரியின் மாணவி சக்கிய ஜாஃபரி, அவருடைய மகன் தன்வீர் ஜாஃபரி ஆகியோர் மீதும் வழக்கு - முதல் தகவல் அறிக்கை - பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் இன்னொரு விநோதம் என்னவெனில், ஒரு வருடத்திற்கு முன், டீஸ்டா செடல்வாட் மீது சொல்லப்பட்ட புகார் பொய்யானது எனக் கூறிய காவல் துறை அதிகாரி எ.கே.சர்மா என்பவர்தான் இப்போது புகார் உண்மை எனக் கூறி முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்துள்ளார்.

### டீஸ்டா மீது வழக்கு ஏன்?

குல்பர்க் சொசைட்டி குடியிருப்பு கொலை வழக்கில் மோடி இன்னும் 62 பேர் மீதான வழக்கை நடத்தலாமா கூடாதா என்பதை முடிவு செய்ய ஆர்.கே.இராகவன் என்ற முன்னாள் புலனாய்வுத் துறையைச் சார்ந்தவரிடம் ஒப்படைத்தது உச்சநீதி மன்றம். (இதையும் மேலே குறிப்பிட் டிருந்தோம்.)

இவர் மோடி மற்றும் 62 மீது வழக்கு தொடர முடியாது என்றொரு அறிக்கையை குஜராத் கீழ் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். (இதுவும் உச்சநீதிமன்றம் அவரிடம் ஒப்ப டைத்த பணி.) இந்த அறிக்கைக்கு எதிராக தீர்க்கமான, தெளிவான ஆதாரங்களை முன்வைத்தார்.

ஆர்.கே. இராகவனின் பாசிச பம்மாத்து அறிக்கையை குஜராத் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அதாவது மோடி இன்னும் 62 பேர் மீது வழக்கு தேவையில்லை என்ற அறிக்கையை கீழ்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டதாக டிசம்பர் 23, 2013இல் அறிவித்தது.

கீழ்நீதிமன்றத்தின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து மோடியின் மீதும் இன்னும் 62 பேர் மீதும் வழக்கு தொடர்ந்தே ஆக வேண்டும் எனக் கோரும் மனு ஒன்றை உயர் நீதிமன்றம் கொண்டு செல்லப் போகின் றோம் என டீஸ்டா, சக்கிய ஜாஃபரி ஆகி யோர் அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்தே டீஸ்டா மீது முடிந்துபோன ஓர் விவகா ரத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இப்படி தன்னைக் காப்பாற்றிட பல்வேறு தகிடு தத்தங்களைக் கையாண்டு வரும் மோடியின் நிலத்தில் நீதி எப்படி கிடைக்கும்?

MGM

# மியான்மரில் மீண்டும் முஸ்லிம்கள் படுகொலை



**இந்தப் படுகொலைகளை** திடுதிப்பென புத்த பிட்சுகள் நடத்தியிருக்கின்றார்கள்.

தாக்குதல் திடுதிப்பென நடந்தாலும் நன்கு திட்டமிடப்பட்ட ஒன்று. ஜனவரி 9ஆம் நாள் நடுநிசியில் தொடங்கி ஜனவரி 13ஆம் நாள் வரை நடந்திருக்கின்றது.

இந்தத் தாக்குதல்கள் ‘டிவு சீ யார் நாம்’ (Duchee Yar Tam) என்ற மியான்மரின் ஒதுக்குப் புறமாக (மேற்குப் புறமாக) உள்ள கிராமத்தில் தான் நடந்திருக்கின்றன.

பௌத்த தீவிரவாதிகள், கத்தி, கம்பு, துப்பாக்கி இவற்றோடு கிராமத்தில் புகுந்தவுடன் கிராமத்திற்கு உள்ளே யாரும் புகுந்திடாமலும், கிராமத்திலிருந்து யாரும் தப்பித்து விடாமலும் இராணுவம் கிராமத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டது. கொலைகாரர்களைப் பாதுகாத்துக் கொண்டது.

அத்தோடு செய்தி கேள்விப்பட்டு மனித உரிமை அமைப்புகள் எதுவுமம் உள்ளே புகுந்து விடக் கூடாது என்பதும் நோக்கம்.

இதனால் ஜனவரி 9ஆம் நாள் தொடங்கிய படுகொலைகள் ஜனவரி 21ஆம் தேதி வரை வெளியே தெரியவில்லை.

**மனித உரிமை அமைப்புகள்**

அதன் பின் Fortify Rights என்ற ‘மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்பு’ இரகசியமாக உள்ளே நுழைந்து பல சடலங்களைக் கண்டுபிடித்து ஐக்கிய நாடுகள் சபைக்கு தகவல்களைத் தெரிவித்தது.

ஐக்கிய நாடுகள் சபை 48 உடல்களைக் கண்டுபிடித்ததாகக் கூறியது. இது ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர்களோ நிவாரணக் குழுவினரோ கண்டுபிடித்ததல்ல. மாறாக, Fortify Rights மனித உரிமை அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபைக்குத் தந்த தகவல்கள் தான்.

ஆனால், கொலை நடந்த கிராமத்திற்கு முதலில் சென்ற Mathew Smith – மேத்யூ ஸ்மித் என்ற மனித உரிமை ஆர்வலர் 280 பேர் கொலை செய்யப்பட்டிருந்தார்கள். பல நூறு பேர் காயம்பட்டிருந்தார்கள். மொத்த கிராமத்தையும் பின்னர் முழுமையாக ஆக்கிரமித்து விட்டார்கள். மேத்யூ ஸ்மித் அவர்கள் Fortify Rights என்ற மனித உரிமை அமைப்பை சார்ந்தவர். மனித உரிமை ஆர்வலர்கள் இனி முஸ்லிம்களைப் பக்கத்து கிராமத்தில்தான் தேட வேண்டும் என்ற நிலையில் அங்கு மிங்கும் தேடினார்கள். அக்கம் பக்கத்திலுள்ள கிராமத்தில் வாழ்ந்த முஸ்லிம்களும் இடம் பெயர்ந்திருந்தார்கள். அவர்களை அகதிகள் என அறிவிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை கோருகின்றது. ஆனால், மியான்மர் அரசு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்படி, இப்போது அகதிகள் ஆக்கப்படடவர்கள் 2,50,000 பேர்.

முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்ட செய்தியை வெளியே சொல்லிவிடக் கூடாது என்பதில் மியான்மர் அரசு உறுதியாக இருக்கின்றது.

மியான்மரில் – பர்மாவில் முஸ்லிம்களின் வரலாற்றை விரிவாக ‘வைகறை வெளிச்சம்’ செப்டம்பர் – அக்டோபர் 2012 இதழில் வெளியிட்டிருந்தோம். வாசகர்கள் அதனைப் படிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்கள் : abcnews.go.com

குஜராத், உத்திரப் பிரதேசம், அசாம், பர்மா ஆகிய பகுதிகளில் முஸ்லிம்கள் தொடர்ந்து வேட்டையாடப்பட்டு வருகின்றார்கள்.

MGM

# கலவர சூழலில் வண்ணாரப்பேட்டை முஸ்லிம்கள்



## நடந்தது என்ன?

நேரடி கள ஆய்வு

**திருச்சியில்** சமீபத்தில் நடைபெற்ற நரபலி மோடியின் மாநாட்டிற்குப் பிறகு தமிழக காவல்துறை முழுக்க முழுக்க காவித் துறையாக மாறிவிட்டது என்பதற்கு சமீ பத்தில் நடக்கும் அனைத்து சம்பவங் களும் கண்ணாடி சாட்சியாக விளங்குகின்றது. அவை திருச்சியில் நடைபெற்ற சம்பவத்தி லிருந்து 26-01-2014 அன்று பழைய வண்ணாரப் பேட்டையில் நடைபெற்ற நிகழ்வுகளும், அதற்கு அடுத்து நடக்கின்ற சம்பவமும், இதில் காவல்துறை எடுக்கும் நடவடிக்கைகளும் முஸ்லிம்களுக்கு எதிரா கவே இருக்கின்றன.

இந்தியா சுதந்திரம் அடைந்தது முதல் 2014 ஜனவரி 24 வரை, இந்த வண்ணாரப் பேட்டையில் எந்த ஒரு மதக் கலவரமோ, சண்டையோ இதுவரை ஏற்பட்டதில்லை. 2014 ஜனவரி 26 குடியரசு தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அந்தப் பகுதியில் செய்தி ஒன்று பரவியது. பாசிச சக்திகளின் ஒரு இயக்கமான விசுவ இந்து பரிசத்தினர் வண்ணாரப்பேட்டை முழு வதும் 5 இடங் களில் பெயர்ப் பலகைகள் திறக்கப் போவ தாகவும் மற்றும் கிளைகள் திறப்பதாகவும் மேலும் 1000 பேரை இறக்கி வண்ணாரப் பேட்டையில் கலவரம் செய்யப் போவ தாகவும் செய்திகள் பரவின. அதுவும் குடியரசு தினத்தன்று. இதையடுத்து முஸ்லிம் கள் பதற்றத்திற்கும் அச்சத்திற்கும் உள்ளா யினர். VHP-யினர் சென்னை முழுவதும் சென்று அழைப்பிதழ்களைக் கொடுத் தார்கள். மேலும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகித்தார்கள்.

வண்ணாரப் பேட்டை என்பது முஸ்லிம்கள் அதிகமாக வாழக் கூடிய பகுதி. எங்கு திரும்பினாலும் பள்ளிவாசல்கள். குறிப்பாக, லாலாகுண்டா என்ற பகுதியில் 98% பெரும்பான்மையாக முஸ்லிம்கள் உள்ளனர். முக்கியமாக அங்குதான் VHP-யினர் கிளை திறக்கப் போவதாகக் கூறினர். அதற்கான ஏற்பாடுகளும் நடந்தன. முஸ்லிம்கள் கொந்தளித்தனர்.

இதன் விளைவாக DCP நஜ்முல் ஹோதா என்ற அதிகாரியின் தலைமையில் இரு தரப் பினரிடையே அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் 10-க்கும் மேற்பட்ட நடவடிக்கைகள் முஸ்லிம்களுக்கு எதிராக காவல்துறையால் உருவாக்கப்பட்டன.

முஸ்லிம்களின் சார்பாக 15-க்கும் மேற் பட்ட நபர்களும் VHP சார்பாக 40க்கும் மேற்பட்ட நபர்களும் வடசென்னை H-5-DC அலுவலகத்தில் அமைதிப் பேச்சுவார்த் தைக்கு வந்தார்கள். DCP நஜ்முல் ஹோதா இது இரு சமுதாயத்திற்குக் கிடைத்த தோல்வியே ஆகும் என்றும், யாரும் அடிதடியில் ஈடுபடக் கூடாது என்றும் கூறினார்.

கீழ்வரும் சில நடவடிக்கைகள் இதில் கூறப்பட்டன:



1. அங்கு உறுதியாக கிளை திறக்கப்படும். அதற்கு காவல்துறை பாதுகாவல் கொடுக்கும்.

2. VHP கிளை திறப்புக்கு வண்ணாரப் பேட்டையைச் சேர்ந்தவர்களைத் தவிர வேறு யாரும் உள்ளே வரக் கூடாது. (ஏட்டளவில்)

3. அங்கு கலவரம் ஏற்பட்டால் இரு (வரில் ஒரு) பிரிவினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

4. VHP-யினர் முஸ்லிம்களையோ அவர்களின் மதத்தையோ இழிவாகப் பேசக் கூடாது.

5. 98% முஸ்லிம்கள் இருக்குமிடத்தில் VHP கிளை திறப்பு நடைபெறும். அந்நிலையில் VHP-யினர் தவறு செய்தாலும் முஸ்லிம்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,

6. சிறிய பிரச்னை கூட (VHP)-க்கு ஏற்படாமல் காவல்துறை பாதுகாவல் கொடுக்கும்.

7. சந்தேகத்திற்குரிய நபர்கள் யாரும் VHP கிளை திறப்புக்கு வரக் கூடாது. (முஸ்லிம்களைத் தவிர.)

8. வெளி நபர்கள் யாரும் வரக் கூடாது. மீறி வந்தால் தகவல் கொடுக்க வேண்டும்.

*காவல்துறை வாயளவிலும் செயல்ரீதியிலும் இந்துத்துவாவிற்கே துணைநிற்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. வண்ணாரப் பேட்டையில் கடந்த 2 வருடங்களாக ஏற்படுகின்ற சின்னச் சின்ன இந்து முஸ்லிம் பிரச்னைகளுக்கு முன்பிருந்த காவல் ஆய்வாளர் வீரகுமாரும் தற்போதுள்ள தேவராஜ் என்பவரும்தான் முக்கியக் காரணம்.*



உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

9. 10 மணிக்கு மேல் எந்த அலுவலகங்களும் கடைகளும் திறந்திருக்கக் கூடாது.

இன்னும் சில தீர்மானங்களும் கூறப்பட்டன. இறுதியில் யார் தவறு செய்தாலும் தவறு செய்பவர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். மேலும், குற்றம் செய்பவர்கள் மட்டுமே தண்டிக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள் முஸ்லிம் சமுதாயத்தினர்.

DCP நஜ்முல் ஹோதா, "எனக்கு உங்கள் அனைவரையும் விட அதிகமான அதிகாரம் உள்ளது. நான் சொல்வதைக் கேட்டு நீங்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றும் முஸ்லிம்கள் அதிகமாக வாழக் கூடிய பகுதியாக இருந்தாலும் அனைத்து முஸ்லிம்களும் எதிர்த்தாலும் அங்கு VHP-யின் கிளை திறக்கப்படும் எனவும் VHP-யின் கிளை திறப்பது ஜனநாயக உரிமை என்று கூறி தனது இந்துவெறியைக் கொட்டினார் அந்த அதிகாரி.

முஸ்லிம்கள் தரப்பில் அதை எதிர்ப்பதும் ஜனநாயக உரிமை என்றும் கூறப்பட்டது. ஆனால், DCP அதை கண்டுகொள்ளவில்லை.

1. VHP-யினர் காவல்துறையின் தீர்மானங்களுக்கு ஒப்புக் கொள்ளவில்லை. வெளி நபர்கள் வருவார்கள். அதை யாரும் கட்டுப்படுத்தக் கூடாது என்றனர்.

2. எந்த ஒரு இந்து கலவரம் செய்தாலும் அதற்கு VHP பொறுப்பு ஏற்காது.

3. காவல்துறையின் தீர்மானத்திற்கு நாங்கள் உடன்பட மாட்டோம் என்றும் கூறி

கூப்பாடு போட்டுக் கொண்டே இருந்தனர்.

இறுதியில் கத்திக் கொண்டே கலைந்து சென்றார்கள்.

26-01-2013 அன்று வண்ணாரப் பேட்டை அதுவும் பார்த்தசாரதி பிள்ளை தெரு பகுதியில் கடுமையான பதற்றம் காவல் துறையின் குவிப்பு என அமர்க்களம் ஏற்பட்டது. காலை பத்து மணியளவில் VHP-யின் நிர்வாகிகள் வேதாந்தம் மற்றும் சில எடுபிடிகள் கார்களில் வரத் தொடங்கினர்.

முஸ்லிம் முஹல்லாவின் உள்ளே நுழைந்தனர். 300-க்கும் மேற்பட்டோர் காவல்துறையினர் உதவியோடு பள்ளி வாசலைத் தாண்டும் இடம் வந்ததும் காவல் துறையினர் முன்பாகவே கத்திகளையும் அரிவாள்களையும் தூக்கிக் காட்டி கோசம் எழுப்பினார்கள். மேளம் அடித்து முஸ்லிம் களையும், முஸ்லிம்களின் மதத்தைப் பற்றியும் சரமாரியாக வாய்க்கு வந்தபடி திட்டி னார்கள். குடித்து விட்டு போதையில் நிறைய பேர் பேசினார்கள். அந்தச் சமயம் அங்கு காவல்துறை ஆய்வாளர்கள் H1- தேவராஜ், H4- பாண்டி மற்றும் H5, H6 போன்ற காவல் நிலையத்தைச் சேர்ந்த அனைத்து போலீ சாரும் துணை ஆய்வாளர்களும் இருந் தார்கள். ஆனால், ஒருவரையும் கைது செய்ய வில்லை ஆயுதங்களைக் காட்டி ஆட்டம் போட்ட ஒருவரையும் கைது செய்யவில்லை. ஆனால், முஸ்லிம்களை மட்டும் அடக்கி கட்டுக்குள் வைத்துக் கொண்டார்கள்.

இதற்கிடையில் ஒரு முஸ்லிம் சகோதரர் இந்து தீவிரவாதிகளால் இரும்பு ஆயுதத்தால் தாக்கப்பட்டார். அதனால் காலில் பலத்த காயம் ஏற்பட்டது.

இரு முஸ்லிம்கள் தனியாக மோட்டார் வாக னத்தில் வரும் போது அறிவாலால் வெட்ட முயற்சி செய்தனர் இந்து தீவிர வாதிகள். அவ்விரு முஸ்லிம் சகோதரர்களும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

மருத்துவமனைக்குச் சென்றால் அங்கு எங்களைத் தொடர்பு கொள்ளாமல் முஸ்லிம் களை அனுமதிக்கக் கூடாது என காவல் துறையால் கூறப்பட்டு விட்டது. இறுதியாக VHP-யினர் வந்தார்கள். அவர்களுடன் காவல் துறை துணை நின்றது. அவர்கள் வந்த காரியம் முடிந்தது. பாதிக்கப்பட்ட முஸ்லிம் களுக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. எந்த ஒரு VHP-யினரும் கொலை முயற்சி செய்தவர்களும் கைது செய்யப்படவில்லை காவித்துறையால்.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால் காவல்துறை வாயளவிலும் செயல்ரீதியிலும் இந்துத்துவாவிற்கே துணைநிற்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த வண்ணாரப் பேட்டையில் கடந்த 2 வருடங்களாக ஏற்படு கின்ற சின்னச் சின்ன இந்து - முஸ்லிம் பிரச்னைகளுக்கு முன்பிருந்த காவல் ஆய்வாளர் வீரகுமாரும் தற்போதுள்ள தேவராஜ் என்பவரும்தான் முக்கியக் காரணம். இந்த சூழ்நிலையில் இவர்கள் (VHP) கிளை திறந்தால் பிரச்னை ஏற்படும் என்றும் சட்ட சீர்குலைவு ஏற்படும் என்றும் பல முறை தேவராஜிடம் எழுத்து ரீதியாகவும் பேச்சு ரீதியாகவும் புகார்கள் கொடுக்கப்பட்டன முஸ்லிம் சமுதாயத்தினரால். அதற்கவர் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. இதனிடையே குடியரசு தினத்துக்கு முன்பு VHP-யைச் சேர்ந்த (விஜி) என்பவன் வண்ணாரப் பேட்டையைச் சேர்ந்த, கோல்டு ரஃபி என்ற சகோதரரைக் கொலை செய்ய முயற்சி செய்திருக்கிறான். அங்குள்ள முஸ்லிம்கள் அவனைப் பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்த போது காவல்துறை வாக னத்தில் உட்கார்ந்து கொண்டு விஜி என்ப வன் திமிராகக் கூறினான்: “26-1-14 அன்று கோல்டு ரஃபியை கண்டிப்பாக கொலை செய்வேன்” என்று கர்ஜித்து முழக்கமிட் டான். அவன் மீது எந்தவிதமான வழக்குப் பதிவு செய்யவில்லை காவல் துறையினர். பிறகு யாருக்கும் தெரியாமல் அவனைப் பின்புறமாக அனுப்பி விட்டனர். இதை முஸ்லிம்கள் கேட்டதற்கு, ‘‘அவன் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டுமென்றால் முதலில் உங்கள் மீது வழக்குப் பதிவு செய்வோம்” என்று வண்ணாரப் பேட்டை காவல்துறையினர் மிரட்டலாகக் கூறினர்.

மேலும், விஜி என்பவன் மீது ஏன் வழக்கு பதிவு செய்யவில்லை என்று ACP-யிடம் கேட்டபோது அவர் கூறினார்: “விஜியின் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றால் நான் உங்கள் மீதும் வழக்குப் பதிவு செய்வேன்” என்றும் “விஜி என்பவன் கோல்டு ரஃபியை கொலை செய்வேன் என்று கூறியது உண்மைதான். அதற்கு நானே சாட்சி என்றும், அதை எங்கு வேண்டுமானாலும் கூறுவேன். ஆனால், அவன் மீது வழக்கு பதிவு

செய்யச் சொன்னால் முஸ்லிம்களாகிய நீங்கள் விஜியை போலீஸ் வாகனத்தில் வைத்து அடித்து உதைத்தீர்கள் என்று உங்கள் மீது பொய் வழக்கு போடுவேன்" என்றும் கூறினார். இதற்கு ஆதாரம் H5 காவல் நிலைய DC அலுவலகத்தில் நடைபெற்ற அமைதிப் பேச்சு வார்த்தையின் போது எடுத்த வீடியோ உள்ளது. காவல் துறையின ரால் எடுக்கப்பட்டது.


விசுவ இந்து பரிசத் தலைவர் வேதாந்தம் கலவரத்தைத் தூண்டும் வகையில் தினமலர் நாளிதழுக்கு பேட்டி கொடுத்துள்ளார். அதில், "இந்துக்களை வீட்டை விட்டு யாரும் வெளியே வர வேண்டாம் என்று என் கழுத்தை நெறிக்கும் விதத்தில் காவல்துறை கூறியது. மேலும் அப்படி வெளிவந்தால் முஸ்லிம்கள் என் கழுத்தை அறுத்து விடுவ தாகவும் சொன்னார். இப்படி உண்மைக்குப் புறம்பாகப் பேட்டி அளித்துள்ளார். முழு போலீஸ் பாகாப்போடு இருந்த ஒருவரை கழுத்தை நெறித்ததாக சொல்லி போலிசை கேலிக் கூத்தாக ஆக்கி கலவரத்தை மேலும் வளர்க்க பேட்டி அளித்துள்ளார்.

இந்த நிகழ்வின்போது படமெடுத்த பத்திரிகைத் துறையினரை VHP-யினர் தாக்கி யதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தத் தாக்குதல் பிரச்னையை திசை திருப்பும் முயற்சியாக VHP-யினர் பயன் படுத்திக் கொண்டனர் என முஸ்லிம்கள் தரப்பில் பரவலாகப் பேசப்படுகிறது.

**T.பௌஷத் கரீம் B.Com., மற்றும்**
**சென்னையிலிருந்து நமது நிருபர் குழு**


## இப்போது பரபரப்பான விற்பனையில்



**பாபரி மஸ்ஜித் :**
**அடிப்படை தகவல்கள்**

**விரிவாக்கப்பட்ட**
**3ஆம் பதிப்பு –**
**அதிக தகவல்களுடன்**

பாபரி மஸ்ஜித் பற்றிய
முழு விவரங்களுடன்

அலகாபத் நீதிமன்ற
தீர்ப்பு பற்றி
வழக்கறிஞர்களின்
வாதங்களுடன்

**விலை ரூ. 90/-**

**இஸ்லாமிய நாகரிகம்**

விரிவாக்கப்பட்ட
3ஆம் பதிப்பு –
அதிக தகவல்களுடன்

கொள்கை ரீதியாக
இருந்த இஸ்லாம் எப்படி
நடைமுறை வாழ்க்கை
தத்துவமாகவும் ஆட்சி
செய்தது என்பதை
விளக்கும் நூல்!

சகோதரத்துவ சமுதாயத்தை
சார்ந்தவர்களுக்கு
தருவதற்குச் சிறந்த நூல்!

**விலை ரூ. 130/-**



**பாலஸ்தீன**
**முஸ்லிம்கள்**
**அகதிகளான வரலாறு**

பாலஸ்தீனத்திலுள்ள
பூர்வீகக் குடிகளான
முஸ்லிம்கள் எப்படி
அகதிகளாக்கப்
பட்டார்கள்?

சர்வதேச
தீவிரவாதத்தின்
குறகிய வரலாறு

**விலை ரூ. 110/-**

வெளியீடு : **வேர்கள் பதிப்பகம், 52/1, மண்ணடி, 4வது தளம், சென்னை-1. போன் : 94442 39592**

# நாடெங்கும் ‘காமத்துப்பால்’

டெல்லியில் ஒரு பெண் (புனைபெயர் நிர்பயா) கற்பழிக்கப்பட்டாள். நாடெல்லாம் அல்லோல கல்லோலப் பட்டது.

குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்திட வேண்டும்; தண்டிக்க வேண்டும்.

ஆனால் மனிதப் பிணம் தின்னும் நமது உள்துறை அமைச்சருக்கு அந்தப் பொறுமை கூட இல்லை. முக்கிய குற்றவாளியை திகார் சிறையிலேயே வைத்து அடித்துக் கொன்றார். சிறையிலேயே கட்டித் தூக்கினார்.

அதிலிருந்து பாலியல் குற்றங்களுக்கு பலமான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்ற போர்ப்பாட்டுகள் எங்கனும் எழுந்தன.

பின்னர் உச்சநீதிமன்ற நீதிபதி A.K.கங்குலி தன்னிடம் பயிற்சிக்கு வந்த பெண் வழக்கறிஞரிடம் தகாத முறையில் நடந்து கொண்டார். அவர் மேற்குவங்க மனித உரிமைக் கழகத்தில் தலைவராக இருக்கின்றார்.

பின்னர் இன்னொரு நீதிபதி, குடி போதையில் தன்னிடம் பயிற்சிக்கு வந்த பெண்ணிடம் முதலில் குடியரங்கத்தில் நெருங்கினார். அவரது ‘காமத்துப் பால் பிடி’யிலிருந்து தப்பித்திட அந்தப் பெண் அரங்கத்தை விட்டு ஓடினார். ஆனாலும், விடாமல் விரட்டினார்.

எதிர்காலத்தில் இந்தியாவின் ஆட்சியைப் பிடிக்க ஆப்கோ நிறுவனத்தின் மூலம் ஆயிரக்கணக்கான கோடிகளைக் கொட்டி நிற்கும் நரேந்திர மோடி ‘பெண் போனால் அவள் பின்னாலே என் கண் போகும்’ என்றொரு புதிய விதியை வகுத்தார். விசாரணையை அறிவித்திட வேண்டிய அளவுக்கு அங்கே காமத்துப்பால். (பார்க்க தனிக்கட்டுரை)

ஓர் எதிர்க்கட்சிக்கு இணையாகப் பணியாற்றிய பத்திரிகை தெஹல்கா. அதன் ஆசிரியர் தேஜ்பால் - அவர் தன்னிடம் பணியாற்றிய பெண் பத்திரிகை யாளரிடம் தகாத முறையில் நடந்து கொண்டார் என்றொரு குற்றச்சாட்டு. அவர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுக் கிடக்கின்றார்.

கஷ்மீரில் குனான் போஷ்புராவில் நமது இராணுவமே ஒரு பெரும் கற்பழிப்பை நடத்தியது. இன்றளவும் அந்தப் பெண்களுக்கு நீதி கிடைக்க வில்லை.

இவை அல்லாமல் தினம் தினம் நடக்கும் கற்பழிப்புகள், அதன் பின் கொலைகள், இவற்றைப் பட்டியல் போட்டால் ஏடு தாங்காது.

இப்படி ஓர் அசிங்கமான நாடாக நம் நாடு மாறி வருகின்றது.

அமெரிக்காவில் ஐந்து பெண்களில் ஒருத்தி கற்பழிக்கப்பட்டவளாக இருக்கின்றாள் என்ற தகவல் அண்மையில் ஊடகங்களை உலுக்கிற்று. அந்த நிலைக்கு வந்து விட்டோமா? என்ற வினாவை விடுத்திட வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

இந்த அளவுக்கு பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிட்டது. உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளிடமே பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றால் இந்த நிலையை என்னவென்பது? நீதியை எங்கே தேடுவது?

நீதிபதிகளுக்கு ஓர் மமதை இருக்கலாம். அது நம்மை யாரும் தண்டித்திட இயலாது என்பதே!

அப்படித்தான் ஓய்வு பெற்ற நீதிபதியின் வழக்கும் முடிந்தது. முதலில் தண்டித்தே தீருவோம் என்ற உச்சநீதிமன்றம் நாங்கள் அவரை எதுவும் செய்திட முடியாது. டெல்லி காவல்துறைதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கையை விரித்தது. அடுத்து இன்னொரு உச்சநீதிமன்ற நீதிபதி மீது இதே போல் ஓர் வழக்கு!

மொத்தத்தில் நீதிபதி மீது நடவடிக்கை இல்லை.

மேலே நாம் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகளிலிருந்து இரண்டொரு விஷயங்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

ஒன்று பெண்கள், நாங்கள் எங்கள் விருப்பம் போல் நடப்போம். எங்களைச் சீண்டும் அளவில் கூட நாங்கள் நடப்போம். அது எங்கள் உரிமை எனப் பேசுவதும், நடைமுறை வாழ்க்கையில் அப்படியே நடப்போம் எனப் பேசுவதும் பேதமை.

அதே போல் ஆண்கள் நாட்டுப் புறத்தானிலிருந்து உச்சநீதிமன்ற நீதிபதி வரை உள்ளத்தால் அழுகிப் போய் இருக்கின்றார்கள் என்பது தெளிவு.

அடுத்து, ஆட்சியும் அதிகாரமும் நாட்டுப்புறத்தானை உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்கிறது. ஆனால், உயர் பதவிகளில் இருப்பவர்களின் பக்கத்தில் கூட செல்வதில்லை. இது அப்பட்டமான அநீதி.

இந்த நிலை போக்கப்பட்டாக வேண்டும். ஒன்று, பெண்கள் மிகவும் கவனமாக, தங்களை முழுமையாக மறைத்துக் கொள்ளும் ஆடைகளை அணிந்திட வேண்டும்.

இரவின் பிந்தைய வேளை வரை சுற்றித் திரிந்திடக் கூடாது. அதன் மூலம் நெறி தவறிய ஆண்களுக்குப் பலியாவதிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும்.

ஆண்கள் பெண்களிடம் தவறாக நடந்திட்டால் தரப்படும் தண்டனை அதற்குத் தகுந்தாற்போல் அமைந்திட வேண்டும். சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்பது நம் நாட்டில் இல்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

வெறும் தண்டனையும் தற்காப்புகளும் மட்டுமே பெண்களுக்குப் பாதுகாப்பைத் தந்திட இயலாது.

இந்த நிலை சீர்பெற்றிட வேண்டும்.

மக்களுக்கு வழங்கப்படும் கல்வி, சமுதாயத்தில் நிலவும் புறச் சூழல்கள் இவையெல்லாம் மாற்றப்பட வேண்டும்.

தற்போது நாம் வழங்கிக் கொண்டிருக்கும் கல்வி நாம் வளர்த்து வரும் கலாச்சாரம் முதற்கொண்டு அத்தனையும் மனிதர்களை மிருகங்களாக மாற்றிவிட்டது. கிடைப்பதையெல்லாம் வாரிச் சுருட்டிக் கொள்ள வேண்டும். காண்பதை அனுபவித்திட வேண்டும் என்ற எண்ணங்களையும் சிந்தனைகளையும் நிலைகொள்ளச் செய்து விட்டது. இந்த சிந்தனைப் போக்கில் ஆண், பெண் பேதமில்லை.

இதனால், ஆண் மிருகமாக மாறிப் போனான். இதற்கு உச்சநீதிமன்ற நீதிபதிகளே விதிவிலக்கல்ல என்றாகிவிட்டது.

மனிதனை மிருக நிலையிலிருந்து மாற்றிடவே அவனைப் படைத்த இறைவன் அவனுக்கு வேதங்களை வழங்கி, ஞானத்தைக் கற்றுத் தந்தான். இந்த

*உலகில் அவன் எப்படி வாழ்ந்திட வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டிட அவனிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்தான். அவர்களே இறைவனின் தூதர்கள்.*

*அவர்கள் வழி அவன் மனித இனத்திற்கு வழங்கிய அறுதி வேதம் அல்குர்ஆன்; அறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள்.*

*இந்த இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இதே போல் ஒழுக்கக் கேடுகளில் வீழ்ந்து கிடந்த சமுதாயத்தினரிடையேதான் அனுப்பப்பட்டார்கள். அந்த மக்கள் பெண் குழந்தைகளை அவமானச் சின்னங்கள் என நினைத்து உயிரோடு புதைத்தார்கள்.*

*ஒருவர் எத்தனை பெண்களிடம் உடல் உறவு வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு வரையறையே இருக்கவில்லை.*

*மதுவும், மங்கையும் வாழ்க்கை என்றே அவர்கள் வாழ்ந்தார்கள். இந்த நிலையில்தான் இறைவன் தன் வழிகாட்டுதலின் வழி இறைவன் இருக்கின்றான் என்பதையும், மனிதனின் வாழ்க்கை இந்த உலகத்தோடு முடிந்துவிடாது. அவன் நிச்சயம் மரணிப்பான். அந்த நிலையில் அவன் மீண்டும் இறைவன் முன் கொண்டுவரப்படுவான். அவன் இந்த உலகில் எப்படி வாழ்ந்தான் என்பது குறித்து நிச்சயமாக விசாரிக்கப்படுவான்.*

*தன்னுடைய எல்லாச் செயல்களுக்கும் இறைவனிடம் பதில் சொல்லிட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தினான். இந்தப் பின்னணியில் சமுதாயம் முற்றாக மாற்றி அமைக்கப்பட்டது. மனிதன் நீதி நெறிப்படி வாழ்ந்தான் என்றால் வெற்றி பெற்றவனாக சுவர்க்கம் புகுவான். இல்லையேல் தண்டிக்கப்பட்டவனாக வெந்நரகம் புகுவான்.*

*காட்டுமிராண்டித்தனமாகவும், கரடுமுரடாக வாழ்ந்த அந்த மக்கள் 23 ஆண்டுகளுக்குள் இறைவனின் இறுதித்தூதர் (ஸல்) அவர்கள் இறைவழி காட்டுதலின்கீழ் அகிலத்திற்கே வழிகாட்டும் ஒளிவிளக்குகளாக ஆக்கிக் காட்டினார்கள்.*

*இந்த வேதமும் அண்ணலெம்பெருமானாரின் வாழ்வும் வாக்கும் நம்மிடையே புழக்கத்தில் அப்படியே இருக்கின்றது.*

*அதனை அப்படியே பின்பற்றினால் நாமும் அத்தகையதொரு சமுதாயமாக, மனிதர்களைப் புனிதர்களாக மாற்றிக் காட்டலாம். அகிலத்திற்கே வழிகாட்டும் நாடாக நம் நாட்டை மாற்றலாம். 1400 ஆண்டுகளுக்கு முன் எந்த ஊடக வசதி யுமில்லாத நாட்களில் அதைச் செய்து காட்ட முடியும் என்றால் இன்று எல்லா ஊடக வசதியும் உள்ள நாட்களில் விரைந்தே செய்து காட்டலாம்.*

*மனமிருந்தால் மார்க்கமுண்டு; இல்லையேல் அழிவு நிச்சயம்.*

*அதை நோக்கியே நாடு போய்க் கொண்டிருக்கின்றது.*

**(நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களே! நிச்சயமாக உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு சத்திய(வேத)ம் வந்துவிட்டது; எனவே யார் (அதைப் பின்பற்றி) நேரான வழியில் செல்கிறாரோ அவர் தம் நன்மைக்காகவே அந்நேர்வழியில் செல்கின்றார்; எவர் (அதை ஏற்க மறுத்து) வழி தவறினாரோ, நிச்சயமாக அவர் தமக்குக் கேடான வழியிலே செல்கிறார்; நான் (உங்களைக் கட்டாயப்படுத்தி) உங்கள் காரியங்களை நிர்வகிக்க அதிகாரம் பெற்றவனல்லன். (அல்குர்ஆன் 10:108)**

---

**அன்பான வாசகர்களுக்கு! வைகறை வெளிச்சம் – டிசம்பர் 2013 இதழில் வெளிவந்த தலையங்கத்தோடு இந்த தலையங்கத்தையும் சேர்த்து படிக்க அன்போடு வேண்டுகிறோம்.**